
ஜூன் 14 - 20, 2004 24 பக்கங்கள் 16.00



# நடந்தது என்ன?

# ஜே.வி.பியின் தலைவர்களுக்கு ஓர் திறந்த மடல்!

புரட்சிக்கரமான வணங்கங்கள்.

தேசத்தின் விடுதலைக்காய் நீங்களும் ஆயிரக்கணக்கானவர்களை பலி கொடுத்துள்ளீர்கள் என்றவகையில் உங்களுக்கான எனது வணக்கம் புரட்சிகரமானதாக இருக்கட்டும்.

உங்களது புரட்சிகர இயக்கத்தை முதன் முதலாக ஆரம்பித்த சமயம் நாடாளுமன்றத்துப் பிரதிநிதித்துவம் பற்றிய பிரச்சினைகள் உங்களுக்கு இருக்கவில்லை.

மாறாக, அதனைக் கேள்விக்குட்படுத்தி, சமவுடமை அடிப்படையிலான அரசொன்றை நிர்மாணிப்பதற்கான ஆட்சி முறையிலேயே அதிக ஈடுபாட்டைக் கொண்டிருந்தீர்கள்.

மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாசாவினது நவடிக்கைகள் உங்கள் கட்சியின் இருப்பின் மீதும், வாழ்வின் மீதும் ஏற்படுத்திய தாக்கங்கள் உங்களை ஜனநாயக வழிமுறை மீது கவனம் செலுத்தும்படி நிர்ப்பந்தங்களை கொடுத்திருந்தன.

நிகழ்காலத்திற்கு வருகின்றேன்.

2001 ஆம் ஆண்டுக்குப்பிறகு அடுத்தடுத்து நடைபெற்ற தேர்தல்கள் உங்கள் வளர்ச்சிக்கு மிகவும் அடித்தளமிட்டுக் கொடுத்திருக்கின்றன என்றுதான் நான் சொல்வேன்.

பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் – ஐக்கிய தேசியக்கட்சிக்கும் இடையே இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக இருந்து வந்த கட்சி மோதல்கள் உங்களுக்கு வசதியாகப் போய்விட்டது என்னவோ உங்களுக்கு அதிர்ஷ்டம்தான்.

பிந்தியதாக, நாட்டின் தலைவிக்கும், அவரது கட்சிக்கும் விடுதலைப்புலிகள் தொடர்பாக நீங்கள் விடுத்துவரும் சவால்கள், மிரட்டல்கள் உங்கள் அரசியல் அரங்கை பரபரப்பானதாக ஆக்கிவிட்டிருப்பது உங்களுக்கு மேலும் வாய்ப்பைக் கொடுத்திருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

இடைக்கால நிர்வாகம் தொடர்பாக இப்போது நீங்கள் சர்வதேச சமூகத்துடனும் பேசி அதற்கு முடிச்சுப்போடும் அளவுக்கு துணிந்துவிட்டீர்கள். காரியம் கை கூடுகிறதோ இல்லையோ நீங்கள் இதில் பிரபல்யம் ஆகிவிட்டீர்கள் என்பது மட்டும் உண்மை.

சமாதானப் பேச்சுக்களிலும், யுத்தநிறுத்தக் கண்காணிப்பு நடவடிக்கைகளிலும் மேற்குலகத்தின் பிரசன்னத்திற்குப் பதிலாக ஆசிய நாடுகளின் பிரதிநிதித்துவத்தை வலியுறுத்தியிருக்கிறீர்கள்.

குறிப்பாக இந்தியாவின் பிரசன்னத்தை நீங்கள் விரும்புவதாகத் தெரிகிறது.

கடந்தகாலங்களில் உங்களது அரசுக்கெதிரான கிளர்ச்சியின்போது இந்திய அரசு உங்களுக்கு போட்ட அடிகளின் தழும்புகள் மறைந்து, அதனை நீங்களும் மறந்துவிட்டீர்கள் போல் தெரிகிறது.

அல்லது, இனி நாங்கள் ஒருபோதும் அரசுக் எதிராக தீவிரவாதிகளாக கனவிலும் மாறமாட்டோம் என்ற துணிவில் இந்தியாவை அழைக்கிறீர்களோ என்றும் நான் சிந்திக்கிறேன்.

எப்படியென்றாலும் வாங்கிய அடியை நீங்கள் மறக்க முயற்சிப்பது அவ்வளவு நல்லதாக எனக்குப் படவில்லை.

உங்களுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் எழும் சச்சரவுகள் பற்றி இரண்டு வரிகள் எழுதவேண்டும்.

உண்மையில் உங்களுக்கும் ஜனாதிபதிக்கும் பிரச்சினைகள் உண்டா? அல்லது இருவரும் திட்டமிட்டு, நான் அடிப்பது போல் அடிக்கிறேன் நீயும் அழுவது போல் அழு என்று ஏதாவது நாடகமாடுகிறீர்களா? என்பதில் எனக்கு சந்தேகம்.

பதிலுக்கு ஹெல உறுமயவினர் தாங்கள் தான் புலிகளை எதிர்ப்பதில் நேர்த்தியாக இருப்பதாகவும் நீங்கள் ஏதோ கோழைத்தனமாக புலிகளை புரிந்து கொண்டிருப்பதாகவும் எப்போதும் உங்களைப்பற்றி நச்சரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

என்னவோ, புலிகளை எதிர்க்கும் விடயத்தில், தர்ம ராஜ்ஜியம் பற்றிய பொக்கிஷமொன்றை அவர்கள் கையில் வைத்திருக்கின்றார்கள்.

அந்த ராஜ்ஜியத்தை அடையும் வழிகளை பற்றி தங்களிடம் நீங்கள் சென்று அடி பணிந்து அது பற்றி கேட்டுத்தெரிந்து கொள்ளவேண்டுமென ஹெல உறுமயவினர் விரும்புகிறார்களோ தெரியவில்லை.

ஹெல உறுமயவினருடன் நீங்கள் முரண்படுவது உங்கள் கட்சியின் வளர்ச்சிக்கு வாய்ப்பாக இருகின்ற போதும், அவர்களுடன் ஒற்றுமையாகப் போய் இரகசியமாச கேட்டால் தங்களிடமுள்ள மூடு மந்திரத்தை அவர்கள் உங்களுக்கும் சொல்லித் தரலாம்.

சில சமயம் அது, இப்போது உங்களிடம் உள்ள புலிகள் எதிர்ப்புக் கோஷத்தினூடான உங்கள் வளர்ச்சியை விட இன்னும் மேலான வளர்ச்சிக்கு அது உதவலாம். எனவே, ஹொல உறுமயவினருடன் புலிகள்விடயத்தில் இணங்கிப் போய் அவர்களின் பொக்கிஷத்திற்குள் என்ன இருக்கிறது என்று பாருங்கள்.

தற்போது நோர்வே தரப்பினரையும் விரட்டி அனுப்பி விட்டீர்கள். அவர்கள் சென்றுவிட்டதன் பின்பு சமாதானப் பேச்சுக்களும் நின்று விட்டன.

இப்போது எதிர்ப்பதற்கு ஒன்றுமில்லாமல் நீங்கள் தடுமாறுவது போல் எனக்



குப்படுகிறது. ஜனாதிபதியும் அடங்கிப் போய் இருக்கிறார்.

கடந்த வாரம் நீங்கள் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதம் ஒன்றில், மக்களின் எதிர்பார்ப்புக்கு மாறாக நடந்தால் ரணில் அரசுக்கு ஏற்பட்ட கதிதான் உங்கள் கட்சிக்கும் ஏற்படும் என ஜனாதிபதியை எச்சரித்திருக்கிறீர்கள். நல்ல விஷயம். ஆனால். இது விடயத்தில் நீங்கள் பச்சோந்திகள் என்றுதான் நான் சொல்வேன்.

உங்களுக்கு ஜனதிபதியின் அரசாங்கத்தை கவிழ்க்க விருப்பம். ஆனால் உங்களது அமைச்சுப் பதவிகளுக்கும் நாடாளுமன்ற ஆசனங்களுக்கும் பங்கம் ஏற்பட்டு விடக்கூடாது என்று யோசிக்கிறீர்கள்.

நீங்கள் சரியான செயல்வீரர் என்றால் முதலாவது நாடாளுமன்ற அமர்வைத் தொடர்ந்து ஜனாதிபதி நோர்வையை சமாதானப் பேச்சுக்காக அழைத்தபோது அரசில் இருந்து வெளியேறி இருக்கவேண்டும்.

அதற்குப்பின் கதிர்காமர் இந்தியா சென்று புலிகளை ஏகப்பிரதிநிதிகளாக ஏற்றுக் கொண்டார், பிறகு உங்களுக்குத் தெரியாமல் ஜனாதிபதியும் ரணிலும் தங்களுக்குள் பேசி பிரதிசபாநாயகரையும் .குழுக்களின் பிரதித் தலைவரையும் நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்தனர் அச்சமயத்திலாவது நீங்கள் வெளியேறி இருக்க வேண்டும்.

இப்படி பல சம்பவங்கள் நடந்து விட்டன. இப்போது அவை எனக்கு ஞாபகத்தில் இல்லை.

இணக்கமான அரசியலில் உங்களுக்கிருக்கும் நாட்டத்தை விட எதிர்ப்பு அரசியலில்தான் உங்களுக்கு அதிக நம்பிக்கை இருப்பதாக எனக்குப்படுகின்றது. கடந்த 2ம் திகதி பிரஸல்ஸில் நடைபெற்ற இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்தில் சமாதான சூழலை உறுதிப்படுத்திய பின்தான் பணம் தரப்படும் என்று சர்வதேச சமூகமும் உங்களுக்கு கைவிரித்து விட்டது.

பல சச்சரவுகளின் மத்தியில் ஜனாதிபதியிடம் இருந்து பெற்றுக் கொண்ட 4 அமைச்சுக்களின் மூலமாக மேன் மேலும் உங்களை வளர்த்துக் கொள்ளலாம் என்ற நப்பாசையில் அதனைப் பெற்றுக் கொண்டீர்கள்.

உதவிக்கு வெளிநாடுகள் கைவிரித்து விட்ட நிலையில் அரச ஊழியர்களின் மாதச் சம்பளத்துக்கே அரசு திண்டாடுகின்ற நிலமையை நீங்களே ஏற்படுத்திய பிறகு உங்கள் அமைச்சுப்பணிகளுக்கு ஏது பணம்?

அரசின் கோப்பையை தட்டி வீழ்த்தப்போய் இப்போது உங்கள் கோப்பையில் இருந்த சோறும் நிலத்தில் கொட்டிவிட்டது போன்ற நிலமையைத் தான் நீங்கள் ஏற்படுத்தியுள்ளீர்கள்.

ஏதோ தற்செயலாக சமாதானப் பேச்சுக்களின் போது இறுதித் தீர்வுபற்றியும் பேச வேண்டுமென ஜனாதிபதி கூறியதற்கு இணங்காமல் புலிகள் இருப்பதைச் சாட்டாகக் கொண்டு பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்டிருப்பது உங்களுக்கு சோர்வாகத் தான் இருக்கிறது என்பதும் எனக்குத் தெரியும்.

புலிகள் கோரும் இடைக்கால நிர்வாக சபைக்கு மாற்றீடான நிர்வாக முறையொன்றை வடக்கு கிழக்கிற்குக் கொண்டு வருவதன் மூலம் வெளிநாடுகளில் பணம் கறக்கும் முயற்சிகளில் ஜனாதிபதி இறங்கியிருப்பதில் உங்களுக்கும் சம்பந்தமிருக்காது என்பதை நான் நம்பப் போவதில்லை.

கடந்தவாரம் தனதுவிசேட செயலகம் ஒன்றை வடக்கில் ஜனாதிபதி ஏற்படுத்தினார், கடந்த அரசின் காலத்தில் செய்யப்படவேண்டிய வேலைகள், இன்றும் செய்யப்படாது இருப்பதாகபுதிய கண்டு பிடிப்பொன்றை உங்கள் அரசங்கம் வெளியிட்டது.

இப்போது, வடக்கு கிழக்கு மாகாணசபையை தமிழ் மக்களின் அபிவிருத்திக்கும், மேம்பாட்டுக்குமாக செயற்படுத்துவதாக கூறி வெளிநாடுகளிடம் பணம் வசூலிக்கும் முயற்சியில் ஜனாதிபதி இறங்கியிருக்கிறார். ஆனால் இதுபற்றி நீங்கள் வாய் எதும் திறக்காமல் இருப்பது எனக்கு சந்தேகமாக இருக்கிறது

இப்போது எதுவும் பேசமாட்டீர்கள். ஏதாவது சிறிய அளவிலாவது தமிழ்மக்களுக்கு உருப்படியான ஒன்றை ஜனாதிபதி செய்த பின்புதான் அதுபற்றிய உங்கள் எதிர்ப்பு அரசியல் பிரசாரம் வெளிவரும் என்பதும் எனக்குத்தெரியும்.

இப்போது ஏதோ நீங்கள் நாட்டில் இருப்பதாக காட்டிக்கொள்வதற்காக, வெளிநாடுகளையும்விடுதலைப்புலிகள் கோரும் இடைகால சபைக் கெதிராக அணிதிரட்டப் போவதாக கூச்சல் போட்டுக் கொண்டு இருக்கிறீர்கள்.

அண்மையில் பேராசிரியர் ஜீ. எல்.பீரிஸ் ஊடகங்களுக்கு அளித்துள்ள பேட்டியொன்றில், "எதிர்காலத்தை அடகுவைத்துவிட்டு நிகழ்காலத்தை அரசு நடத்திக் கொண்டிருப்பதாகவும், பிரதேச சபைகளை நிர்வாகிப்பது போன்று மத்திய அரசையும் இந்த அரசாங்கம் நிர்வாகிக்க முயல்வதாகவும் மிகப் பொருத்தமாகவே கூறியிருக்கிறார்.

அதிகம் எழுத எனக்கு விருப்பம் இல்லை.

இப்போது புலிகளை சமாதானத்தில் நம்பிக்கையில்லாது போகச் செய்யும் முயற்சியில் 80% வெற்றியடைந்துவிட்டீர்கள் என்று நினைக்கின்றேன்.

யுத்தம் தொடங்கினால் நீங்கள் களத்தில் வீரார்களாக குதிப்பது பற்றிய உங்கள் கற்பனையான வர்ணனையையாவது சிங்கள மக்களுக்கு தெரிவித்தால் ஆரவாரத்தில் உங்கள் மீதான மக்களின் ஆதரவு இன்னும் அதிகரிக்கும் என்று நான் கருதுகிறேன்.

மிக நெருக்கடியான ஒரு நிலைக்குள் நீங்கள் தேசத்தைக் கொண்டு போய் விட்டதற்காக உங்களுக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

நன்றி.

இப்படிக்கு
விசித்திரன்

---

## வாசகர் இதயம் பேசுகிறது

*ச.இன்சிரா, மல்லாகம்.*

சுடர் ஒளிக்கு எனது முதல் நன்றி.

உனது உள்வாங்கல்களில் இலவச மருத்துவ ஆலோசனைகளை நான் மிக ஆர்வத்தோடு வாசிப்பேன். அந்தப் பகுதியைப் பார்த்த பின்பு ஒரு மருந்துவரை நேரில் சந்தித்தது போன்ற உணர்வினை உணர்கின்றேன். சுடர் ஒளியே! உன்னால் பயன் பெறுவதால் என்றும் உன்னை மறவாது வாரம் தோறும் உன்வரவை எதிர்பார்த்திருப்பேன். அதனால் தாமதியாது உன் வருகையினை வளப்படுத்திக்கொள். மற்றும் உனது கவிதைப்புனல், பித்தன் பதில், சிறுகதை, அரசியல் ஆக்கங்கள் யாவுமே சிறப்பு. நீ பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகிறேன். வாழ்க நீ.... வளர்க நீ....

*க.கவிலன், அல்வாய்.*

கனம் ஆசிரியர் அவர்கட்கு,

என்றும் தமிழ் மணம் பேசிக்கொண்டிருக்கும் சுடர் ஒளிக்கு,

சுடர் ஒளியில் வரும் அனைத்து அம்சங்களும் சுவையானவை. குறிப்பாக அரசியல் கட்டுரைகள் தீர்க்க தரிசனமாக உள்ளன. மேலும் நகைச்சுவை, நெட் ஜோக் என்பனவற்றை தவறாது எமக்காக தரலாம் தானே! கவிதைப்புனல் பகுதியில் வரும் கவிதைகள் அனைத்தும் நன்றாக உள்ளன. இத்தகைய அம்சங்கள் அனைத்தையும் தாங்கி வரும் என் பொன்னான சுடர் ஒளியே நீ வாழ்க.

*சி.கந்தசாமி,மண்டூர்*

சுடர் ஒளியே!

ஒவ்வொரு திங்கட்கிழமையும் காலையில் உன்வரவை எதிர்பார்த்து நான் காத்திருப்பதுண்டு. கடந்த நான்கு இதழ்களில் பேராசிரியர் பொன். சக்திவேல் எழுதி வரும் யாழ்ப்பாணம் மற்றும் வன்னி தொடர்பாக ஆய்வுக் கட்டுரைகளை நான் விரும்பிப் படிப்பேன்.

பேராசிரியரிடம் இன்னும் நிறைய இருக்கும் அவற்றை முழுவதும் சுடரே நீ சரியாக உள்வாங்கி வாசகர்களுக்காக வெளிப்படுத்த வேண்டும்.

சுடரே...!

யாழ்.சமூகத்தில் அதிகரித்து வரும் சீரழிவுகள் பற்றி யாழ். ஆத்மா எழுதியுள்ள கட்டுரை பிரமாதம். தரம் கண்டு பிரசுரிக்கும் உன் பணி மேன்மேலும் தொடர வாழ்த்துக்கள்.

*ப.உமா, திருமலை.*

உங்கள் கைவண்ணத்தில் அசத்தலாக வெளிவருகின்ற சுடர் ஒளிப் பத்திரிகையின் கோடானுகோடி இதய நெஞ்சங்களில் நானும் ஒருவன் என்பதில் மகிழ்வடைகின்றேன். உங்கள் பத்திரிகையின் பக்கங்கள் படு சூப்பர். உங்களுக்கென நீங்கள் கடைப்பிடித்து வரும் பாணி எம்மை மிகவும் கவர்ந்துள்ளது.

அந்த ஆலமரத்திற்கு, இந்த வாசகனின் வேண்டுகோள் ஒன்றுள்ளது. உங்கள் பத்திரிகையில் வருகின்ற அதிகப்படியான அரசியல் கட்டுரைகளைக் குறைத்து சமூக நோக்கான விழுமியக் கருத்துக்களை வாசகராகிய எமது பார்வைக்கு தருவதன் மூலம், சீரழிந்து வரும் இன்றைய இளைய சமுதாய உணர்ச்சிகளை தூசி தட்டுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.



*க.கயேந்திரன் – உடுப்பிட்டி*

என்றும என்னை இன்பமூட்டும் இளம் சுடரே.. சுடர் ஒளியே வாரந் தோறும் உன்னைத் தழுவும் பலரில் நானும் ஒருவன். நல்லவற்றைக் காண்பேன் என்ற நம்பிக்கையில் நான் உன்னைத் தாங்கும்போது, என்னுடைய இந்த எதிர்பார்ப்பை ஏமாற்றாது என் இதயம் கூட கசிய எத்தனையோ கருத்துக்களை நீ தருகிறாய், கவிதைப்புனல் தொடக்கம். கடைசிப்பக்கம் வரை கண் அயராது காண்பேன். ஆகா.. கண்டதெல்லாம் அற்புதமே... அற்பதம்.

ஓங்கட்டும் உன் இதழ் – உன்னில்
தேங்கட்டும் பெரும் புகழ்.

## West London Tamil School (WLTS)

WLTS is the oldest Tamil School established in the U.K to provide language (Tamil), Religious education, South indian classical music(Vocal, Veena, Miruthangam, Barathanatiyam/ Dance, and Key board) to those children who were eighter borne in the U.K or came to this country at their early age. we are a charity organization, which is run by a Board of governors who works on a voluntary basis. we are very proud to say that we have produced number of children, who have achived high grades(Distinction) in Tamil language the examination conducted by Cambridge University.

We also conduct music examination in April/ May each year in the U.K as well as Europe(Germany, France,Norway, Holland and Denmark) through an independant Institute - Oriental Fine Arts Acadamy of London (OFAAL). our syllabuses are unique, where by it is devised (grade 1 to 8) by experts in the music field, particularly to suit to those children , who are borme in the Europe. Children who succesfully complete the grade 8 are awarded Diploma certificats along with Titles "Sangeetha Kalajothy" (vocal & instruments), "Natiya Kalajothy" (barathanatyam/dance) and "Miruthanga Kalajothy" (miruthangam), over 3500 subjects were tested in 2004 OFAAL's examination in UK and Europe.

Dute to the quality & popularity of the WLTS as well as of the OFAAL, we are planning to recruit for the following vacancies to meet the expectation of the canidates/ parents.

***Miruthangam**

***Veena**

***Violin**

***Bharathanatyam**

***Music Exam Administrator**

required should have a Diploma or Degree in the relevent subjects, studied at well - recogsed university of similer institution or studied under traditional "Gurugulavasam" (proof required). have a teaching experience of minimum 4 years. well spoken & written tamil and English Language.

Desired: written/spoken any european language.

Working Hours: saturday & sunday between 9.15 am to 1.30 p.m

Duties:

*to teach student of WLTS

*to participate functions organized by WLTS/ OFFAL

*to set/ correct examination papers for OFFAL.

*to revise/ maintain the sylabuss of OFFAL.

*to perform/ participate for major concerts or an arangetram (graduatution ceremoney) under the guidance of WLTS.

*be prepared to travel to any european countries at the requisit of WLTS.

Salary/ remuneration(subject to tax and national insurance(NI) deductions) 500-1000 per month (sterling pounds) depending on the age and experience.

Please apply to the following address enclossing your current CV indicating your salary expection.

**The Hon.Vice Chairman**
30 Hazel Gardens,Edgware.
Middlesex HA8 8PB

# திருமலை ஹர்த்தால் வெளிப்படுத்தும் உண்மைகள்

திருகோணமலையில் கடந்த 9ஆம் திகதி நடத்தப்பட்ட கடையடைப்பானது ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் கொலையைக் கண்டித்து நடத்தப்பட்ட ஹர்த்தாலாகும்.

ஹர்த்தால் நடத்தப்பட்ட விதம், அது பிரதிபலித்த உணர்வலைகள், அது பற்றி எழுந்த ஊகங்கள் அனைத்துத் தரப்பினருக்கும் பல உண்மைகளை வெளிப்படுத்தி உள்ளன.

ஊடகவியலாளர் ஐ.நடேசன், பேராசிரியர் தம்பையா ஆகியோரின் படுகொலைகளைக் கண்டித்து கடையடைப்புச் செய்யப்பட்டாலும் முன்னர் இடம்பெற்ற மேலும் பல கொலைகளுக்கும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

சமாதானத்தை முன்னெடுப்பதாகக் கூறிக் கொள்ளும் ஸ்ரீலங்கா அரசின் பாதுகாப்புப் படையினரும், தமிழ்த்தேசியத்துக்கு எதிரான தேச விரோதக் கும்பலும் ஒன்று சேர்ந்து கிழக்கு மாகாணத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக நடத்துகின்ற சதிகார நடவடிக்கைகளைக்கண்டித்தும், கிழக்கு மாகாணத்தில் மீண்டும் ஒரு அராஜக சூழ்நிலையை அரங்கேற்ற அரசு எடுக்கின்ற நடவடிக்கைகளை கண்டித்தும் பூரண கதவடைப்புச் செய்யப்பட்டது.

எதுவித வன்செயலுக்கும் இடம் கொடாது சாத்வீகமான முறையில் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட வேண்டும் என ஏற்பாட்டாளர்களான திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவையினர் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அவ் வேண்டுகோளுக்கிணங்க கதவடைப்பு இடம்பெற்றது. நகரம் ஸ்தம்பிதம் அடைந்திருந்தது. நிறுவனங்கள் அலுவலகங்கள் செயலிழந்து இருந்தன, வர்த்தக நடவடிக்கைகள் முடங்கியிருந்தன. போக்குவரத்து தடைப்பட்டிருந்தது. வீதிகள் வெறிச்சோடிக்காணப்பட்டன.

கடையடைப்பின் நோக்கம் முறையாக வெளிப்படுத்தப்பட்டமையானது மறைந்த ஊடகவியலாளரின் ஆத்மாவுக்கு தமிழ் மக்கள் செலுத்தும் அஞ்சலியாகவும் அமைந்திருந்தது.

ஆயுத தாரிகளின் ஊடுருவல் திருமலையில் இடம்பெறுவதாகக் கூறப்படும் இந்த சந்தர்ப்பத்தில் இந்தக் கண்டனம் சிலருக்கு எச்சரிக்கையாகவும் பலருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகவும் இருந்திருக்கும்.

இன்னுமொரு இழப்புக்கு எவரும் தயாரில்லை என்பதையும் இச்சம்பவம் வெளிப்படுத்தியிருக்கவேண்டும்.

நிமல ராஜன், தம்பையா, நடேசன் போன்றோரின் படுகொலைகளுக்கு இருக்க வேண்டிய பின்னணி குறித்தும் கண்டனங்கள் வெளிப்பட்டிருந்தன. தமிழர் தாயகத்தில் கல்விமான்கள், புத்திஜீவிகள், அறிஞர்களை அழிக்கும் செயற்பாடுகளில் சதிகாரக் கும்பலுக்கும் தொடர்பிருப்பதாகக் கருதப்படுகிறது.

தமிழினத்தை அரசியல் பொருளாதார கல்வி ரீதியில் பலவீனப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் மேற்கொள்ளப்பட்டு வந்த நடவடிக்கைகள் பற்றி தமிழ் பேசும் நெஞ்சங்கள் தெரிந்து கொண்டிருப்பார்கள்.

அப்படியிருந்தும் பேரினவாத ஆயுததாரிகளுக்கு தமிழ்த்தரப்பு துணை போவது வெட்கப்படவேண்டிய விடயமாகும்.

இதனை வெளிப்படுத்துவதற்காகவே கண்டனங்கள், கடையடைப்புக்கள் , ஊர்வலங்கள், ஹர்த்தால்கள் நடத்தப்படுகின்றன.

அறிஞர்களை அழிப்பது மட்டுமல்ல விடுதலைப்புலிகள் மீது பழியைப்போடுதல், கருணாவின் பேரைப் பயன்படுத்தி தனிப்பட்ட பழிவாங்கல்களைச் செய்தல், தமிழ்த் தேசியத்துக்கு எதிராக மக்களைத் தூண்டிவிடல், சோதனை என்ற பெயரில் அடாவடித்தனங்கள் செய்து மக்களை வெறுப்படையச் செய்தல் என ஒட்டுமொத்தமாக மீண்டும் யுத்தத்தை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளில் அரச படைகள் மிக ஆர்வமாக உள்ளன.

இதனை மீண்டும் ஒரு முறை மக்களுக்கு தெளிவுபடுத்துவதாகவே திருகோணமலை ஹர்த்தால் அமைந்திருந்தது.

இராணுவக்கட்டுப்பாட்டுப்பிரதேசத்தில் இடம்பெறும் துப்பாக்கி வேட்டுக்களுக்கு இராணுவமும் அரசுமே பொறுப்பேற்க வேண்டும்.

இதனை அரசுக்கு உணர்த்தும் வகையிலேயே திருமலை ஹர்த்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

எஸ்.எஸ்.ஆர்


ஊடகமே உலகம்
(வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை)
ஊடக டிப்ளோமா கற்கை நெறி
DIPLOMA IN MASS MEDIA
இக்கற்கைநெறியை மேற்கொண்டு Dip. In. M.M. (Sri Lanka)
DIPLOMA IN BROADCASTING
இக்கற்கைநெறியை மேற்கொண்டு Dip. In. B.C. (Sri Lanka)
சான்றிதழை பெற்றுக்கொள்ளுங்கள்
தபால் மூலம்
6 மாத கால பாட நெறி
தொடர்பு: (011) 4512830
MMIC 50, 2nd Floor, "Colombo Plaza" Galle Road, Wellawatta, Colombo - 06.
Mass Media Institute of Ceylon (Pvt) Ltd.,



மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHOTHERAPY)

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன்தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்கமுடியாது சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம். ஆரம்ப மனநோய் உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரழிவு, தலையிடி, வாதம், குழந்தை பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. (பதில் பெறுவது எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.)

பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்

Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)

மனித உறுப்புக்கள் அனைத்தும் வியாதி ஏற்படுவது போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை வீணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலிலும் ஆகும். பயப்படாதீர்கள்! மனோத்துவ வைத்தியம்(PSYCHOTHERAPY) மூலம் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் *(முத்திரை செலவுடன்)* விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஒடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

| கொழும்பில்... | கல்முனையில்.. |
|---|---|
| ஜூன் 24 - 28 வரை சந்திக்கலாம்<br>New Ahmed Turist Inn, Bang Bang Building<br>10 - 1/A, Bankshall Street, Colombo - 11.<br>TEl No. 5368426, 368427, Cell. 0722 910796<br>Hot Line: 0777 569205 | ஜூன் 05, 06, ஆம் திகதிகளில் சந்திக்கலாம்<br>T.M.M. பாமசி கல்முனை<br>Tel No. 067 2229329<br>Hot Line: 0777 569205 |
| **வவுனியாவில்...** | **யாழ்ப்பாணத்தில்...** |
| ஜூன் 11, 12, ஆம் திகதிகளில்<br>Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு<br>வவுனியா, Tel No. 024 2222074<br>Hot Line: 0777 569205 | ஜூன் 15 - 20வரை<br>A.S.N. கற்றலாவிடுதி<br>392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்<br>Hot Line: 0777 569205<br>Tel No. 021 2223181<br>021 222 5399 |

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.



உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

எப்பேர்ப்பட்ட வியாதியானாலும் சரி, உடனே என்னை வந்து சந்தியுங்கள்



K. சிவசுப்பிரமணியம்
M.I.H.Ind-S.M.P.

எவ்வளவு நாட்பட்ட வியாதியானாலும் சரி, காலதாமதம் செய்யாமல் கீழ்க் கண்ட வியாதிகளுக்கு நேரில் கண்டு ஆலோசியுங்கள். நேரில் வரமுடியாது போனால் கடிதமூலம் தெரிவித்துக் கொள்ளுங்கள்.

ஆஸ்மா, க்ஷயம், இளைப்பு, பீனிசம், தலைவலி, மலேரியா, கண்டமாலை, சொறி, சிரங்கு, பாண்டு, சோகை, காக்கை வலிப்பு, வாதம், நீரிழிவு, மூலரோகங்கள், இருதய நோய்கள், இடுப்புவலி, நெஞ்சு எரிவு, குடல் வாய்வு, நரம்புத்தளர்ச்சி, வீரியக்குறைவு, இரத்தமின்மை, சொப்பன ஸ்கலிதம், பெண்களுக்கு ஏற்படும் சூதக வாய்வு, மாசம் முன், பின் காணுதல், சூதகவலி, பிள்ளை இல்லாமலிருத்தல் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படும் சகல வியாதிகளுக்கும் உத்தரவாத சிகிச்சை அளிக்கப்படும்.

RAJA BAJEEKARANA (Rasayana) LEGIUM
ராஜ வஜீகரண (ரசாயன) லேகியம்

(முஸ்லிம் முறைப்படி ஆட்டு மாமிசத்தில் பக்குவமாய் தயாரிக்கப்பட்டது)



சாலாமிசிரி, பாதாம் பருப்பு போன்ற விலையுயர்ந்த மருந்துகள் சேர்த்துத் தயாரானது. உல்லாச வாழ்விற்கு உறுதுணையானது. ஸ்திரி, புருஷர்களின் பலவீனங்களைப் போக்கி, தளர்ந்த நரம்புகளுக்கு முறுக்கேற்றி, சுறுசுறுப்பையும், தேகாந்தியையும் உண்டாக்க வல்லது. உடல் பூரிக்கும். எலும்பும் தோலுமானவர்களின் சரீரத்தை ஆச்சரியப்படத்தக்க வகையில் புஷ்டியாக்கும். கணைச் சூடு தணியும், மூலச்சூட்டைப் போக்கும், இருமல், மார்பு, இடுப்பு வலி, கால், கை நடுக்கம் மற்றும் சகல பலவீனங்களுக்கும் சிறந்த ரசாயனம் இதுவே. உடல் பருத்தவர்களுக்கும், நீரிழிவு, பிளட்பிரஷர் உள்ளவர்களுக்கும் சிறுவர், சிறுமியருக்கும் சிறந்தது.

நாட்பட்ட பீனிசம், இளைப்பு, இருமல், மூலரோகங்கள் உள்ளவர்களும் பயமின்றி பலனடையலாம். பத்தியமில்லை.

500 gram 300/-, 250 gram 150/-
வி.பி.பி. ஆடர்கள் கவனிக்கப்படும்.

வார நாட்களில் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரையிலும் விடுமுறை தினங்களில் காலை 9 மணி முதல் 12 மணி வரையிலும் வைத்தியரைச் சந்திக்கலாம்.

Ayur Dr. K. Sivasubramaniam, முருகானந்தா வைத்தியசாலை
G/02, கொழும்பு மத்திய சுப்பர் மார்க்கட், மீன்கடை மேல் (நிலமாடி)
கொழும்பு - 11. Tel: 2384645.



பாலியல் பலவீனத்திற்கு ரிஷி அஜமாமிச லேகியம்

தேவையில்லை வயாகரா நம்பிக்கையுடன்
பாலியல் பலவீனத்திற்கும், ஆண்மைக்கும்,
வீரிய விருத்திக்கும் ரிஷி அஜமாமிச லேகியம்
ரூபா.250/- தங்கபஸ்பம் கலந்தது ரூபா 1475/-

தங்கபஸ்பம் தனியாகவும் பெறலாம்

மூல வியாதியா ரிஷி லேகியம் பாவியுங்கள்.
உள்மூலம், வெளிமூலம் இவற்றை சுகப்படுத்தும்
ரூபா. 250/-



ஞானசுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு, கொழும்பு-11.
தொலைபேசி : 2421398

# சுடர் ஒளி

ஜூன் 14 – 20, 2004

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு–14. டெலிபோன்: 011–4734401—6
பாக்ஸ் : 011 – 4734404
E-mail: editorial@sudaroli.com


## நாடாளுமன்ற பயங்கரவாதம்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி – ஜே.வி.பி. ஒன்று சேர்ந்து அமைத்துள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு அரசாங்கம் பதவி ஏற்று இரண்டு மாதங்கள் கழிந்துவிட்டன. அரசாங்கம் இன்னும் தனது பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்க முடியாத நிலைமையில் இருந்து வருகிறது.

ஜாதிக ஹெல உறுமய, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், தமிழ் கூட்டமைப்பு ஆகியவற்றை வளைத்துப்பிடிப்பதற்கு ஜனாதிபதியால் வகுக்கப்பட்ட வியூகங்கள் இதுவரை வெற்றியளிக்கவில்லை.

பெரும்பான்மையைத் தங்க வைப்பதற்குத் தேவையான ஆகக் குறைந்த எம்.பிக்களான 113 பேரின் ஆதரவு இன்னும் ஆளும் கூட்டமைப்புக்கு கிடைக்கவில்லை.

இத்தகைய நிலையில் ஒவ்வொரு தடவையும் நாடாளுமன்றம் கூடும் போது இழுபறி, ரகளை, காடைத்தனம் என்று ஆளும் கூட்டமைப்பினால் குழப்பங்கள் ஏற்படுத்தப்படுகின்றன.

அமர்வுகளை நீடிக்க விடாமல் ஒத்திவைக்கச் செய்வதன் மூலம் பிரச்சினைக்குரிய முக்கிய விடயங்களை வாக்கெடுப்புக்கு வராமல் தடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அரசின் பெரும்பான்மைப் பலத்தை பரீட்சிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்காமல், அறுதிப் பெரும்பான்மைப் பலம் கை கூடும் வரை காலத்தை இழுத்தடித்து ஆட்சியை தக்க வைக்கும் தந்திரமே தற்பொழுது கையாளப்பட்டு வருகிறது.

வழமையாக ஆளும்கட்சியினர் கொண்டு வரும் தீர்மானங்களை எதிர்க்கட்சியினர் குழப்பியடிப்பது சகஜம். ஆனால், 13 ஆவது நாடாளுமன்றத்தில் இது எதிர்மாறாகவே நடைபெற்று வருகிறது.

சபாநாயகர் தெரிவின் போது ஜாதிக ஹெல உறுமய கட்சியின் இரு உறுப்பினர்கள் அரசுத் தரப்பால் கடத்தப்பட்டு அரசுக்கு ஆதரவாக வாக்களிக்க வைக்கப்பட்டனர். இதனைச் சமன் படுத்துவதற்காக அந்தக் கட்சியின் மற்றும் இரு உறுப்பினர்கள் எதிரணிக்கு ஆதரவாக வாக்களிக்க கட்சியின் தலைமைப் பீடத்தினால் அனுமதிக்கப்பட்டனர்.

அச்சமயம் சபையில் ஏற்பட்ட குழப்பத்தின் போது ஜாதிக ஹெல உறுமய எம்.பிக்கள் சபைக்குள் வைத்தே அச்சுறுத்தப்பட்டனர். அகௌரவப்படுத்தப்பட்டனர்.

இரண்டாவது தடவையாக சபை கூடிய போது, கந்தப்பொல விவகாரம் விவாதத்துக்கு எடுக்கப்பட்டது. விவாதம் நடைபெற்றால் உண்மை வெளிவந்துவிடும் என்ற பீதியினால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரும் ஜே.வி.பியினரும் சேர்ந்து அந்த விவாதத்தைக் குழப்பியடித்தனர்.

கடைசியாக இடம் பெற்ற சம்பவம் படுமோசமானது. நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கே சவால் விடுக்கும் சம்பவமாக இது அமைந்து விட்டது. தேர்தல் ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்ட ஜாதிக ஹெல உறுமயவின் எம்.பி ஒருவர் சத்தியப்பிரமாணம் செய்ய முற்பட்டபோது கட்டவிழ்த்து விடப்பட்ட காடைத்தனம் முன்னைய எல்லாவற்றையும் மிஞ்சிவிட்டது.

ஜாதிக ஹெல உறுமயவைச் சேர்ந்த இரு எம்பிக்கள் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெறும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

எனினும் நாடாளுமன்றப் பயங்கரவாதத்தை முறியடிக்க எதிர்க்கட்சிகள், கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் இணைந்து செயற்படும் நிலைமையை இது உருவாக்கி விட்டிருப்பது சற்று ஆறுதல் அளிக்கிறது.


நாடாளுமன்றத்தில் அரசு தரப்பு கட்டவிழ்த்து விட்டிருக்கும் அராஜகம், பயங்கரவாதம், காடைத்தனம் போன்றவற்றுக்கு எதிராக 116 எம்.பிக்கள் ஒன்று திரண்டு நிமிர்ந்து ஒப்பமிட்டிருக்கிறார்கள்.

அரசாங்கத்துக்கு அறுதிப் பெரும்பான்மை பலம் கிடைத்துவிட்டது என்று வீறாப்புப் பேசி வந்த அரச தரப்பினருக்கு இது பேரிடியாகி விட்டது.

இந்த நிலையில் ஜூலை 20 ஆம் திகதி வரை நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. இந்த நீண்ட இடைவெளியைப் பயன்படுத்தி எதிரணியில் உள்ள உறுப்பினர்களை வளைத்துப் பிடிக்க அரச தரப்பினர் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொள்ளலாம். ஆனால், காலம் கடந்து போகப்போக பெரும்பான்மை பலத்தைப் பெறுவதற்கான அரசின் முயற்சிகள் வலுவிழந்து செல்வதையே சம்பவங்கள் கோடிகாட்டுகின்றன.

நெருக்கடியின் இந்த இறுதிக்கட்டத்திலாவது ஜனாதிபதி தான் விட்ட தவறுகளை உணர்ந்து, நேர்மையான அரசியலை முன்னெடுப்பாரானால், அது தேசத்தை பெரும் நெருக்கடியில் இருந்து மீட்பதற்கான பெரும் கைங்கரியமாக இருக்கும்.

# நடந்தது என்ன?


நாடாளுமன்ற கலவரத்தின் போது

ஒரு நாட்டின் தலைவிதியை நிர்ணயிப்பதே அந்த நாட்டின் நாடாளுமன்றம் தான். சகல விதமான கௌரவங்களுக்கும் மரியாதைகளுக்கும் ஓர் அதி உயர் மன்றமாக இந்த நாடாளுமன்றம் கருதப்படுகிறது.

நாடாளுமன்றத்துக்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் அனுப்பப்படுகின்றனர். கூடுதலான உறுப்பினர்களைக் கொண்ட கட்சி ஆளும் கட்சியாகவும், குறைந்த உறுப்பினர்களைக்கொண்ட கட்சி எதிர்க்கட்சியாகவும் செயற்படுவது மரபு.

இவ்வாறு தெரிவு செய்யப்படும் மக்கள் பிரதிநிதிகள் ஆளும் கட்சி உறுப்பினர்கள் என்றால் என்ன, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் என்றால் என்ன அனைவருக்கும் விசேட சிறப்புரிமைகள் சட்ட ரீதியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அரசமைப்பிலும் இவை உறுதிசெய்யப்பட்டுள்ளன.

சபாநாயகரின் முன் அனுமதியின்றி இந்த மக்கள் பிரதிநிதிகளை பொலிஸார் கூட விசாரணை செய்ய முடியாது. கைது செய்யவும் முடியாது. தம்மைத் தெரிவு செய்து அனுப்பிய மக்களின் பாதுகாவலர்களாகவும், வழிகாட்டிகளாகவும் செயற்பட வேண்டியவர்கள் இந்த மக்கள் பிரதிநிதிகள்.

பெயர் கூறி அழைக்கும்போது கூட கௌரவ உறுப்பினர் அவர்களே, கௌரவ அமைச்சர் அவர்களே என்று தான் இவர்கள் அழைக்கப்படுகின்றனர். சபாநாயகர் கூட உறுப்பினர்களை மிகவும் கௌரவமான முறையிலேயே அழைப்பார். இவை எல்லாம் மக்கள் பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்புரிமைகள்.

அதே போன்று இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும்? எவ்வாறு பேச வேண்டும்? அவர்களுடைய உடைகள் எப்படி இருக்க வேண்டும்? அதை மீறினால் அவர்களுக்குக் கிடைக்கும் தண்டனை என்ன? இப்படி நன்நடத்தைக் கோவையும் இவர்களுக்கு உண்டு.

நாடாளுமன்ற நிலையியல் கட்டளை என்ற பெயரில் இவை உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் இவை எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்ட பின்னரே சத்தியப்பிரமாணம் செய்கின்றனர். இவை அனைத்தும் கௌரவமான ஒரு நாடாளுமன்றத்தில் இடம்பெறும் நிகழ்வுகள்.

### முதல்கோணல் முற்றும் கோணல்

ஆனால் இலங்கையின் 13ஆவது நாடாளுமன்றம் இந்த நடைமுறைக்குத் தலைகீழாகவே அமைந்துவிட்டது.

முதல் கோணல் முற்றும் கோணல் என்பார்கள். அது இலங்கை நடாளுமன்றத்துக்கு சரியாகவே அமைந்துவிட்டது.

*113 ஆசனங்களைப் பெற்றால் மட்டுமே பெரும்பான்மை பெற்ற கட்சி ஆட்சி அமைக்க முடியும்.

*ஆனால் ஆக 105 ஆசனங்களை மட்டுமே பெற்ற ஜனாதிபதியின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு சிறுபான்மை அரசாங்கத்தை அமைத்தது.

*நாடாளுமன்றத்தில் சபாநாயகர்தெரிவின் போது பிக்குமாரின் காலில் விழுந்து அவர்களுடைய இரண்டு வாக்குகளைப் பெற்று குறுக்கு வழியில் வெற்றி பெற முனைந்தது.

*தேசிய ஹெல உறுமய நடுநிலை வகிப்பதாக கூறியபோதும் இவர்களில் இருவர் அரசுக்கு ஆதரவாக வாக்களித்துவிட்டனர்.

உண்மையாகவே நடுநிலை என்றால் எதிர்க்கட்சிக்கும் இரண்டு வாக்குகள் அளிக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கேட்டுக்கொண்டதன்படி தேசிய ஹெல உறுமய இரண்டு வாக்குகளை எதிர்க்கட்சிக்கு ஆதரவாக வழங்கியது.

*இதனால் ஆளும் கட்சியின் வேட்பாளரான டியூ. குணசேகரவைத் தோற்கடித்து எதிர்க்கட்சி வேட்பாளரான டபிள்யூ.கே.எம். லொக்குபண்டார சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டார்.

*அப்போது இன்னும் ஒரு சுவையான சம்பவமும் இடம்பெற்றது. கள்ள வாக்கு போடுவதிலும் வாக்குப்பெட்டிகளைத் தூக்குவதிலும் கைதேர்ந்தவர்கள், சபாநாயகர் தெரிவின்போது வாக்குப்பெட்டியை அபகரிக்கவும் தவறவில்லை.

மேற்கண்ட சம்பவங்கள் எல்லாம் ஜனாதிபதியின் சிறுபான்மை அரசுக்குக் கிடைத்த முதலாவது அடியாகும்.

13ஆவது நாடாளுமன்றத்தின் முதல் அமர்விலேயே அரசுக்கு ஏற்பட்ட மறக்க முடியாத ஒரு மூக்குடைவாகும்.

இத்தோடு நின்றுவிடவில்லை. இரண்டாவது அமர்வில் என்ன நடந்தது? எதிர்க்கட்சித் தலைவரும் பிரதமரும் நடத்திய இரகசியப் பேச்சின் பயனாக பிரதிச் சபாநாயகரும் – குழுக்களின் பிரதித் தலைவரும் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டனர்.

ஆத்திரம் அடைந்த ஜே.வி.பி. பிரதமரிடமே காடைத்தனத்தைக் காட்டிவிட்டது. கௌரவமிக்க பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை காரசாரமாகக் கை நீட்டி விமர்சித்தது.

அன்றைய தினமே நுவரெலிய கந்தப்பொலவில் அப்பாவித் தமிழர்கள் பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டதையும் தமிழர்களின் உடமைகள் சூறையாடப்பட்டதையும் கண்டிக்கும் விவாதம் நடைபெற்றது.

அப்போது இந்த ஜே.வி.பியினர் என்ன செய்தார்கள்? விவாதம் நடந்தால் குட்டு அம்பலமாகிவிடும் என்பதால் திட்டமிட்டே விவாதத்தைக்குழப்பினர். சபாநாயகர் மீது பாய்ந்து விழுந்தனர்.

நாடாளுமன்றத்துக்கு ஒவ்வாத வார்த்தைகளைப்பிரயோகித்தனர். சபை நடுவே வந்து அமர்ந்து ஆர்ப்பாட்டம் செய்தனர். சபாநாயகரைச் சுற்றி வளைத்து 'கேரோ' செய்தனர்.

அவர்களுடைய திட்டம் பலித்துவிட்டது.

> சபை அல்லோல கல்லோலப்பட்டுக் கொண்டிருந்தது. கூட்டத்தில் சிக்கிய வண.தேரர் "ஐயோ அம்மா" (அனே அம்மே) என்று கத்திவிட்டார். மயக்கம் ஏற்படுவது போன்ற நிலை. ஆளும் கட்சி உறுப்பினர்கள் தாங்கிப் பிடித்துக் கொண்டனர். அப்போது தான் விடயம் புரிந்தது. பிடிக்கக் கூடாத இடத்தில் பிடித்து கசக்கிவிட்டனராம். இதனால் துடித்துப் போன தேரர் அலறிவிட்டார். இப்போது சிறுநீர் கழிக்க முடியாமல் அவதிப்படுகின்றார். டியூப் மூலமாகவே சிறுநீர்வெளியேற்றப்படுகின்றது.

விவாதம் முற்றுப்பெறாமலேயே சபை ஒத்திவைக்கப்பட்டது.

நெடுஞ்சுவர்களில் போஸ்டர் ஒட்டவும் பாதையில் ஆர்ப்பாட்டம் செய்யவும் மட்டுமே பழக்கப்பட்ட இவர்களால் பண்பாக நாடாளுமன்றத்தில் கௌரவமாக நடந்துகொள்ள எப்படி முடியும்?

இவர்களுடைய வீதி நாடகத்தை நாடாளுமன்றத்திலும் அரங்கேற்றி விட்டனர். தாம் தமிழ் மக்களின் விரோதிகள் தான் என்பதை அப்பட்டமாக முத்திரை குத்திக்கொண்டனர்.

### அரசியல் காடைத்தனம்

ஆனால் இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தால் போன்று கடந்த 8 ஆம் திகதி இவர்களுடைய அரசியல் காடைத்தனத்தையும் நாடாளுமன்ற பயங்கரவாதத்தையும் கட்டவிழ்த்துவிட்டனர்.

இலங்கை ஒரு பௌத்த நாடு. பௌத்த மத குருமார் கடவுளின் மறு அவதாரமாகவே போற்றி வணங்கப்படுகின்றனர். நாட்டின் ஜனாதிபதிக்குக் கூட இல்லாத கௌரவம் இந்தப்பிக்குமாருக்கு வழங்கப்பட்டிருந்தது.

எந்த ஓர் அவையிலும் ஜனாதிபதி வந்தால் கூட பிக்குமார் எழுந்து நின்று மரியாதை செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

மாறாக ஜனாதிபதியே அந்தப்பிக்குமாரின் அருகில் சென்று அவர்களின் பாதம் தொட்டு சிரம் தாழ்த்தி வணங்கிய பின்னரே தமது ஆசனத்தில் அமர்வார். அது பாரம்பரிய பண்பாடு.

### அரசாங்கக் கட்சி உறுப்பினர்கள் என்ன செய்தார்கள்?

அதி உயர் பீடமான நாடாளுமன்றத்தில் அதி வணக்கத்துக்குரிய பிக்குவைத்தூக்கிப் பந்தாடி இழுத்தடித்தனர். அவரது புனித அங்கியைக் களையவும் முயன்றனர். கலாசார விழுமியங்களுக்குப் பொறுப்பான அமைச்சரே சபையில் துச்சாதனனாக மாறினார்.

தேர்தல் ஆணையாளரின் அங்கீகாரத்துக்கு அமைய நாடாளுமன்றத்தில் பதவிப் பிரமாணம் செய்து கொள்ள வந்த பௌத்த மத குருவுக்கே இந்த அவமானம் ஏற்படுத்தப்பட்டது.

திரௌபதியின் மானம் காக்க கிருஷ்ணர் வந்தது போன்று அங்கே பாய்ந்து சென்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள், பிக்குவானவரின் மானத்தைக்காப்பாற்றினர்.

இல்லையேல் தன்னந்தனியாகச் சிக்கிக் கொண்ட பிக்குவின் உயிருக்கும் உத்தரவாதம் இல்லாமல் போய் இருக்கும்.

இதனால் ஆளும் தரப்பினருக்கும் எதிர்த் தரப்பினருக்கும் இடையில் இழுபறி, அடிதடி, மல்லுக்கட்டல் என சபை அல்லோல கல்லோலப்பட்டது.

அமைச்சர்களும் உறுப்பினர்களும் முஷ்டியை முறுக்கிக்கொண்டு கோதாவில் குதித்து விட்டனர்.

அப்போது நாடாளுமன்ற பார்வையாளர் கலரியில் திரண்டிருந்த பாடசாலை மாணவர்களும் பார்வையாளர்களும் பீதி அடைந்தனர். சில பாடசாலை மாணவர்கள் பயத்தால் அலறிவிட்டனர்.

இதனால் பார்வையாளர் கலரியில் இருந்த அனைவரும் அங்கிருந்து பொலிஸாரால் வெளியேற்றப்பட்டனர்.

நாடாளுமன்றத்தைப் பார்க்க வேண்டும். அங்கே எமது எம்.பிமார் எப்படிப் பேசுகின்றார்கள் என்பதைப்பார்க்க வேண்டும் என்ற ஆவலுடன் வந்த தொகுதி மக்கள் எம்.பிமாரின் பேயாட்டத்தைப் பார்த்த பின்பு அடப்பாவிகளா இந்தக்காடையர்களுக்கும் சண்டியர்களுக்கும் வாக்களித்தோமே என்று வாய் விட்டுக் கூறியதையும் அவதானிக்க முடிந்தது.

ஆளுக்கு ஆள் மோதிக்கொண்டனர். பதவிப்பிரமாணம் செய்ய வந்த பிக்குவும் அவருக்கு உதவியாக வந்த மற்றும் ஒரு பிக்கு எம்.பியும் நையப்புடைக்கப்பட்டனர்.

சபை அல்லோல கல்லோலப்பட்டுக் கொண்டிருந்தது. கூட்டத்தில் சிக்கிய வண.தேரர் "ஐயோ அம்மா" (அனே அம்மே) என்று கத்திவிட்டார். மயக்கம் ஏற்படுவது போன்ற நிலை.

**இரா.புத்திரசிகாமணி**

(21 ஆம் பக்கம் பார்க்க...)

# பாடாத தேனீக்கள்

எம்மைக் கடந்து போகும் ஒவ்வொரு நாழிகையிலும் எத்தனையோ உள்ளங்களைத் தாண்டி இருக்கிறோம். எல்லோருமே உள்ளங்களில் வந்து ஊன்றி நிலைப்பதில்லை. ஆனால், இலக்கியா ஒரு மடலின் ஊடாகவே மனமதில் வந்து மகுடம் சூட்டிக் கொண்டது உண்மையே.

நல்ல நோக்கங்களை எப்பொழுதுமே சென்றடைந்து விடும் என்பார்கள். அது போலத்தான் திவாஹரின் தூர நோக்கும் சிந்தனைகளும் சமூக விழிப்புணர்வுகளும் இலக்கியங்களாய் முகவரி ஏந்தி மனிதம் தொலைந்த இம்மானுடத்தை அளந்து கொண்டிருக்கின்றன.

இவ்வாறான சூழ்நிலையில்தான் இலக்கியாவின் நட்புக்கிடைத்தது. திவாஹரின் 'இருட்டுச்சிலந்திகள்' என்ற நாவலில் தனது இதயம்தொலைந்தவளாய் இணைந்து கொண்டாள் இலக்கியா.

''மதிப்புக்குரிய, எழுத்தாளர் அவர்களுக்கு எல்லா மனிதர்களையும் ஒருவர் போல அன்பு காட்டி நேசிப்பது என்பது மிகவும் பண்பட்ட உயர்ந்த மனத் தெளிவாளர்களுக்கு மட்டுமே உரியது. அதை உங்களில் நிரம்பக் காண்கிறேன். ''இருட்டுச்சிலந்திகள்' என்ற உங்கள் நாவலில் இதயத்தை தொலைத்து விட்டு தேடிக் கொண்டிருக்கிறேன். ஆர்வங்களும் உணர்ச்சிகளும் என் எண்ணச் சுழல்களுக்கு விரும்பி விண்ணப்பிக்கின்றன, உங்களுக்கு மடல் மலைகளை அனுப்பி குவிக்கச்சொல்லி.

பெருமைக்குரியவரே! உங்களின் நல்ல சிந்தனைகளை நலம் விசாரித்துக் கொள்வதில் பெருமிதம் கொள்கின்றேன். யதார்த்தங்களை எல்லாம் புறந்தள்ளி ஒப்பனை முகங்களுடன் ஓடிக்கொண்டிருக்கும் வாழ்க்கை நாடகங்களை வெளிச்சம் போட்டுக்காட்டிய பெருமை உங்களுக்கே உண்டு. உங்களின் நாவலில் வந்து நடமாடிய அபலை ஆர்த்தியின் வாழ்க்கையில், விதியின் விளையாட்டுக்கள் குறைவு. அதைவிட நான் பட்டிருக்கிறேன். உங்களின் கதையில் வந்த கனவு நாயகிக்கு கிடைத்திருக்கும் சமூக அங்கீகாரம் கூட எனக்கு இல்லையே என்று நினைக்கும் போதே மனம் வலிக்கிறது. புரியவில்லை. எனக்கு ஒன்றுமே புரியவில்லை. ஏன் இங்கிதமின்றி இந்த சமூகம் இப்படி இம்சிக்கிறது என்று. உறங்கிக் கிடந்த என் உணர்வு ஓலங்களுக்கு வர்ணம் தீட்டி வனப்புக் காட்டியது உங்களின் இருட்டுச் சிலந்திகள்தான்.

என் வாழ்க்கையில் மகரந்தக் கம்பங்களை மானசீகமாய் விரித்து சென்றவர் உங்கள் கனவு நாயகி ஆர்த்தி. புறந்தள்ளப்பட்ட அவளின் எண்ண எச்சங்கள் எல்லாம் தடைகளை உடைத்து தரணியில் நிலைபெற்றதென்றால் அதற்கும் கூட நீங்கள்தான் காரணம்.

மதிப்புக்குரியவரே, எனக்குள் எப்பொழுதுமே ஒரு வினா விளக்கம்பெறாமலே விலங்கிட்டபடி புதுமைகளும் மாற்றங்களும் வெறுமையாய் கவிதைகளிலும் கதைகளிலும் மட்டும் வனப்புக்காட்டிக் கொள்வதோடு நின்று விடுகின்றனவே ஏன்...? முடியுமானால் இதற்கு மட்டுமாவது விளக்கம் தாருங்கள்.

இறுதியாய் வேண்டுகோளாய் ஒரு விண்ணப்பத்தை மட்டும் முன்வைக்கிறேன். முடியுமானால் எனக்காக உங்கள் விரல் தொட்டு ஓரிருவரிகள் கடிதமாய் போடுங்கள். என் நலன்களை விசாரித்து அல்ல, உங்களின் படைப்புகளின் மீது பிரியமாய் உள்ள உணர்வுகளை நலம் பாடி. அது வரையுமே நான் வானம் பார்த்த பூமியாய் வாழ்ந்து கொண்டிருப்பேன்'' இப்படி ஆரம்பித்த நட்பு கடிதங்களால் வளர்ந்து சென்றது.

உலக விசித்திரங்களில் மனித மனங்களும் ஒன்று. மற்றவர்களோடு தங்களை அடிக்கடி ஒப்பிட்டுக் கொள்ளும் இயல்பினைக் கொண்டமைந்துள்ளமையால் இது வரைக்குமே எத்தனையோ வாசக உள்ளங்கள் கடிதங்கள் ஊடாக தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டபோதும் இலக்கியா அளவுக்கு அவனில் அழுத்தங்களை ஏற்படுத்தியதில்லை. நாளுக்கு நாள் வளர்ந்து சென்ற அவர்களின் நட்பு ஒருநாள் சந்திப்பில் கொண்டு நிறுத்தியது.

சமூக சீர்கேடுகளை வெளிச்சம் போட்டுக் காட்டுவதற்கும் அதற்கான தீர்வுகளை தைரியமாக சொல்வதற்கும் எழுத்தாளர்களுக்கு உரிமை உண்டு. அந்த உரிமைகளின் மீது ஏற்பட்ட ஆர்வம் நாளடைவில் அபிமானமாக வளர்ந்து இன்று நேருக்கு நேர் சந்திக்கும் அளவுக்கு கொண்டு வந்துள்ளதை நினைக்கவே வியப்பாக இருந்தது இலக்கியாவுக்கு.

தொலைவில் இருக்கும் போதெல்லாம் தொல்லை தரும் எண்ணங்கள் அருகில் வந்ததும் அந்நியமாகிப் போனதில் வேதனையே இருந்தாலும் தன்னை சுதாகரித்துக்கொண்டு ''வாங்க சேர் வாங்க'' என்று அழைத்து அமரச் செய்தாள் இலக்கியா. ''மேடம் உங்க கணவரை கொஞ்சம் சந்திக்க வேண்டுமே.''

''பத்தே நிமிஷம் இப்ப வந்திடுவார்'' என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே ''வணக்கம் சார் வணக்கம். உங்களைப் போன்ற பெரிய மனிதர்கள், நல்ல எழுத்தாளர்கள் இருக்கும் வரைக்கும் எங்களைப் போன்றவர்களுக்கு என்ன குறை. என்னோட பத்திரிகையில் உங்களுடைய தொடர் கதையை போடலாம் என்று முடிவு பண்ணி விட்டேன். இது பற்றி இப்ப பேசநேரம்கிடையாது. நீங்க இருந்து காப்பி சாப்பிட்டுப் போங்க. எனக்கு அவசரமாக முடிக்க வேண்டிய வேலைகள் நிறைய இருக்கு'' என்று விடை பெற்றுக் கொண்டார் வித்யாஷ்.

திவாஹர் தன்னுடைய நாவல் ஒன்றை வித்யாஷின் பத்திரிகையில் பிரசுரிப்பதற்கு விரும்பி




னார். அது தொடர்பாக பேசி விட்டுப்போகத் தான் வந்தார். என்ன செய்வது இது தான் அவசரயுகமாயிற்றே. ஒவ்வொருவரும் ஒவ்வொரு வினாடியும் ஏதோவொரு பரபரப்பில் மூழ்கியவர்களாய் தான் இருக்கிறார்கள். இதில் யாரையும் குறைபட்டுக் கொள்வதற்கில்லை என்று தன்னைத் தானே சமாதானம் செய்து கொண்டு இலக்கியா தந்த காப்பியை சுவைத்தபடி திவாஹர் ''என்னம்மா இலக்கியா எப்படி இருக்கிறாய்?'' என்றார். மறு நொடியே.... பதிலாய் அவளின் மௌனம் கலந்த அழுகை அவனுள் பல்வேறு மாற்றங்களை கொண்டு வந்து நிறுத்தியது. எதுவுமே புரியாமல் மனம் தடுமாறிப் போனார் திவாஹர்.

''இங்க பாரு இலக்கியா! இப்படி அழுது ஆப்பாட்டம் பண்ணுற உனக்கிருக்கும் பிரச்சினைதான் என்ன...? தயவு செய்து சொல். உனக்காக நானிருக்கிறேன்'' என்றான்.

சற்று சமாதானம் பெற்றவளாக அவள் ''சார் அது கனவுகளோடு கைகோர்த்து நடந்துகொண்டிருந்த காலம். கவிதைகளும் இலக்கியங்களும் தான் உலகம் என்று உல்லாச வானம் பாடியாய் உலாவிக் கொண்டிருந்தேன். அப்போதெல்லாம் நான் நிறைய கவிதைகள் எழுதியிருக்கிறேன். அவைகளுக்கும் கவிதை முத்திரை இடலாமா என்பதை நீங்கள்தான் சொல்ல வேண்டும். அது போகட்டும். சின்னவயதில் இருந்தே நான் கொஞ்சம் புதுமை விரும்பியாய் இருந்திருக்கிறேன். இதை எனது பெற்றோர் எப்படி எடுத்துக் கொண்டார்களோ தெரியாது. அதனால் எனக்கும் அவர்களுக்கும் இடையில் நிறைய முரண்பாடுகள். சில நேரங்களில் அவை பெரிய வாய்த்தர்க்கங்களாகவும் முடிந்ததுண்டு.

என் சுதந்திரக் கனவுகள் மீதான அவர்களின் அத்து மீறல்கள் அதிகமாகிக் கொண்டே வந்தன. இயல்பாகவே கலைகளின் மீது பிரியம் கொண்டவள் நான். ஆனால், அதில் கூட முழுமையாய் ஈடுபட முடியாமல் போனதுக்கு பொறுப்பாளிகள் என் பெற்றோரே..– என்ன செய்வது? ஒவ்வொரு பெற்றோரும் பிள்ளைகள் மீது முதலீடு செய்பவர்களாய் தானே இருக்கிறார்கள். பிள்ளைகள் பெற்றோரின் கைப்பொம்மைகளாய் இருக்கும் வரைதான் ஆனந்த அபிஷேகங்கள். இல்லையேல் அவதூற்று தூறல்கள் தானே. என் அபிலாஷைகளையும் அவாக்களையும் அப்படியே அப்புறப்படுத்திவிட்டு அப்பாவின் விருப்பப்படி துறையை மாற்றிப்படித்தேன். முடிவு என் பக்கம் சாதகமாக அமையவில்லை. அதுதான் வாழ்க்கையில் நான் எதிர்கொண்ட முதற்தோல்வி. அதற்கு எனது பெற்றோர் புது அர்த்தம் கற்பித்தனர். இவளுக்கு படிப்பு சரியா வரல அதனால் கல்யாணம் பண்ணி வெச்சிடுவோம் என்னு.

என் வாழ்க்கையின் மீதான அடுத்த அத்து மீறல் என்னுடைய திருமணம். சார் ஒவ்வொரு மனிதனுக்கும்தங்களுடையவாழ்க்கைத்துணையை தேடிப் பெறுவதில் சுயாதீனம் இருக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவள் நான். இதில் கூட இடம்தராத என் பெற்றோரின் விருப்பப் படியே திருமணம் முடிந்தது.

புதிய இடம், புதிய மனிதர், ஒரு பொது ஊடகத்தின் தலைவர் இவையெல்லாம் என்னுள் நிறைய எதிர்பார்ப்புக்களை வளர்த்துவிட்டன. மெய்ப்படாத என்னுடைய கனவுகளையும் தொடுவானத் தேடல்களையும் மனம் முழுவதும் ஏந்திய வண்ணம் மனதார அவரை ஏற்றுக் கொண்டேன். என் வாழ்க்கையின் வசந்தங்கள் எல்லாம் என்னை வரவேற்பதாய் எண்ணி சத்தியமாகச் சொல்கிறேன் அப்போது எனக்கு தெரியாது, இங்குதான் என் வாழ்க்கை சூன்யப் பட்டுப்போகப் போகிறது என்னு.

வேதனைகளும் விம்மல்களும் அளவைத் தாண்டும் போது மனிதன் நிலைகுலைந்து போகிறான். நான் மட்டும் என்ன விதி விலக்கா...? மனம் திறந்து சொல்கிறேன். இப்போது என் உணர்வுகள் எல்லாம் ஊமைகளாய் மட்டுமே. வாய் இருந்தும் பேசாத மடந்தையாய்...ஒவ்வொரு நாளும் செத்துக் கொண்டிருக்கிறேன். நான் கேட்பதெல்லாம் மனைவி எனும் மாட்சிமைமிக்க அந்தஸ்த்தை அல்ல, சாதாரண மனுஷியாய் என்னை நடத்தும்படி தான். அதற்கே வழியில்லாத போதுதான். மனம் வெகுவாய் வெகுண்டு போகிறது.

இறைவனின் படைப்பில் மிக உன்னதமான இடத்தைப் பெற்றிருப்பவன் மனிதன் என்பதை எத்தனை பேர் உணர்ந்து செயற்படுகின்றனர் என்பதுதான் பெரிய கேள்வியாய் எழுந்துள்ளது. நொடிக்கு நொடி எத்தனையோ எண்ணங்கள் எத்தனையோ முடிவுகள் இருந்தும் எவையும் ஏற்றம் பெற்றதாய் இல்லை. எல்லாம் வெறும் புஸ்வாணங்களாய் மட்டுமே உங்களின் கதைகளிலும் கவிதைகளிலும் வேண்டுமானால் நடைமுறையில் அவையெல்லாம் ஒப்பனை செய்யப்பட்ட ஓலங்களாய் மட்டுமே இருக்கின்றன. பெண்கள் என்றுமே இந்த சமூகத்தின் கைப்பொம்மைகளே. உணர்வற்ற கைப்பொம்மைகளே'' என்று விம்மி வெடித்தாள் இலக்கியா.

''இலக்கிய சல்லடை மனமெங்கும் சதா ஏதாவதொரு சலசலப்பு இருந்து கொண்டே தான் இருக்கும். முழுமை பெறாத கனவுகள், திருப்தி அடையாத மனசு இரண்டும்தான் அநேகமான பிரச்சினைகளுக்கு மூலமாய் முடிசூட்டிக் கொள்கின்றன. கடந்து போனவைகளுக்காய் கண்ணீர் விடுவதில் ஏதாவது இலாபம் இருக்கிறதா என்று எண்ணிப் பாருங்கள். இயல்பாகவே என்னில் நிறைய பெண்நிலை சிந்தனைகள் இருக்கின்றன. அதற்காக வாய் இருந்தும் ஊமைகளாய் உணர்வுகளை உதறித்தள்ளி உடன்பாடில்லாத ஒருவரோடு உரசிக்கொள்ளும் உன்னைப்போன்ற கோழைகள்தான் பெண்ணினத்தின் சாபக்கேடுகள். ஏன் இப்படி ஒவ்வொரு நாளும் அஞ்சி, அஞ்சி சாகின்றாய் உனக்காக உரிமைகளையும் சுதந்திரங்களையும் எப்போது கைகளில் ஏந்திக் கொள்ளப்போகின்றாய்? சார்புமைக் கொண்ட இனமாக உன்னை அடையாளப்படுத்திக் கொண்டது போதும் தனித்து நீ வீறு கொள். உனக்கான ஸ்திரமான பின்புலத்தை அமைத்துக் கொள். பிறகு எல்லாமே உனக்கு பின் என்பதை உணர்வாய்.

நன்றாக யோசித்துப்பார். உன்னுடைய பிரச்சினைகளுக்கு மூலவர்கள் யாரென்று. பதிலாய் உன் மனம் உன் பெயரையே பறைசாற்றும். உடன்பாடில்லாத உதவாக்கரை வாழ்க்கை வாழ்ந்தது போதும். உதறித்தள்ளு. உதிரியாய் சரி உன்னதங்களில் உன் ஆன்மா போய் சேரும். என்னுடைய படைப்புகளுக்கு இந்த சமூகத்தில் இருக்கும் வரவேற்பை கண்டு என்னை ஒரு வெற்றியாளனாய் எண்ணிக் கொண்டிருந்தேன். எல்லாம் உன் உணர்வு ஓலங்களில் கலையப்பட்ட ஒப்பனையாய் உருகி ஓடுகிறது. நன்றாக யோசித்து ஒரு முடிவு எடு. அது நல்ல முடிவாக இருக்கட்டும் என்று விடைபெற்றுக் சென்றார் திவாஹர்.

புதுமையாய் பல புரட்சி விதைகளை என்னுள் விதைத்து சென்ற அவரின் வார்த்தை ஜாலங்கள் எண்ணங்களுக்கு இறக்கை கட்டி விட உல்லாசமாய் உலவித் திரிந்த எண்ணங்கள், மரபுகள் என்ற தோட்டா துளைத்து மறுபடியும் வீழ்கின்றன. புதுமைவாதியாய் இந்த பூமியில் வாழ்ந்து எதைச் சாதிக்கப் போகிறோம்? அத்து மீறல்கள் தான் அனுமதி பெறாமல் அவஸ்தைகளை அரங்கேற்றப் போகிறதே என்ன செய்வது. நிர்ப்பந்தங்களின் விதைப்புகளால் விலாசம் தொலைந்த என் வாழ்க்கைக்கு ஒரு புத்துயிரா..? போகாத ஊருக்கு வழி கேட்கும் மனம் ஏன் இப்படி உழன்று கொண்டிருக்கிறது? என்றெல்லாம் புதிய கோணங்களில் ஊடுருவிய மனம் இறுதியாய் ஒரு தீர்மானம் கொள்கிறது. புதுமை எனும் பெயரில் வாழ்வை புதைத்துக்கொள்ள வேண்டுமா... என்ற சிந்தனையோடு நாட்காட்டியை பார்க்கிறாள். ஜூன் 18. அடடா இன்று எங்கள் திருமணநாளாயிற்றே கோயிலுக்கு போகவேண்டுமே என்று அறையை நோக்கி விரைகிறாள் இலக்கியா.... அங்கே புதுமைகளும் புரட்சிகளும் வெறும் வார்த்தை ஜாலங்களாய்.....வாய் இருந்தும் பாடாத தேனீக்களாய்... அடைக்கலம் தேடி அலைகின்றன.

– எஸ்.மனோஹரன் –

# கூட்டணிக் குழப்பத்தில் இந்தியாவின் ஆளும் கூட்டணி!





இந்தியாவின் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி அரசு எதிர்பாராத வகையில் வெற்றிவாகை சூடியதும் பதவி ஏற்றதும் என்னவோ உண்மைதான். ஆனால் பலரும் எதிர்பார்த்தது போலவே அக்கூட்டணி, குழப்பங்களை எதிர்நோக்க வேண்டியே இருக்கிறது. முதலாவது பிரச்சினை சுதந்திர இந்தியாவின் 57 வருட கால வரலாற்றில் காங்கிரஸ் கட்சி கூட்டணி அரசமைத்ததே இல்லை. இது முக்கியமான விடயமும் கூட.

காங்கிரஸ் கட்சி ஒரு காலத்தில் 543 மொத்த லோக்சபாத் தொகுதிகளில் 403 தொகுதிகளைக் கூட தனித்து வென்று (இது 1984 இல் இந்திரா மரண அனுதாப அலையில் ராஜீவ் பெற்ற வெற்றி) தனித்து ஆண்டு ருசித்தகட்சி.

1989 இல் ராஜீவ் தலைமையில் 192 இடங்களை வென்றபோதும் காங்கிரஸ் எதிர்க்கட்சியிலேயே இருந்தது குறிப்பிடத்தக்கது. இன்று காலம் மாறி விட்டது. 145 இடங்களுடன் காங்கிரஸ் அரசமைத்தது பெரிய விஷயமாகிவிட்டது.

ஆனாலும், இந்தக் காலத்துக்கு இது பெரிய விஷயம்தான். ஏனென்றால் நேரு குடும்பத்தலைமை இன்றி கட்சி 7 வருடங்களும் (1991 - 1998) மத்தியில் அரசாட்சி இன்றி 8 வருடங்களும் முடிந்த நிலையில் இந்த முறையும் இந்தா வாஜ்பாய் அலை அடித்து பி.ஜே.பி 335 ஆசனங்களுடன் திரும்பவும் வருகிறது என்று பத்திரிகைகள் பயமுறுத்தி வந்த நிலையை மாற்றி கட்சி இந்தளவு வெற்றி பெற்றது பெரிய வெற்றிதான்.

1996க்கு பின்பு நடைபெற்ற தேர்தல்களில் காங்கிரஸ் அதிக இடங்களை வென்றது இம் முறையே.

இந்தியாவில் தனிக்கட்சி ஆட்சி 1989 இல் ராஜீவ் பிரதமரானதுடன் முடிந்து விட்டது என்றே சொல்ல வேண்டும்.

1989 இல் வி.பி.சிங், 1990 சந்தர சேககர் எனப் பலர் முயன்றும் கூட்டணி ஆட்சி அமைக்க முடியவில்லை. 1991 இல் காங்கிரஸ் வென்று நரசிம்மராவ் பிரதமரானார். அ.தி.மு.க ஆதரவு பின்னர் பீகாரின் பிராந்தியக் கட்சி ஒன்றை உடைத்தது என தனது தந்திரத்தால் 5 வருடங்களை நரசிம்மராவ் ஓட்டி முடித்தபோதும் அதனை தனிக்கட்சி ஆட்சி என்றோ கூட்டணி ஆட்சி என்றோ கூறமுடியாது.

1996 இன் பின்பு தேவகௌடா, குஜ்ரால் எனக்கூட்டணி ஆட்சி முயற்சிக்கப்பட்ட போதும் முடியவில்லை. அந்தவகையில் கூறப்போனால் பலமாநிலங்களில் இருந்து வந்த பல பின்னணிகளைக் கொண்ட கட்சிகளை அதுவும் 24 கட்சிகளை அரவணைத்து ஸ்திரமான கூட்டணி ஆட்சியை தந்த பெருமை வாஜ்பாய்க்கே உரியது. அந்த ஸ்திரத்தன்மையை காங்கிரஸால் ஒரு போதும் தர முடியாது என்பது உண்மையே.

கூட்டணி ஆட்சியை பரீட்சிப்பதில் இது காங்கிரஸின் முதல் அனுபவம். அதேநேரம் அதைக் கொண்டு நடத்தும் மன்மோகன் சிங் அரசியலுக்கு வந்து 13 ஆண்டுகளாயினும் கூட்டணி அரசியலின் சூட்சுமங்கள் 47 வருட அரசியலில் இருந்த வாஜ்பாய் போல அவருக்குத் தெரியாது என்பது நிச்சயம்.

சோனியாவே பின்னணியில் உள்ளார் என்றாலும், அவரது 6 வருட அரசியல் அனுபவம் இதற்குப் போதுமா என்பது கேள்வியே. 1991 இல் இருந்த சோனியா அல்லர்; இப்போதைய சோனியா என்பது சரிதான். ஆனால் கூட்டணி அரசியலை நடத்த அவரது அரசியல் அனுபவமும் அதிகரித்த முதிர்ச்சியும் உதவுமா என்பதே இந்தியாவின் ஆளும் கூட்டணி முன்னாலுள்ள பிரச்சினை.

பதவி ஏற்று ஒரு மாதத்துக்குள் கூட்டணியின் உறுப்புக்கட்சிகள் எதிரும் புதிருமான திசைகளில் இழுக்கத் தொடங்கியுள்ளன. புலிகள் மீதான தடையை நீக்க வைகோ கோரியதும் அதற்கு காங்கிரஸ் உள்துறை அமைச்சர் காட்டமாக பதில் தந்ததும், பொடாவை ரத்துச் செய்ய காலவரம்பு என்று ஏதுமில்லை என இழுத்தடிக்கும் காங்கிரஸின் உத்தியும் முரண்பாடுகளையே தெளிவாக சுட்டிநிற்கின்றன.

இவற்றை விட ராஜீவ் கொலை விடயத்தில் அமைச்சர் அர்ஜுன் சிங் வெளியிட்ட கருத்துக்கள் சலசலப்பை ஏற்படுத்தின. எனினும் அடக்கி வாசிக்குமாறு சோனியா அர்ஜுன் சிங்கை அறிவுறுத்தியதும் அவரே தனது அறிக்கையை மறுத்து மறுப்பு அறிக்கை விட்டதும் குறிப்பிடத்தக்கது.

அர்ஜுன் சிங் நரசிம்மராவால் கட்சியிலிருந்து 1995 இல் நீக்கப்பட்டவர். சோனியாவை அரசியலுக்கு கொண்டுவர பெரிதும் உழைத்தவர். எனினும் சோனியா மற்றும் அவரது கணவர் மீதான அர்ஜுன் சிங்கின் விசுவாசம் என்னவாயினும் இலங்கை அரசியலில் சமாதானம் நிலவும் சூழலில் தி.மு.க, ம.தி.மு.க, பா.ம.க போன்ற கட்சிகளின் 25 எம்.பிக்களின் ஆதரவு காங்கிரஸுக்கு முக்கியமாகும் நிலையில் அர்ஜுன் சிங்கின் அறிக்கை தேவையற்றது என்பதே சோனியாவின் நிலைப்பாடு கூட.

தனது கணவன் மரணத்தால் பாதிப்புற்ற சோனியா, சிறந்த கணவன் பக்தி மிக்கவர் என்பதில் சந்தேகமில்லை. அப்படிப்பட்டவரே ராஜீவ் கொலையில் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட நளினியின் தண்டனையை தடுக்க ஜனாதிபதிக்கு சிபார்சு செய்தார். காலதேசவர்த்தமானங்களை கணக்கிட்டே எந்த முடிவும் எடுப்பவர் என்பதை சோனியா இதிலிருந்து தெளிவாகக் காட்டியுள்ளார்.

இந்திய வெளியுறவுக் கொள்கை என்பது ஒரு குடும்பத்தின் தனிச் சொத்தல்ல. அதுவும் இலங்கையில் சமாதானம் நிலவும் வரையுமாவது சோனியா காந்தி புதிதாக எந்த முடிவும் இலங்கை விடயத்தில் எடுக்கப்பட இடமளிக்கமாட்டார். ஒரு வேளை இலங்கையில் யுத்தம் தொடங்கினால் நிலைமை வேறாக இருக்கக் கூடும். புலிகள் மீதான தடை நீடிக்கப்பட்டது கூட பி.ஜே.பி.அரசால் அமுல் படுத்தப்பட்ட ஒரு நடைமுறையே. அப்போது கூட ம.தி.மு.க., ப.ம.க இரண்டும் பி.ஜே.பி. அரசில் பங்குவகித்தன என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு ம.தி.மு.க விடயத்தில் கூட்டணிக்குள் குழப்பம் வராது என்றாலும் பல்வேறு கூட்டணிக் கட்சிகளிடையே பல்வேறு முரண்பாடுகள் இருந்து வருகின்றன. 5 எம்பிக்களைக் கொண்ட தெலுங்கானா ராஷ்ரிய சமித்தி என்ற ஆந்திரக் கட்சியின் தனி மாநிலத்தை இடதுசாரிகள் எதிர்க்கின்றனர். இது சுவாரஸ்யத்துடன் பார்க்கப்படும் ஒரு கூட்டணிக் குழப்பம். இதை விட ஜார்கண்ட் முக்திமோர்ச்சா என்ற ஜங்கண்ட் கட்சி நிலக்கரி கூட்டுத்தாபன தலைமையகத்தை கல்கத்தாவிலிருந்து ஜார்கண்ட் மாநிலத்துக்குள் கொண்டு செல்ல முயற்சிக்கிறது. இதை இடதுசாரிகளும் காங்கிரஸும் எதிர்க்கின்றன. இது எங்கு போய் முடியுமென்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

-எஸ். சுரேந்திரஜித்-

# பாம்பு சூப்!

வருடத்தில் ஒரு நாள், ஒரே ஒரு நாள் மட்டும் தங்கள் பிறந்த வீட்டுப் பெருமைகளைப் பேசி, புகுந்த வீட்டு அவலங்களைப் பற்றி பெருங்குரல் எடுத்துப்பாடி, அழுது - தங்கள் வயிற்றெரிச்சலை தீர்த்துக் கொள்ளும் சுதந்திரம் சீனாவில் வாழும் 'மய்யோ' என்னும் பழங்குடிப் பெண்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது.

இளவேனில் காலங்களில் 'லீஷுங்' (Leshung) என்ற திருவிழாவை கொண்டாடுகிறார்கள் இந்த 'மய்யோ' இனத்தினர். அன்றைய தினத்தை மூன்றாகப் பிரித்து... காலை நேரம் திருமணமான ஆண்களுக்கு ஒதுக்கப்படுகின்றது. உச்சி நேரம் திருமணமான பெண்களுக்கு ஒதுக்கப்படுகின்றது. பொழுது சாயும் நேரம் திருமணமாகாத கன்னிப் பெண்களுக்கும் அவர்களை வண்டாய் மொய்க்கும் வாலிபர்களுக்கும் ஒதுக்கப்படுகின்றது.

ஆயினும் இந்த 'வண்டுகள்' எல்லை மீறாமல் மிகவும் கண்ணியமாக நடந்து கொள்ள வேண்டும் என்பது அதிமுக்கியமான விதிகளில் ஒன்று.

இரண்டு குன்றுகளுக்குடையில் உள்ள சமவெளிப்பிரதேசத்தில் இந்தத் திருவிழா நடைபெறும்.


விதவிதமாக புத்தாடைகள், பெரிய தலைப்பாகை அணிந்த திருமணமான ஆண்கள் காட்டுக்குள் சென்று சாம்பிராணி மரக்கன்றுகளைக் கொண்டு வருவார்கள்.

திருவிழா நடக்கும் இடத்தைச் சுற்றி தாங்கள் கொண்டு வந்த சாம்பிராணி மரக்கன்றுகளை நட்டு, தங்கள் முன்னோர்களுக்கு வழிபாடு செய்து தங்களுக்கு வருடம் முழுவதும் நிறைவான விளைச்சல்களை கொடுக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்து இடத்தைத் தயார் செய்வார்கள். இத்துடன் திருமணமான ஆண்களின் பணி முடிவடைகிறது.

பின்பு உச்சி வேளையில் திருமணமான பெண்கள் ஒன்று கூடி பாட்டுப்பாட ஆரம்பித்து விடுவார்கள். இவர்களின் குரல் வளத்தைப் பற்றி கேட்கவா வேண்டும்?

அம்மா! எங்களை ஒரு ராஜகுமாரிக்கு சமமாக வைத்திருந்தாய். எங்களை ஒரு வேலை கூட செய்ய விடமாட்டாய். ஆனால், இங்கே இந்த காட்டுமிராண்டி கூட்டத்தினிடையே அகப்பட்டு நாங்கள் படும் அவஸ்தைகளை எப்படி அம்மா விபரிப்போம்? என பெருங்குரல் எடுத்து அழுது கொண்டே தமது துக்கங்களை பாட்டுக்கள் மூலம் விமர்சித்து காற்று மூலம் மலை முகடுகளின் வழியே தமது பிறந்த வீட்டிற்கு செய்தி அனுப்புவார்கள் இந்தத் திருமணமான பெண்கள்.

இப்படியெல்லாம் பெருங்குரல் எழுப்பி அழுது அம்மாவிற்கு செய்தி அனுப்பிய பின்... எல்லோருமாக இடத்தைக் காலி பண்ணிவிடுவார்கள்.



அவர்கள் காலி செய்த இடத்தில் வாலிபர் இளசுகள் வந்து கூடுவார்கள். தங்கள் மனத்திற்கு பிடித்தமான பெண்களை அணுகி தமக்குத் தெரிந்த கிராமியப் பாடல்களை பாடுவார்கள். ஒரு இளைஞன் பாடும் பாடல் அந்த பெண்ணுக்கு பிடித்திருந்தால் உடனே அவளும் அவனுடன் சேர்ந்து அந்த பாடலை பாட ஆரம்பிப்பாள்; இல்லையென்றால் மௌனமாக நடந்து போய் விடுவாள். கடைசியாக தன்னை ஏற்றுக் கொள்ளுவதாகச் சொல்லும் பெண்ணுக்கு தன் சக்திக்கு ஏற்ப சில பரிசுகள் கொடுப்பான் அவன். இந்த சுயம்வரம் முடியும் போது முழு நிலா மேல் வானத்தைத் தொட்டிருக்கும். இத்தனை நேரமும் இவர்களை விட்டு பிரிந்திருந்த பெற்றோர் அனைவரும் அங்கே கூடுவார்கள்.

அந்த கிராமத்து பெரியவர் உற்சாகமான குரலில் பெயர்களைச் சொல்லச் சொல்ல... இப்பெயர்களுக்கு சொந்தமான ஜோடிகள் அருகருகே வந்து நிற்பார்கள். உடனே அந்த பெரியவர் அந்தந்த ஜோடிகளின் மறைந்த மூதாதையர்களை மூன்று முறை பெயர் சொல்லி கூவி அழைத்து... அவர்களை சாட்சியாக்கி அப்போதே அதே இடத்தில் திருமண நிச்சயதார்த்தத்தை செய்து விடுவார். மறுநாளே திருமணம், ஆறு கால விருந்து வகைகளுடன். அயிட்டங்களுடன் விருந்தின் பிரதான அயிட்டம்... மலைப்பாம்பும்... மலைப்பாம்புக் கறியும்.!!

# நெட் ஓவியம்



அருகே உள்ள இந்த படத்திலுள்ள கடற்கரைக் காட்சியைப் பார்த்ததும் இத்தனை அழகான கடற் கரை எங்கே உள்ளது என்று கேட்டு விடாதீர்கள். இது நீங்கள் காதலிப்பதற்கு ஏற்ற இடம் போல் இருக்கின் றது என்று ஆசை கொண்டு விடாதீர்கள். அங்கெல்லாம் நீங்கள் போக முடியாது. எங்களா லும் கூட்டிப் போக முடியாது. அது எங்கே இருக்கிறது என்று அதனை வரைந்த நெட் ஓவியருக்குத்தான் தெரியும். இத்தனை அழகான இடங்களை எல்லாம் அவர்கள்தான் எங்கிருந்தோ தேடிக் கண்டுபிடித்து வரைந்து அனுப்புகின்றார்கள்.

# கண்ணாமூச்சி



ஆபிரிக்க நாடு ஒன்றில் உள்ள காட்டில் இந்த மாதிரி ஒரு உருவம் விஞ்ஞானிகளால் புதிதாக கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது என்று நீங்கள் நினைத்தால் அதற்கு நாங்கள் பொறுப்பல்ல. ஆனாலும், யானைத் தலையுடைய இந்த விசித்திரக் குருவியை நாங்களும் மிகுந்த பிரயாசைப்பட்டு தேடித்தான் கண்டுபிடித்தோம் இன்டர் நெட் காட்டுக்குள்.





# நெட் கற்பனை



அடுத்த தலைமுறைக் கான செல்போன் இதுதான் என்று நாங் கள் சொன்னால் நீங் கள் நம்பித்தான் ஆக வேண்டும். அத்தனை அசுர வளர்ச்சி செல் போன் பாவனையில். ஆனால், எவ்வளவு காசு கொடுத்தாலும் இந்த போனை நீங்கள் வாங்கிக் கொள்ள முடியாது. இன்டர் நெட்டில் படமாய் போவதை எல்லாம் விற்கிறார்களா என்ன?

# சத்தமில்லாத சிரிப்பு




இந்தக் கணினி உலகில் பிறக்கும் குழந்தை 'இனி அம்மா என்று அழுமோ தெரியாது. இங்கே பாருங்கள். கணினியோடேயே இருந்து பழகி விட்ட இவருக்கு ஆபத்து நேரத்தில் கூட உதவிக்கு மனிதரை அழைக்கத் தோன்றவில்லை. F1, F1 (கணினியில் பிரயோகிக்கப்படும் உதவிக்கான கட்டளைக் குறி) என்றேதான் அவர் வாயில் வருகிறது. சரியான கணினிப் பைத்தியம் போலும்.




## இருளை நீக்கும் ஒளி...

காலையில் உதிக்கும் சூரியன் மாலையில் அஸ்தமிக்கும் போது உலகெங்கும் இருள் கவ்விக் கொள்கிறது. இது இயற்கையின் விதி.
மனித வாழ்க்கைக்கும் பொருந்தும். இயற்கையின் கைப்பிடிக்குள் சிக்கிக் கொண்டிருக்கும் உங்களின் வாழ்க்கையைப் பற்றி என்றும் சிந்திக்கும் செலிங்கோ லை'.ப், உங்களுக்காக அறிமுகப்படுத்தும் புதிய ஆயுட் காப்புறுதி செலிங்கோ பிரதீப!
நீங்கள் இல்லாத நேரத்திலும் உங்கள் மனைவி, பிள்ளைகளின் வாழ்க்கைக்கு ஒளியாகும் காப்புறுதி செலிங்கோ பிரதீப!

**ஒரு இலட்சம் ரூபா ஆயுட் காப்புறுதியைப் பெற, 5 வருடத்திற்கும் நீங்கள் செலுத்த வேண்டியது ரூபா.1,250/- மட்டுமே.**

மேலதிக தகவல்களுக்கு 2461461 ஐ அழையுங்கள்.

செலிங்கோ பிரதீப

வாழ்வின் புது ஒளி



இல. 134, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2461461 தொலைநகல்: 2437613
மின்னஞ்சல்: pradeepa@ceylife.lk
வெப்தளம்: www.ceylincolife.com/pradeepa

இலங்கையின் பதிவு செய்யப்பட்ட காப்புறுதி நிறுவனம்.

ஹோம் லோன்ஸ் பற்றிய மேலதிக விபரங்களுக்கு இக் கூப்பனை நிரப்பி அனுப்பவும்
பிரிவு முகாமையாளர் - செலிங்கோ பிரதீப
இல. 134, காலி வீதி,
கொழும்பு 03.

பெயர்: ____________________

முகவரி: ____________________

தொலைபேசி: ____________________

Minds FCB

# இமாலயப் பிரச்சினையாகிவிட்ட இலங்கைச் சமாதானம்

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க பொருத்தமான தருணம் வாய்க்கும் போது இந்த அரசாங்கத்தை தாங்கள் கவிழ்த்து விடுவோம் என்றும் அடுத்த பொதுத்தேர்தலுக்கு முகம் கொடுக்க தமது கட்சி தயாராக வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

கடந்த 7 ஆம் திகதி கண்டியில் செய்தியாளர் கூட்டமொன்றில் பேசிய அவர் அடுத்து வரும் ஒரு வருடத்துக்குள் இது நிகழும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை ஜனாதிபதி மீது குற்றப் பிரேரணை கொண்டுவருவதற்கு ஐ.தே.க முயற்சிக்கவுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அரசாங்கத்தின் சில அமைச்சர்கள் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணைகளையும் நாடாளுமன்றத்தில் முன்வைக்க ஐ.தே.க. தயாராகிவருவதாகவும் ஊகங்கள் வெளிப்பட்டுள்ளன.

## ஜனாதிபதி பதவியை வறிதாக்கல் சாத்தியமாகுமா?

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை அறிமுகப்படுத்திய 1978 ஆம் ஆண்டின் இலங்கை அரசியல்யாப்பின் அத்தியாயம் VII இ உறுப்புரை 38 இன் பிரிவு (2) இன் அடிப்படையில்தான் ஐக்கிய தேசியக் கட்சி, ஜனாதிபதி மீதான குற்றப் பிரேரணையைக் கொண்டுவர முயற்சிக்கலாம்.



அந்த உறுப்புரை 38 இல் பிரிவு (2) இன் சாரம்சத்தை வாசகர்கள் அறிந்து கொள்ள வேண்டும். (2) (அ) நாடாளுமன்ற உறுப்பினர் எவரும் சபாநாயகருக்கு முகவரியிட்டனுப்பும் கடித்தின் மூலம், மனப் பலவீனம் அல்லது உடற் பலவீனம் காரணமாக ஜனாதிபதி அவரது பதவிக்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு நிரந்தரமாக இயலாதுள்ளாரெனக் காரணம் காட்டி அல்லது ஜனாதிபதி, பின்வரும் குற்றைப் புரிந்ததற்கு குற்றவாளியாகவுள்ளாரெனத் தெரிவிக்கின்ற தீர்மானம் பற்றி அறிவித்தலொன்றைக் கொடுக்கலாம்:—

(I) அரசியலமைப்பினை வேண்டுமென்றே மீறிய குற்றம்.

(II) தேசத்துரோகம் புரிந்த குற்றம்,

(III) இலஞ்சம் பெற்ற குற்றம்,

(IV) தமது பதவிக்குரிய அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்தமையை உள்ளடக்கிய துர்நடத்தைக்கான அல்லது ஊழல்களுக்கான குற்றம், அல்லது

(V) ஒழுக்கக்கேட்டை உட்படுத்தும் ஏதேனும் சட்டத்தின் கீழான ஏதேனும் தவறு;

அத்துடன் சுமத்தப்பட்ட குற்றஞ்சாட்டுகள் அல்லது குற்றஞ்சாட்டுக்கள் பற்றிய முழு விவரங்களையும் அத்தீர்மானம் தருதல் வேண்டும் என்பதுடன், உயர்நீதிமன்றத்தினால் அதன் மீது விசாரணை நடத்தப்படுதல் வேண்டுமெனவும், அறிக்கை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமெனவும் கோருதலும் வேண்டும்.

(ஆ) அத்தகைய தீர்மானம் பற்றிய அறிவித்தல் எதுவும், (அ) எந்தனும் உட்பந்தியின் ஏற்பாடுகளுக்கு இணங்கி ஒழுகத் தவறினாலும்.

(I) அத்தகைய தீர்மானம் பற்றிய அறிவித்தல், நாடாளுமன்ற உறுப்பினர்களின் முழு எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்கினருக்குக் குறையாதவர்களால் கையொப்பமிடப்படத் தவறினாலும் அல்லது.

(II) நாடாளுமன்ற உறுப்பினர்களின் முழு எண்ணிக்கையிலும் அரைவாசிப் பங்கினர்களுக்கும் குறையாதவர்களால் கையொப்பம் மிடப்பட்டிருப்பதுடன், அத்தகைய குற்றஞ்சாட்டுதல் அல்லது குற்றஞ்சாட்டுதல்கள் நீதிமன்றத்தினால் அதன் மீது அல்லது அவற்றின்மீது விசாரணை நடத்தப்பட்டு அறிக்கை செய்யப்படத் தகவுடையது அல்லது தகவுடையன என சபாநாயகர் திருப்தியடையத் தவறினாலும்.

சபாநாயகரினால் ஏற்றுக் கவனிக்கப் படுதலோ அல்லது நாடாளுமன்றத்தின் நிகழ்ச்சித்தாளில் இடப்படுதலோ ஆகாது...

ஐக்கிய தேசிய கட்சி ஜனாதிபதி மீது குற்றப்பிரேரணை கொண்டுவருவதற்கு சாதகமாகவுள்ள சட்டரீதியான சாதகநிலை மேலே கீழ்க்கோடிட்ட பகுதி சார்ந்ததாகும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதியான லொக்கு பண்டார சபாநாயகர் பதவியில் இருப்பதனால் ஐக்கிய தேசியக் கட்சி குற்றப்பிரேரணையைக் கொண்டுவரும் பட்சத்தில் அது நாடாளுமன்ற நிகழ்ச்சித்தாளில் இடம்பெற்று விவாதிக்கப்படக்கூடிய ஏது நிலைகள் போதியளவு உள்ளன.

## 2/3 சாத்தியமில்லை

ஆனால், அரசியல் யாப்பின்படி அத்தகைய தீர்மானம் (குற்றப்பிரேரணை), நாடாளுமன்ற உறுப்பினர்களின் முழு எண்ணிக்கையில் (சமுகமளிக்காதோர் உட்பட) மூன்றில் இரண்டு பங்கினருக்கு குறையாதவர்கள் அதற்குச் சாதகமாக வாக்களிப்பதன் மூலம் நிறைவேற்றப்பட்டால், அதனை விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு சபாநாயகர் உயர்நீதிமன்றத்திடம் கேட்கமுடியும்.

அவ்வாறு சபாநாயகர் கேட்கும் பட்சத்தில் ஜனாதிபதி தன்சார்பில் தானே நீதிமன்றத்தில் தோற்றவும் அல்லது தமது சட்டத்தரணிமூலமே தம் வழக்குரைக்கவும் யாப்பின்படி உரித்துடையவர்.

அத்துடன், உயர்நீதிமன்றத்தில் ஜனாதிபதி மீதான குற்றஞ்சாட்டுதல்கள் நிரூபிக்கப்பட்டு ஜனாதிபதி குற்றவாளியாகவிருக்கிறார் என்று தாம் அபிப்பிராயப்படுவதாக நீதியரசர் நாடாளுமன்றத்துக்கு அறிக்கை செய்யுமிடத்து, நாடாளுமன்றம், நாடாளுமன்ற உறுப்பினர்களின் முழு எண்ணிக்கையில் (சமூகமளிக்காதோர் உட்பட) மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையாதோர் அதற்குச் சாதகமாக வாக்களித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானமொன்றின் மூலம் ஜனாதிபதியைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

இலங்கை அரசியலமைப்பின் சட்டரீதியான யதார்த்தங்களையும், தற்போதைய இலங்கை நாடாளுமன்றத்தில் கட்சிகளின் பிரதிநித்துவங்களின் எண்கணிதரீதியான போக்கையும் அவதானித்தால் தற்போதய இலங்கை ஜனாதிபதி மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டால் அவரை பதவியிலிருந்து அகற்றும் நிலைவரை அது முன்னேறப் போவதில்லை என்பது தெளிவாகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதி மீதான குற்றப்பிரேரணையை கொண்டுவந்தால், அதை சபாநாயகர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு ஏற்றுக்கொண்டாலும் அது மூன்றில் இரண்டால் நிறைவேற்றப் படுவதற்குச் சந்தர்ப்பமில்லை.

அது அவ்வாறு நிறைவேறுவதாகக் கற்பனை செய்து கொண்டாலும், உயர்நீதிமன்றம் ஜனாதிபதி மீதான குற்றசாட்டுக்களை விசாரித்து அவரை குற்றவாளியென அபிப்பிராயப்படும் சூழ்நிலை எள்ளளவு கூட எழும் என்று எவரும் எதிர்பார்க்கமுடியாது (இது உயர் நீதிமன்ற நீதியரசர்களின் நன்றிக்கடனும் சம்பந்தப்பட்டது.)

## அகற்றும் முயற்சி முயற்கொம்பு!

ஆகையினால் ஜனாதிபதி மீது குற்றப் பிரேரணை கொண்டுவந்து அவரை பதவியிலிருந்து அகற்ற எவராவது முனைவது முயற்கொம்பு காட்டுதல் போலாகும்.

எனவே ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதி மீது குற்றப்பிரேரணை கொண்டுவரப்போவதாகச் சொல்லத்தொடங்குமானால் அதுபெரும் ஊடகப்பரப்புரைக்கான கருத்தோட்டத்தை வளர்த்தெடுப்பதாகவே அமையும்.

தற்போதேய அரசாங்கத்தின் ஆயுட்காலம் ஏறத்தாழ இன்னும் ஒரு வருடத்துக்கு மட்டுமே என்று வரையறுத்து தீர்ப்பெழுதத் தயாராகிவரும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரசிங்காவும் அவரது ஏனைய அரசியல் சகபாடிகளும், இயல்பாகவே 2005 ஆம் ஆண்டு இறுதிமாதங்களில் முடிவடையும் ஜனாதிபதியின் இரண்டாம் தவணைக்கான பதவிக்காலத்தை, அதற்கு முன்பாகவே குற்றப்பிரேரணை மூலம் முடித்துவிட ஆயத்தமாவதாக காட்டமுயல்கிறார்..

இதன் மூலம் அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும் சரி, அதனுடன் அல்லது அதற்கு முன்பதாகவரும் என எதிர்ப்பார்க்கப்படும் நாடாளுமன்றத் தேர்தலிலும் சரி, ஐக்கிய தேசியக் கட்சிக்கான சாதகமான ஒரு அரசியல் சூழ்நிலையை வாக்காளர்கள் மத்தியில் தோற்றுவிப்பதற்கு முயற்சிக்கிறார்கள்.

எனினும் இவ்வாறான குற்றப்பிரேரணைகள் பற்றி ஐ.தே.க. ஊடகங்களை உசுப்பிக்கொண்டிருப்பது ஜனாதிபதிக்கு ஒரு நெருக்குதல் தான்.

## 113 என்ற மந்திர எண்!

முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் அணிக்குள் ஏற்பட்டுள்ள உடைவும் அதனால் சில முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தை ஆதரிக்கும் சூழ்நிலை எழுந்துள்ளதனாலும் அரசாங்கத்துக்கு இப்போதைக்கு நெருக்கடி வரப்போவதில்லையென்றாலும் அது தனது நாடாளுமன்ற ஜனநாயக பலத்தை ஸ்திரப்படுத்தக்கூடிய சூழ்நிலை எழமாட்டாது.



இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸை 'வளைப்பதற்கான' முயற்சிகளும் வெற்றி பெறவில்லை.

ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்து ஏப்ரலில் ஏன் தேர்தல் நடத்தினாரோ அந்த நோக்கத்தையே கைவிடுமாறு ஆறுமுகம் தொண்டமான் தனது பேரம் பேசலில் ஜனாதிபதியின் கூட்டாளிகளிடம் கேட்டிருந்தார்.

அதாவது அரசியல் நிர்ணய சபை அமைத்து அரசியல்யாப்பொன்றை புதிதாக அமைத்தல் என்ற ஜனாதிபதியின் பிரதான நோக்கத்தை கைவிடும்படி ஆறுமுகம் கேட்டிருந்தார்.

விகிதாசார தேர்தல் முறைமையை நீக்குதல், மேல் கொத்மலைத்திட்டத்தை அமுலாக்க முனைதல் ஆகியவற்றுக்கும் அவர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், முக்கியமான சில அமைச்சுக்களையும் அவர் கோரினார். இவை அனைத்தும் ஜனாதிபதிக்கு விசனத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியதனால் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்துவிட்டன.

எனினும் இலங்கைக்கான இந்திய இராஜதந்திரி ஒருவர் தற்போதைய அரசாங்கத்தை பலப்படுத்தி ஸ்திரப்படுத்துவதில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உதவியை பெறமுடியும் என்ற நம்பிக்கையுடன் தான் இருக்கிறார் என்று அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

113 உறுப்பினர்களின் ஆதரவுதான் ஜனாதிபதிக்கு தேவையான ஆகக்குறைந்த மந்திரசக்தி.

## ஜே.வி.பிஐயும் தணிக்க முயற்சி!

குறிப்பிட்ட அந்த இந்திய இராஜதந்திரி தன்னால் ஜே.வி.பியையும் தணிந்துபோகும் நிலையில் பேணமுடியும் என்றே நம்புகிறார்.

ஜே.வி.பியின் சோமவன்ஸ அமரசிங்க 1980 களின் பிற்பகுதியில் இந்திய இலங்கை ஒப்பந்தத்தையடுத்து, இந்திய இராணுவம் இலங்கையில் நிலைகொண்டிருந்த காலத்தில், ஜே.வி.பிஇன் கிளர்ச்சியின் பின்னர் தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக இலங்கையிலிருந்து மறைந்து வெளியேறியமைக்கு உதவியவர் குறிப்பிட்ட அந்த இராஜதந்திரிதான் என்று கொழும்பு ஊடகவியலாளர்களிடம் ஊகங்கள் நிலவுகின்றன.

எது எவ்வாறாகவிருப்பினும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் ஜே.வி.பியும் இலங்கையின் உள்நாட்டு அரசியல் யதார்த்தங்களுக்கு ஏற்பவே தமது தீர்மானமெடுக்கும் வலுவைப் பிரயோகிக்கும் என்பதில் பல அவதானிகள் தெளிவாக இருக்கிறார்கள்.

## சமாதானத்தின் விலை 4.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள்

முடிவடையவிருக்கும் தனது பதவிக் காலத்துடன் ஈடாடுகின்ற தனது அரசாங்கத்தையும் தினம் எச்சரித்து பயமுறுத்துகின்ற தோழமைக்கட்சியுடன் ஜனாதிபதி சற்றும் நிம்மதிப்பெருமூச்சு விடமுடியாதவராகவே உள்ளார்.

தேர்தலில் வாக்குறுதியளித்தபடி சமாதானப்பேச்சுகளை மீண்டும் விடுதலைப்புலிகளுடன் ஆரம்பித்து அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம், நோர்வே உலகவங்கி, சர்வதேச நாணயநிதியம் ஆகிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் பெரும் நிதியை பெறுவதில் ஜனாதிபதியும் அவரது அரசாங்கமும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளன.

கடைசியாக பெல்ஜியம் தலைநகர் பிரஸல்ஸில் நடைபெற்ற கூட்டத்தில் ஏற்கனவே ஒத்துக் கொள்ளப்பட்ட 4.5 பில்லியன் அமேரிக்க டொலர்களை வழங்குவதுபற்றி 'மதிப்பீட்டு – மீள்பரிசீலிப்பு' மாநாட்டில் இணைத் தலைமை வகிந்த அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், நோர்வே ஆகியவை பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டு. அதில் முன்னேற்றம் கண்டால் மாத்திரமே 40.5 பில்லியனும் படிப்படியாக வழங்கப்படும் என்ற கூட்டு ஆவணவரைமொன்றை வெளியிட்டுள்ளன.

இந்நிலையில் சமாதான தேவதையை காதலிக்கமுடியாது என்று பிடிவாதம் காட்டும் ஜே.வி.பி ஐ எவ்வாறு வழிக்குக்கொண்டு வந்து. விடுதலைப்புலிகளுடன் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை (ISGA) யோசனைகளைப்பற்றி பேசுவது என்பதே அரசின் இமாலயப்பிரச்சனை!

இமாலயநாட்டின் இராஜதந்திரத்தை கூடப்பயன்படுத்தி ஜே.வி.பியை வழிக்குக் கொண்டுவந்து 4.5 பில்லியன் டொலர்களைப் பெற்று நாட்டின் பெரும்பாகப் பொருளாதாரத்தை (Macro Ecenomy) சிக்கல்களின்றி முகாமைப்படுத்தி தனது அரசியலை பலப்படுத்த ஜனாதிபதி முயற்சிக்கத் தொடங்கியிருப்பார் என்றே எதிர்பார்க்கலாம்.

— யாழ்.ஆத்மா —


## 'சுடர் ஒளி' வார மலர் விளம்பரக் கட்டணம்

| அளவு | கறுப்பு/வெள்ளை | கலர் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ.30,000.00 | ரூ. 45,000.00 |
| அரைப்பக்கம் | ரூ.15,680.00 | ரூ. 23,520.00 |
| C.M. | ரூ. 98.00 | ரூ.147.00 |
| Page Specified C.M.Cl | ரூ.122.50 | ரூ. 183.75 |
| Contract ADV. | ரூ. 70.00 | ரூ. 110.00 |
| (250-300 Col. C r.) | | |



# அரசியல் அம்பலம்

## கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டாதாம்

"என்னங்க ஐயா போன வாரம் இருந்த கம்பீரத்தையும் கலகலப்பையும் இப்ப காணோமே! என்ன உங்களுக்குள் பூசலா?" என்று கேட்டோம் சாமியானவரிடம்.

எங்கேயோ பார்த்துக்கொண்டிருந்த சாமியானவர் திடுக்கிட்டவராக "அடடே நீங்களா வாங்க தம்பி.என்ன கேட்டீங்க?" என்றார்.

"ஒன்றும் இல்லை ஏதோ கோட்டையைப் பிடிக்க திட்டம் போடுறமாதிரி இருக்கே! அது தான் கேட்டோம்" என்றார் நண்பர்.

"என்ன சார் எல்லாக் கோட்டையும் தான் மணல் கோட்டையாக இடிந்து விழுந்துவிட்டதே" என்றார் சாமியானவர் கவலையுடன்.

"ஆமாம் ஆமாம் கடைசிக்காலத்திலாவது ஒரு அமைச்சராகிவிடலாம். பொலிஸ் பந்தோபஸ்தோடு பவனி வரலாம் என்று ஆசைப்பப்பட்டீர்கள். என்ன செய்வது"

"அப்படி இல்லை தம்பி. நாங்க ஒன்னும் ஆசைப்படவில்லை. நம்ப சனங்க தான் அப்படி ஒரு தீர்மானம் எடுத்தாங்கள். எதிர்க் கட்சியில் இருந்து என்ன சாதிக்கப்போகிறோம், அரசுடன் சேர்வோம் என்று தீர்மானித்தார்கள்" என்றார் சாமியானவர்.

"வழமையாகவே மேலிடம் சிலவிடயங்களை அச்சடித்து உறுப்பினர்களிடம்கொடுத்துவிடும். கூட்டம் கூட முன் ஒரு சாப்பாட்டுப் பார்சலுடன் தாக சாந்தியும் நடைபெறும். போதையில் இருக்கும்போது கூட்டம் நடைபெறும். யார் எதை வாசித்தாலும் கை தூக்கி விட்டு வருவார்கள். மப்பு ஏறிய சிலர் இரண்டு கைகளையும் கூட தூக்குவார்கள். வாக்கு எண்ணுபவர் அதையும் தவறாமல் சேர்த்து எண்ணிக்கொள்வாராம். கை தூக்கியவருக்கோ ஏன் தூக்கினோம் என்பதும் தெரியாதாம். இது அவர்களே சொன்னது. நீங்கள் என்னமோ மக்கள் தீர்மானம் என்கிறீர்களே" என மடக்கினார் நண்பர்.

"என்ன தம்பி உங்களுக்கு நல்லாத் தெரியும். நம்ப ஆளுங்க எழுதப்படிக்க தெரியாதவங்க. அதனால் தான் தெளிவா தீர்மானங்களை அச்சடித்துக்கொடுத்து விடுகிறோம். அதில் என்ன தப்பு" என்றார் சாமியார்.

"ஒன்றுமே தப்பு இல்லை. நீங்கள் எழுதிக்கொடுப்பதற்கு அவர்கள் ஆமாம் சாமி போடுகின்றார்கள். கடைசியில் மக்களின் ஏகமனதான தீர்மானம் என்று கூறுகின்றீர்கள் அவ்வளவுதான்." என மடக்கினார் நண்பர்.

"என்ன தம்பி என் கையை எடுத்து என் கன்னத்திலேயே அடிச்சுப்புட்டீங்களே! நான் அப்படிச்சொல்லவில்லை. இதைப்பாருங்க..." எனத்தடுமாறினார் சாமியார்.

"சரி சரி அதை விடுங்க. எல்லோரும் தீர்மானம் தீர்மானம் என்கிறீர்கள். ஆனால் ஒருவர் சேர மாட்டோம் என்கிறார். அடுத்த வாரம் சேருகிறோம் என்கிறார். அடுத்தவர் மற்ற இன்ன இன்ன அமைச்சு எங்களுக்கு என்று அடித்துச்சொல்கிறார். ஒரே வீட்டில் ஒன்பது கோமாளிகளா?" என மீண்டும் சீண்டினார் நண்பர்.

"தம்பி சரியாத் தான் சொன்னீங்க. நம்ம ஆளுங்க ஒவ்வொருத்தரும் தங்கள் தங்கள் பெயர் வரவேணும் என்பதற்காக எதை எதையோ உளறிவிடுகிறார்கள். இனிமேல் அந்தப் பருப்பு வேகாது. அதுக்கும் ஒரு திட்டம் போட்டுவிட்டோம்" என்றார் சாமியார்.

"என்ன அதற்கும் ஒரு திட்டம் போட்டு விட்டீர்களா?" என்றார் நண்பர் கிண்டலாக.

"நீங்க விடமாட்டீங்க. போல இருக்கே! திட்டமும் இல்லை, மண்ணாங்கட்டியும் இல்லை. எல்லாம் எங்கள் தலைவர் போட்ட சட்டம். இனிமேல் யாரும் வாய் திறக்க முடியாது" என்றார் சாமியார்.

"தலைவரின் சட்டம் என்கிறீர்கள். ஆனால், தலைவரின் சட்டத்தை 'வீட்டோ' அதிகாரம் கொண்டு ரத்துச்செய்வது போல் இவ்வளவையும் கொட்டிவிட்டீர்களே" என்று மடக்கினார் நண்பர்.

என்ன தம்பி அப்படிச்சொல்லிப்புட்டீங்க. நம்ப சேர்விஸ் என்ன? அனுபவம் என்ன? ஒங்க மாதிரி பேனா நண்பர்கள் எத்தனை பேருடன் பழகிறேன். பேசுறேன். இதைத் தடுக்க யாராலும் முடியாது." என்றார் சாமியார்.

பாவம் கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்பது போல் இருக்கிறது இந்தக் கதை. அதுவும் சரிதான். எப்படி மண் ஒட்ட அவருக்குத்தான் மீசையே இல்லையே!

## மரத்தில் தொங்கும் செட்டியார் கணக்குப் பார்க்க கைவிரித்த கதை

"தென்னை மரத்தில்தொங்கிக் கொண்டிருக்கும் செட்டியார் கையை விரித்துக் கணக்குப் பார்த்த கதையாகப்போகுது இந்தப்புள்ளேயின் நிலைமை" இப்படிக் கூறிக் கொண்டே வந்தார் தனித்துவ நாயகன்.

"என்ன ஐயா மிகவும் குஷியாகவருகிறீர்களே!" என்று இடைமறித்தார் நண்பர்.

"ஓ! ஐ யாம் சொரி, கவனிக்கவில்லை. என்ன சார் புதிய செய்தி" என்றார் தனித்துவ நாயகன்.

"புதிய செய்தி என்னவென்டால் உங்கட சகாக்களையும் சேர்த்து அல்லவா நம்ப புள்ளே அண்ணன் கணக்கு காட்டுகிறார். அது சரியோ?" என்றார் நண்பர்...

"என்ன சார் நீங்க வயிற்றில் இருக்கும் பிள்ளைக்கு பெயர் வைக்கின்றார் புள்ளே. இப்ப பாருங்க அந்த போஸ்டர்காரர்களுக்கும், கைகாரர்களுக்கும் மோதல் ஆரம்பித்து விட்டது. மலையகத் தலைவரை கைக்குள் போடக் காவடி எடுத்தார்கள். அந்தக் காவடியும் முறிந்து போச்சு.

அடுத்த கட்டமாக காவி சாமியார் களும் காலைப்பிடித்து தலைகீழாக அடித்து விட்டார்கள்.

இப்போது என்ன வெண்டால் தனித்துவக்கட்சியில் இருந்து ஐந்து பஞ்ச பாண்டவர்கள் வரப் போகின்றனர் என்கிறார்கள். இது எல்லாம் பகல் கனவு" என்றார் தனித்துவ நாயகர்.

"நீங்கள் இப்படிச் சொல்கின்றீர்கள். ஆனால் உங்களால் தூக்கி எறியப்பட்ட நபர் இப்போது அம்மாவின் தரகராக மாறிச் செயற்படுகின்றதாக ஒரு கேள்வி. உங்கள் சகாக்கள் பலருக்குப் பல பதவிகள் கொடுக்கவும் பேரம் பேசப் படுகின்றதாமே" எனச் சாடையாக சீண்டினார் நண்பர்.

"ஓம் ஓம் என்னிடமும் கூறினார்கள்தான். என்ன சார் மூழ்கிக் கொண்டிருக்கும் கப்பலில் யாரும் ஏறுவார்களா? இது எல்லாம் ஒரு புலுடாதான். இது எப்படி இருக்கு என்டால் காலில் தொங்கிக் கெண்டிருக்கும் யானைப் பாகன் தருவதாகக் கூறிய பணத்தையும் சேர்த்துக் கணக்குப்பார்க்க எண்ணி கையை விரித்தாரம் செட்டியார். கடைசியில் எல்லோருமே ஆற்றில் வீழ்ந்து மாண்னராம். அதைப்போல்தான் நம்ப புள்ளே அண்ணனும் கணக்குப் பார்க்க கைவிரிக்கின்றார். அவ்வளவுத்தான்" என்றார் தனித்துவ நாயகன். இது எப்படி இருக்கு?

## எரிகின்ற வீட்டிலயும் பிடுங்கியது லாபம் போல

"எரியிற விட்டில பிடுங்கியது இலாபம். செத்த வீட்டிலும் தேர்தல் பிரசாரமா?" இப்படி நெருப் பெடுத்தார் ஒரு மூத்த அரசியல் வாதி

"என்ன ஐயா ஒரு மணி நேரமாக வெயிலில் நின்றதால் தலை கொதித்து விட்டதோ?" என்றார் அவரது சகா.

"இல்ல மச்சான், அங்கேயும் இங்கேயும் எங்கட சகோதரர்களை நாயை சுட்டுத்தள்ளுவது மாதிரி சுட்டுத் தள்ளுறான்கள். இங்கே பெரும்பான்மை ,சிறு பான்மை என்று பேதம் பார்க்காமல் ஒன்று கூடி அனுதாப ஆர்ப்பாட்டம் நடத்துகின்றனர்". என்றார்.

"என்டை அப்பா, இது உனக்கு விஷயம் புரிய வில்லையே. ஊடகம் என்றால் அங்கே கறுப்பு, பச்சை ,வெள்ளை என்று பேதம் இல்லை. எல்லாமே பேனாவும் பேப்பரும் தான். அதுதான் எல்லோரும் பேதமின்றி கூடி உள்ளனர். வரவேற்கத்தக்க விடயம் தானே! என்றார் நண்பர்.

"என்ட வாயில இப்ப நல்லாத்தான் வருது. அது நம்ப எல்லோருக்கும் சந்தோசம். ஆனால் அந்தப்பக்கம் பாரு, எல்லா அரசியல் வாதிகளும் பத்திரிகையாளர் படுகொலைக்கு கண்டனம் தெரிவிக்கும் போஸ்டர்களையும் பேனர்களையும் பிடித்துக் கொண்டுவெய்யிலில் நிற்கின்றனர் என்றார் மூத்த அரசியல் வாதி.ஆமாம் ஆமாம் நல்லாத்தானே இருக்கு. அரசியல்வாதிகளின் ஆதரவும் தேவை தானே! இதில் என்ன தப்பு?" என்றார் நண்பர்.

"நீ ஒரு டியூப் லைட் உடனே புரிந்து கொள்ள மாட்டாய். அங்கே பாரு, ஒரு அரசியல் வாதி கூட்டத்தோடு கோவிந்தாவாக தனது கட்சியின் (பெனர்) கொடிக்கு முன் அழகாகப் போஸ் கொடுக்கின்றார்" என்று சுட்டிக் காட்டினார் மூத்தவர்.

"அடப்பாவி மனுசா மேல ஏறி வர வேண்டும் தான் அதற்காக இப்படி சீப் பப்ளிசிட்டி "தேடவேண்டுமோ அதுவும் அனுதாப ஆர்ப்பாட்டமேடையில். என்ன செய்வது எல்லாம் அரசியல் இலாபம் தேடித்தான். அண்மையில் மாகாணசபைத் தேர்தல் வருகுதல்லோ அதுக்கு இதுவும் ஒரு விளம்பரம் தான் போலும், என்று வேதனைப் பட்டார் அந்த மூத்த அரசியல்வாதி.

"அப்படி என்டால் எரியிற வீட்டிலையும் பிடுங்கியது இலாபம் என்கிறீர்கள் அப்படித் தானே!" என்று முடித்தார் நண்பர்.

## ஐயா சொன்னாச் சொன்னது தான் அப்பீலே கிடையாது

ஆறுமுக சாமியின் தொண்டர்கள் அனைவரும் அன்று அதி உயர் பீடத்துக்கு கூட்டமாகக் காவடி எடுத்து வந்தனர். அங்கே பல்வேறு முரண்பாடுகளைக் கொண்ட பல வர்ண கட்சிக்காரர்களும் சங்கமமாகி இருந்தனர்.

இத்தனை கூட்டத்துக்கும் மத்தியில் அந்த யோகமானவர் நன்றிப்பெருக்குடன் அருகில் வந்தார்.

"அண்ணே! அன்று தக்க சமயத்தில் நீங்கள் போட்ட செய்தி பெரிய நன்மை அளித்து விட்டது. அந்தா போகிறார்கள், இந்தா போகிறார்கள் என்று செய்திகள் அடிபட்ட போதிலும் இது ஒரு புரளி என்று அடித்துக்கூறிவிட்டீர்கள். இதனால் சந்தேகத்தில் இருந்த எம்மவர்களுக்கு தெளிவு ஏற்பட்டது. உங்களுக்கும் உங்கள் பத்திரிகைகளுக்கும் நன்றி" என்றார் அந்த யோகமானவர்.

"எல்லாம் சரிதான். சேருவோம் என்ற செய்தியையும் பக்கத்திலேயே போட்டு புட்டு வைத்துவிட்டீர்களே சார். அது தான் எமக்கு மொத்து வாங்கிவைத்து விட்டது." என்றார் பக்கத்தில் நின்றவர்.

"எங்களுக்கு நீங்கள் எல்லோருமே வேண்டும். யார் சொன்னாலும் நல்ல விடயம் என்றால் போடத்தானே செய்வோம்." என்றார் நண்பர்.

"அதுதான் உங்களிடம் வாய் திறக்கவே பயமாக இருக்கின்றது" என்றார் சாமியின் பக்தர்.

"அண்ணே பேசுகிறோம் என்பதற்காக எல்லாவற்றையும் பேசிவிடலாமோ.சற்று சமயோசிதமும் வேண்டும். அதோடு சூழ் நிலைக்கேற்ப தீர்க்க தரிசனமும் வேண்டும்" என்று போடு போட்டார் யோகமானவர்.

என்ன செய்வது? கட்டாயமாக சேருகிறோம். மாகாணசபை தேர்தலுக்கு முன்பே சேருகிறோம். இந்த அமைச்சுக்கள் தான் எங்களுக்கு என்று அடித்துக்கூறியவர் இதைக்கேட்டவுடன் மெதுவாக நழுவிவிட்டார்.

என்ன செய்வது நிலைமை தலைகீழாக மாறிவிட்டதே!


# சுடர் ஒளி விளம்பரக் கதம்பம்

## காணி விற்பனைக்கு

இரத்மலான, கொள்ளுப்பிட்டிய, Main Road Facing 10 P - 18 P காணிகளும், கல்கிசை, தெஹிவளையில் 10 1/2 பேச், 42 பேச், 20 பேச், 13 பேச் வெற்றுக் காணிகளும் Galle Road Facing Commercial Building களும், வெள்ளவத்தை, பம்பலப்பிட்டிய, கொள்ளுப்பிட்டிய மற்றும் டுப்ளிகேசன் றோட் Main Road Facing 10 P - 15 P - 12 P 4 மாடிகள், 3 மாடிகள், 2 மாடிகளைக் கொண்டு வியாபார கட்டடங்களும், இன்னும் காணிகளும், ஹெவ்லொக் வீதி Facing கிருலப்பனை சந்தியில் 8 P 3 B/R Building விற்பனைக்குண்டு.

www.famous Deen.com

2360321 - 4510920 - 187/1, காலி வீதி, வெள்ளவத்தை.

வெள்ளவத்தையில் உடனடி குடிபுகக் கூடிய 2 மாடி வீடுகள் புதிய Luxury வீடுகள் 5 B/R, 6 B/R, 4 B/R, 16 1/2 பேச் - 8 1/2 பேச் 14 1/2 பேச் - 10 1/2 பேச் இல் விற்பனைக்குண்டு. இன்னும் பழைய 6 பேச் கொண்ட வீடும் உடனடி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 2360321 - 4510920

187/1, Galle Road, Wellawatte, (opp. to HNB)

தெஹிவளையில் காலி வீதிக்கு அருகாமையில் 10P - 8 1/2 P, 6 B/R - 4 B/R வீடுகள், இன்னும் 21 பேச்சில் இரண்டு வீடுகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 0785611164

கல்கிசை, தெஹிவளை, வெள்ளவத்தை வரைக்கும் 3 1/2 பேச் - 8 1/2 பேச் - 9 பேச் - 12 பேச் புதிய, பழைய வீடுகளும் இன்னும் காணி வளவுகள், 6 - பேச், 10-20, 32, 40, 52 பேச் வரையிலான காணிகளும் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 0785108218, 2360321

வெள்ளவத்தை கொழும்பு - 6, பம்பலப்பிட்டி, கொழும்பு 5, கொழும்பு 7 ஆகிய பகுதிகளில் 6 பேச் தொடக்கம் 2 மாடி பழைய, புதிய வீடுகள் 10, 20, 30 பேச் வரையிலான காணி வளவுகளும், Seaside Marine Drive 20P, 10P, 30 - 50 வரையான பேச்சில் காணி வளவுகளும் உடனடி விற்பனைக்குண்டு.

WWW.Famousdeen.com

2360321 - 4510920

## பழுதுபார்த்தல்

TV, Radio மற்றும் CD, VCD போன்ற உபகரணங்களைத் திருத்திக்கொள்ள அழையுங்கள். (வீட்டிற்கு வந்து திருத்திக்கொடுக்கப்படும்)

தொடர்புக்கு:- செல்வராஜா

Prince Electronics (Dehiwala Arpico)

T.P: 0777- 584708. (1854)

## CD விற்பனை

சகல விதமான தமிழ் Software களும் நியாய விலையில் விற்பனைக்குண்டு. புதிய வெளியீடு 'தமிழா' குறுவட்டு. உங்கள் கணினியை யுனிக்கோட் மூலம் தமிழ்மயப்படுத்தலாம். தமிழ் ஓப்பின் ஓபீஸ், தமிழ் தட்டச்சு மென்பொருட்களும் உள்ளடக்கப்பட்டுள்ளது. விலை ரூபா 200/= தபாலிலும் பெறலாம்.

தொடர்புக்கு:- 071 4801391,

www.nilavu.com

## ஆங்கிலக் கல்வி

Spoken English பெரியோர்களுக்கும், சிறியோர்களுக்கும் தனிப்பட்ட ரீதியில் மணிக்கு 65 ரூபா. இளைப்பாறிய ஆசிரியரால் கற்பிக்கப்படும். நவீன உத்திகளைப் பயன்படுத்தி உங்கள் பேச்சுத்திறனை விருத்தி செய்யுங்கள். 250இற்கும் மேற்பட்ட Dialogues கற்பிக்கப் படும்.

காட்டூன் மூலம் விளக்கம் திடமான வளர்ச்சியை உறுதிப்படுத்த பல்வேறு செயற்பாடுகள். வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விரிவுரைப் பயிற்சிகள் (நேர்முகம், வேலை போன்ற தேவைகளுக்கும் கூட A.M.S. Wellawatta, T.P.0112508062. (1813)

## கணினிக் கல்வி

எந்தத் தரப்பினருக்குமான கணினிக் கல்வி. சிறுவர்கள் ,மாணவர்கள், அலுவலக ஊழியர்கள், ஆசிரியர்கள், இல்லத்தரசிகள் மற்றும் அனைவருக்கும் உங்களிடத்திலோ அல்லது எமதிடத்திலோ MSoffice, Operating System (Windows & Dos), Internet & E-Mail, HTML, Visual Basic, PhotoShop, Flash,- C++, Java அத்துடன் கணினி திருத்தல் அனுபவம் திறமை உத்தரவாதத்துடன் கற்பித்தல்.

தொடர்பு: 0714 - 822232. (1810)

கணினி பாடநெறிகள் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும். (அச்சிடப்பட்ட குறிப்புக்களும் வழங்கப்படும்.) ஒரு கட்டணத்தில் இருவர் கற்கலாம். Windows 1,500/=, E-Mail & Internet 1,000/=, Ms office 5,000/= Page maker 2,500/=, Photoshop 2,500/=, VisualBasic 4,500/=, HTML 2,500/=, Java 2,500/=, Basic Computer 4,500/= மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான வகுப்புக்கள், சகல வசதிகளுக்கும் அவரவர் தேவைக்கேற்றவாறு கற்பிக்கப்படும். வத்தளை தொடக்கம் கல்கிஸ்ஸை வரை தொடர்புகளுக்கு:- 071 - 4885093. (1812)

# கர்ப்பகாலமும் பெண்களுக்கு ஏற்படும் வாந்தியும்

**கேள்வி:— எனது நண்பனின் மகன். வயது 20. தனது நண்பர்களோடு விடுமுறைக்காக மலைநாடு சென்று திரும்பும் வழியில் சிற்றாறுகளில் குளித்து வந்திருக்கிறார்கள். வந்த ஓரிரு நாட்களின் பின்னர் கடுமையான காய்ச்சல்— உடல் வலி ஏற்பட்டு இரண்டொரு நாட்களில் காமாலை நோய் வந்தது. இப்பொழுது அரசாங்க வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை கொடுக்கப்பட்டு வருகின்றது. அவரது சிறுநீரகம் பாதிக்கப்பட்டிருப்பதாக வைத்தியர் கூறுகிறார். எலியின் சிறுநீர் கலந்த நீரைப் பருகியதால் தான் இந்த நோய் ஏற்பட்டது என்று வைத்தியர் கூறியதாக நண்பர் கூறினார். இது என்ன நோய்? எலியின் சிறுநீர் கலந்த நீரைப் பருகுவதால் ஏற்படுகின்றதென்றால் கொதிக்க வைத்து நீர் பருகினால் இந்த நோய் வராதா?**

பதில்:— உங்கள் நண்பனின் மகனுக்கு ஏற்பட்டுள்ள நோய் weil's disease அல்லது leptospirosis என்கின்ற நோய். ஸ்பைரோகீட்ஸ் (spirochaetes) என்கின்ற நோய்க் கிருமியால் உண்டாகின்றது. இந்த நோய்க் கிருமிகள் எலிகள் மற்றும் காடுகளில் உள்ள எலிவகைப்பிராணிகளின் சிறுநீரில் உள்ளன. இந்த சிறுநீரில் கலந்த நீரில் நீராடும்போது — அல்லது வயல்களில் வேலை செய்யும்போது கைகால்களில் உள்ள சிராய்ப்புக்காயங்களூடாக உடலினுள் உட்செல்லும் ஸ்பைரோகீட்ஸ்— தசைகள், ஈரல், சிறுநீரகம், கல்லீரல் என்பவற்றைத் தாக்கி — இரத்தக்கசிவை ஏற்படுத்துகின்றன. ஈரலைத் தாக்குவதால் காமாலை ஏற்படுகிறது. சிறுநீரகத்தால் சிறுநீரகம் செயலற்றுப்போகலாம். தீவிரமான தகுந்த சிகிச்சை கிடைக்காவிடில் மரண அபாயம் உண்டு.

உமது நண்பனின் மகன், சிற்றாறுகளில் நீராடியபோது— நோயால் பீடிக்கப்பட்ட எலிகளின் சிறுநீர் கலந்த ஆற்றுநீரில் இருந்த ஸ்பைரோ கீற்ஸ் — அவரின் உடலில் ஏற்பட்டிருந்த சிராய்ப்புக்காயங்களூடாக உடலில் உள் சென்று இந்த நோயைத் தந்திருக்கலாம். லெப்ரோஸ்பைரோஸிஸ் என்ற இந்த நோய் அசுத்த நீரை அருந்துவதால் ஏற்படுவதில்லை. எனவே கண்ட கண்ட சிற்றாறுகள், நீரோடைகளில் நீராடுவது அதுவும் உடலில் காயங்கள்,புண் உள்ள போதுநீராடுவது பாதுகாப்பானதல்ல. எனக்குத்தெரிந்த நண்பர் தனது garage ஐ துப்புரவாக்கிக் கழுவியபோது, காலில் இருந்த காயமூடாக — ஸ்பைரோகீட்ஸ் கிருமிகள் உடலினுள் சென்று சிறுநீரகம் செயலிழந்து மரணமடைந்தார். எனவே எலிகள், பூனை போன்ற பிராணிகள் புழங்கும் இடங்களில் ஸ்பைரோகீட்ஸ் கிருமிகள் இருக்கக்கூடிய சாத்தியம் உண்டு என்பதை மறக்காதீர்கள்.

**கேள்வி:— பெண். வயது 21. எனது உடல் எந்நேரமும் சூடாகவே இருக்கிறது. நானும் மெலிந்து கொண்டே போகிறேன். பெரியவர்கள் இது கணச்சூடு என்கிறார்கள். இது என்ன நோய்? இந்த குணங்குறிகளைத்தவிர எனக்கு வேறு ஒரு நோயோ, வருத்தங்களோ இல்லை.**

பதில்:— உமது உடலில் தொடர்ந்து metabolic functions என்கின்ற தொழிற்பாடு நடந்துகொண்டிருக்கின்றது. இதில்



உடலை வளர்த்துப் பேணுகின்ற அனுசேப தொழில்முறையான Anabolic functions ஒரு புறத்தில் நடந்து கொண்டிருக்க— மறுபுறத்தில் திசுக்கள் மடிந்து— அழிந்துகொண்டிருக்கும் catabolic functions நடந்து கொண்டிருக்கிறது. இது சாதாரணமாக நடைமுறைப்படுத்தப்படும்போது — அனுசேபத் தொழிற்பாடுகள் அதிகமாக இருப்பதால் எமது உடல் வளர்ச்சி பெறுகிறது. சிலருக்கு இந்த நோய் சமநிலையில் ஏற்படும் சிறிய மாற்றத்தால் 'அழிதல்' தொழிற்பாடு அதிகரித்துள்ளது. இதற்கு தைரொயிட் சுரப்புகள் அதிகளவில் சுரத்தல், நீரிழிவு நோய், தைரொயிட் நோய்கள் போன்றவை கூட காரணமாக இருக்கலாம். இதன் காரணமாக உடல் வெப்பமடைகிறது. உடல் மெலிவு ஏற்படுகிறது. எனவே ஒரு தகுந்த வைத்தியரிடம் சென்று தைரொயிட் பரிசோதனை செய்து கொள்ளுங்கள்.. புஷ்டியான உணவுகளைச்சாப்பிடுங்கள்.

**கேள்வி: பெண், வயது 20. திருமணமாகி இரண்டு மாத கர்ப்பமாக இருக்கின்றேன். தினமும் வாந்தி வாந்தியாய் எடுத்து கஷ்டப்படுகின்றேன். எத்தனையோ மருந்துகள் எடுத்தும் குணம் இல்லை. கர்ப்பிணிப்பெண்களுக்கு இந்த வாந்தி சகஜம் என்கின்றார்கள். ஆனால், என்னால் இந்த வாந்தியை தாங்கவே முடியவில்லை. சில வேளைகளில் இரத்தம் கூட வருகிறது. இதனால் கர்ப்பத்தை கலைத்துவிடலாமோ என்றுகூடஎண்ணுகின்றேன். உங்கள் அறிவுரையும், பரிகாரமும் தேவை?**

பதில்: பெண்ணுக்கு பெருமை சேர்ப்பதே தாய்மை. அதுவும் முதலாவது கர்ப்பம் வாழ்க்கையில் மறக்கமுடியாத ஒரு ஆனந்தம். கணவனும் மனைவியும் தாம் இருவரும் கருவளம் (FERTILITY) உள்ளவர்கள், மலட்டுத்தன்மை இல்லாதவர்கள் என்பதை உலகிற்கு நிருபிக்கும் ஆதாரமே முதற் கர்ப்பம் தான். இந்த கர்ப்பத்தை கலைத்துவிடலாம் என்று நீங்கள் எண்ணுவதே தவறு. ஆனால், இந்த எண்ணம் ஏற்பட நீங்கள் இந்த வாந்தியினால் எவ்வளவு கஷ்டப்படுகின்றீர்கள் என்பதைப் புரிந்து கொண்ட வைத்தியராக ஆலோசனை தருகின்றேன்.

சிலபெண்களுக்குத்தான் கர்ப்பகாலத்தின் ஆரம்பத்தில் முதல் மூன்று மாத காலத்தில் காலையில் வாந்தி (MORNING SICKNESS) ஏற்படுகின்றது. சிலருக்கு இந்த வாந்தி மிகவும் அதிகமாக இருக்கின்றது. அப்படி அதிகமாக இருக்கும் போது அதனை HYPEREMESIS GRAVIDARUM என்று கூறுவார்கள்.

எக்கி, எக்கி வாந்தி எடுக்கும் போது தொண்டையில் உள்ள சில சிறு இரத்தக் குழாய்கள் சிதைந்து இரத்தம் வரலாம். அல்லது ஒன்றுமே சாப்பிடாமல் வாந்தி எடுப்பதால் — வயிற்றில் புண் உண்டாகி GASTRITIS என்ற அழற்சி ஏற்பட்டு அதனாலும் இரத்தம் வரலாம்.

இந்த வாந்தி ஏற்ப கர்ப்ப காலத்தில் சுரக்கும் ஹோர்மன் சுரப்புகளே காரணம். கரு சரியாக கருப்பையில் பதிந்து விட்ட பின்னர் வாந்தி நின்றுவிடும். இதற்கு குறைந்தது மூன்று மாதம் கர்ப்பகாலம் நிறைவடைய வேண்டும். வாந்தியை நிறுத்த மருந்துகளை அதிகம் உபயோகிப்பது கருவுக்குக் கேட்டைத்தரும். அதிகமாக வாந்தி இருப்பதும் — உடலில் உள்ள சேமிப்பு மாப்பொருட்களை இழக்க செய்து KETONE என்ற நச்சுப்பொருளை விடுவிக்கும். எனவே வாந்தி அதிகமாக இருந்தால் மருத்துவரிடம் காட்டி, மாத்திரைகள், ஊசி மூலம் குளுக்கோஸ் பாய்ச்சிக்கொள்ளலாம். காலையில் படுக்கையைவிட்டு பிந்தி எழும்புவதும், காலை உணவாக — உப்பு பிஸ்கட் — CREAM CRACKER பிஸ்கட்ஸ் படுக்கையிலேயே சாப்பிட்டு கொஞ்சம் நேரம் படுத்து எழும்புவதும் சிலவேளைகளில் வாந்தியைக் குறைக்கும்.

கர்ப்பிணிப் பெண்களுக்கு சிறுநீரில் தொற்று ஏற்பட்டாலும் வாந்தி ஏற்படும். எனவே சிறுநீர் பரிசோதனை செய்து பார்க்கவும். முடிவாக — அழகான ஒரு குழந்தைக்கு த்தாயாகப் போகின்றோம் என்ற உணர்வை மனதில் கொண்டு இந்த சிறுபிரச்சினையை சகித்துக் கொள்ளுங்கள்.

**கேள்வி: வயது 20. கடந்த மாதம் இந்தியா சென்றிருந்த எனது நண்பி பொட்டு வைக்க குங்குமம் வாங்கி வந்து பரிசளித்தார். அந்த குங்குமம் வைத்த இடத்தில் புண்ணாகி — அசிங்கமாக இருக்கின்றது. பரிகாரம் கூறவும்.**

பதில்: மஞ்சள் பொடியில் இருந்து இயற்கையாக செய்யப்படுகிறதுதான் உண்மையான குங்குமம். ஆனால், இப்பொழுது இரசாயன உப்புக்கலவைகள் தான் குங்குமம் என்ற பெயரில் பல வகைகளில் விற்பனையாகின்றன. பலருக்கு இந்த இரசாயன கலவைகள் தோலில் ஒவ்வாமை (ALLERGY) யை உருவாக்குவதால் உங்களுக்கு இக்கதி ஏற்பட்டுள்ளது. உடனடியாக அந்த குங்குமம் உபயோகிப்பதை நிறுத்துங்கள். HYDRO CORTISONE CREAM தடவுங்கள். ஆரம்பத்தில் புண் மாறி அந்த இடம் கொஞ்சம் கருமையாக இருக்கும் பின்னர் நாள் செல்லச் செல்ல — கருமைநிறம் — மாறிவிடும் — HYDRO CORTISONE உபயோகிக்கும் போது வெய்யிலில் செல்வதை தவிர்க்கவும்.

இலவச மருத்துவ ஆலோசனைகளை
'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்
டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை
அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஜயந்தமல்லிமாராய்ச்சி மாவத்தை
கொழும்பு - 14

# காதல் தீபம்

பாலா சங்குப்பிள்ளை

''என்ன மாப்பிள்ளை தாலி கட்டுற நேரத்துல தகராறு பண்ணுறீங்களே! நான் தான் மிச்சப் பணத்தையும் நகை நட்டையும் தாறதாகச் சொல்லிவிட்டேனே... அப்புறம் ஏன் திடீர் என்று பிடிவாதம் செய்றீங்க...''

''இதோ பாருங்க... எனக்கு சேர வேண்டியது இப்பவே கிடைக்க வேண்டும். இந்த விஷயத்தில நான் ரொம்பக் கடுமையாத் தான் இருப்பேன். நீங்களா தாறத்துக்கு ஒத்துக்கிட்டதால் தான் நான் கேட்கிறேன். புதுசா எதுவும் இல்லையே...''

''வேணுமென்றால் நாலு பேருக்கு முன்னால எழுதித் தாறேன். தயவுசெய்து என் பொண்ணோட வாழ்க்கையை கெடுத்திடாதீங்க... மண மேடை வரை கும் போய் கழுத்தில தாலி ஏறாமல் வந்தால் அப்புறம் என் பொண்ணோட எதிர்காலமே காலியாகிவிடும். அவமானம் தாங்காம நாங்க தூக்கில தொங்க வேண்டியது தான்...''

''அதெல்லாம் எனக்குத் தெரியாது. இப்போ எனக்கு விஷயம் முடிஞ்சாகணும். இல்லாட்டி நான் மணமேடைக்கு கால் வைக்கமாட்டேன்.

''மாப்பிள்ளை... நான் சொல்லுறதை தயவு செஞ்சு கேளுங்க...''


''அப்பா... அவர் கிட்ட ஏன் வீணா கெஞ்சிக்கிட்டிருக்கீங்க.. இங்க வாங்கப்பா...''

''அபர்ணா நீ ஏன் இங்கே வந்தே... நீ போய் அங்கேயே இரும்மா இதோ வாரேன்...''

''இல்லைப்பா... இப்படிப்பட்ட பேராசைப் பிடிச்சவரு என் கழுத்தில தாலி கட்டத் தேவையில்லை. இன்றைக்கு பணத்துக்காக இவ்வளவு முரண்டு பிடிக்கிறவரு நாளைக்கு அதுக்காக என்னையே கொலை செய்தாலும் செய்வாரு. செக்குமாடு மாதிரி இவரின் ஆசைகளுக்காக இவர் சாக கட்டின பாவத்துக்காக வாழ்நாள் முழுவதும் இவரையே சுத்திச்சுத்தி வர நான் விரும்பல...''

''அபர்ணா... புரியாம பேசாத... மாப்பிள்ளை மேலே எந்தக்குற்றமும் இல்லை. நான் ஏற்கனவே ஒத்துக்கிட்டதைச் சொன்ன நேரத்தில் செய்ய முடியாமல் போய்விட்டது. வார்த்தை தவறினஎன்னை விட்டுட்டு வாய்க்கு வந்தபடி அவரை ஏசி உன்னோட எதிர்காலத்தை வீணாக்கிக்காதே...''

''இல்லைப்பா நீங்க என்னதான் சொன்னாலும் என்னால என் முடிவை மாற்ற முடியாது. கல்லைக்கட்டிக்கிட்டு குளத்தில விழமாட்டேன்...''



''ஐயோ... என்னம்மா பேசுற. இந்தக்கல்யாணம் இப்போ நடக்காட்டி என் மானம், மரியாதை, கௌரவம் எல்லாமே போயிடுமே... என்ன செய்வேன்... கடவுளே...!

''ஐயா.. இங்கே நடந்ததை எல்லாம் நான் கேட்டுக்கிட்டுத் தான் இருந்தேன். என் பெயர் பாலமுரளி. நான் வங்கி ஒன்றில் வேலை செய்யிறேன். உங்களுக்கு ஆட்சேபனை இல்லாவிட்டால் நானே உங்கள் மகளை கல்யாணம் முடிச்சிக்கிறேன். எனக்கு சீதனம் தேவை இல்லை. என் அம்மா, அப்பா இங்கே இருக்காங்க. எனது முடிவுக்கு அவர்கள் எந்த ஆட்சேபனையும் செய்ய மாட்டாங்க. உங்க மகள் கிட்ட கேட்டுப்பாருங்க. சம்மதம் என்றால் நான் ரெடி...''

''அப்பா பணத்துக்காக பண்பை இழக்க நினைக்கிற அவரை விட மனித மனசை பார்க்கிற இவர் எவ்வளவோ மேல். எனக்கு பூரண சம்மதம்...'

''உன் விருப்பம் தானம்மா என்னோட விருப்பமும். மாப்பிள்ளை என்னை மன்னிச்சிடுங்க. கல்யாணத்துக்கு முன்னாடியே கல்லை எறிஞ்சு என் மகளோட வாழ்க்கையையே உடைக்க நினைக்கிற உங்க கிட்ட என் மகளை கொடுத்து காலமெல்லாம் அவ கண் கசக்கிக்கொண்டிருக்கிறதை பார்க்கிற தெம்பு என்னிடம் இல்லை. என் மகளுக்குக் கைகொடுக்க வாறவரு யார் எவர் என்று எனக்குத்தெரியாது. ஆனா அவர் நிச்சயமா என் மகளை நல்லா வச்சிருப்பார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு... நீங்க போகலாம்...''

''ம்.. பாலமுரளி. நீயும் அபர்ணாவும் விரும்பியபடியே உங்க ரெண்டு பேரையும் ஒண்ணு சேர்த்துட்டேன். நீண்ட காலமா ஒருத்தரையொருத்தர் உயிரா நேசிச்சீங்க. ஆனா பழைய சாஸ்திர, சம்பிரதாயம் ஜாதகத்தில அதிகமா நம்பிக்கை வச்சிருக்கிற அபர்ணாவோட அப்பா அம்மா என்னை மணமகனா முடிவு செய்த சமயம் எனக்கு இந்த விஷயம் தெரியாது. பாலமுரளி சொல்லித் தான் ரெண்டுபேரொட காதலையும் புரிஞ்சிக்கிட்டேன். உங்க ரெண்டு பேருக்கும் உதவ வேண்டும் என்று நினைச்சேன். ஏற்கனவே காதல் தோல்வியால தற்கொலை செய்த என் அன்பு அண்ணாவோட நிலைமை உங்களுக்கும் வரக்கூடாதுன்னு நினைச்சேன். அதுனாலதான் என் மேலே நானே சேறு பூசிக்கிட்டு நீங்க கல்யாணச் சோறு சாப்பிட இப்படிச் செஞ்சேன். நான் செஞ்சது நிச்சயமா தியாகம் இல்லை. என் அண்ணனுக்கு செஞ்ச உண்மையான அஞ்சலி உங்களால் ஏற்பட்ட 'காதல் தீபம்' என்னால் நிச்சயமா அணையக்கூடாது நீங்க சந்தோஷமா வாழணும். '

''கெட்டிமேளம் கெட்டிமேளம்...''

# கவிதைப் புனல்

**உனக்காக**
வாழும் வாழ்க்கை
உனக்கென!
அன்பின்
வேகம் கொண்டு
வேறொரு உறவை
ஏற்றுக்கொள்வேனோ?
உனக்காக என்
மனதின் உறுதியே
என் மனம் என்று
உனை நாடி
உறுதியாய் நிற்க
மற்றவை எல்லாம்
உனக்காக உதறுவேன்
*சு.பிரியதர்சினி,*
*வட்டக்கச்சி.*

**காதல்**
கருவறையில் இருந்து
வெளிவந்து
வாழத்துடிக்கும்
குழந்தையாய் -என்
இதயவறையில்
இருந்து நீயும்
வெளிவந்து
இன்னொருவனோடு
வாழத்துடிக்கிறாய்!
பொறுமையோடு
தாங்கிக்கொள்ளும்
தாயாய் நானும்!
*பதுதின்,*
*கிளிநொச்சி.*

**கா(த)லனா?**
உயிரில் பூப்பறிக்கும்
மன்னவனே— என்
உள்ளம் தேடும் — ஒரு
நினைவலையே
பனி இரவில்
மிதந்து வரும்
மெல்லிசையே
என் இளமை
நனையவரும்
பூமழையே
குளிரும் மார்கழியின்
கம்பளியே
எனக்கு உறக்கம்
தந்துவிட்ட
தலையணையே
என் தூக்கம்
கலைத்துவிட்ட
கனவலையே
நீ —என்
உயிரை
எடுக்க வந்த
கா(த)லனா?
*ம.சஞ்சீதா,*
*யாழ்ப்பாணம்.*

**சோகத்தின் ஆழம்**
சோகத்தின் ஆழ் குழிக்குள்
விழுந்த வெண்புறா
ஏக்கமுற்று தாகம் தீர்த்து
சுகமதை தேடிய பின்
தன்னந்தனியே
தாங்கொணா
துயரடைந்து
தவித்த உயிரதனை
தருணமே தீர்த்தது.
அவ்வுயிரை
தன்னுயிராய்
நினைத்திருந்த
பிரிதுயிர்
சோகத்தின்
ஆழமதில்
அழுதது அதிர்வின்றி.
*செ.சிபி,*
*அல்லாரை.*

**சந்தேகம்**
மருந்து
அறியப்படாத
இன்னுமொரு
எயிட்ஸ்.
**சேவல்**
இதமான காலையில்
இயற்கையின்
அலாரம்.
**சோகனைச்சாவடி**
கொஞ்சநேர
தாமதத்தில்
குட்டியாய்
ஒரு புடவைக்கடை.
**விளம்பரம்**
தயவுசெய்து
விளம்பரம்
ஒட்ட வேண்டாம்.
**மையவாடி**
உறங்குநிலை
வித்துக்களால்
ஒரு நாற்றுமேடை.
**தபால் தலை**
எத்தனை முறை
குத்தியும்
இரத்தம் வரவில்லை.
*முகம்மது றியாஜத்,*
*மருதமுனை.*



**காதலன்**
உன்னைப் போல்
வார்த்தைகளில்
வஞ்சம் தீர்ப்பவனல்ல நான்
வார்த்தைகளை
வளைத்து நெளித்து
வசீகரமாக்கும்
கவிதா யாத்திரிகனும்
அல்ல நான்.
உன்னைப் போல
பசப்பான வார்த்தைகளை
பாவிக்கவும்
பாசம் வைப்பது போல்
வேஷம் போடவும்
போலிக்கண்ணீர்
வடிக்கவும்
எனக்குத் தெரியாது.
எனக்குத் தெரிந்ததெல்லாம்
நான்—நீ
நம் காதல்.
உன்னை நான்
கண்களால்
காணுமுன்பே
இதயத்தை
கொடுத்துவிட்டேன்.
நீ அன்பானவனே
என்று எழுதிய
உன் நச்சு மடல்களை
நம்பியதால்
உன் கையெழுத்துக்கூட
அழகாய் இல்லை
என்றபோது
அதைப்பற்றி நான்
அலட்டிக்கொள்ளவில்லை.
காரணம் — உன்
உணர்வுகளை
வாசித்ததால்!
நீ அழகுதான்!
ஆனால்
நான் உன்
உடலைப்பார்க்கவில்லை.
உன் உள்ளத்தோடும்.
உன்னுடனும் கற்பனையில்
வாழ்ந்த காலங்களை
எண்ணிப்பார்க்கிறேன்.
நீ முடிவு செய்யலாம்
என்னிடம்
பணம் இல்லை
என்பதை!
என்னிடம் நீ இல்லை என்பதை
எப்படி நீ முடிவு செய்யலாம்?
காலம் பொன்னானது தான்
கடந்து கொண்டிருக்கும் வரை
காதல் புனிதமானது தான்
நம்பிக்கை உள்ளவரை!
நம்பிக்கை அற்றவளே,
நம் காதல் வீணாய்ப் போச்சுதடி.
*ப.வினோதன், குமுளமனை.*

**நினைவுகள்**
அன்னை மடியில்
தவழ்ந்த அந்த நாள்
நினைவுகளும்
பள்ளிப் பருவத்தில்
பயின்ற அந்த நாள்
நினைவுகளும்
உனக்காக அலைந்த
அந்த நாள்
நினைவுகளும்
என்னால்
மறக்க முடியவில்லை.
*சி.குகானந்த்,*
*விசுவமடு.*

**நாகரீகம்**
துணிகளுக்கு
தட்டுப்பாடாகிவிட்டதா?
கெண்டைக்கால்களே
இங்கே
தவமிருக்கிறது
தாவணி தம்மை
தழுவாதா என்று!
*கு.தவசீலன்,*
*விசுவமடு.*

**கர்வம்**
உன் உடல்தழுவும்
தென்றல்-என்
உடல்தீண்டிப்போக
ஆசை மனதை
தாண்டிப்போக
அதில்
உன் கர்வம் மட்டும்
தெளிவாய்
தெரியுதடி.
*எஸ்.விஜயன்,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*

**மௌனம்**
காதல் என்ற
சொல்லுக்கு
மௌனம் தான்
பதில் என்றால்
மௌனம்
என்ற சொல்லை
தமிழின் அகராதியில்
இருந்து அகற்றிவிடு.
ஏனெனில்
அது என்னையும்
என் காதலையும்
அழித்துவிடும்.
*ந.பிரபு,*
*கோண்டாவில்.*

**நீதி கேட்பது யாரிடம்?**
எல்லா முகங்களும்
மகிழ்ச்சியால் பூரிக்கின்றன
நாங்கள் மட்டும்
துயரம் கசியும் கண்களோடு
சிறைக் கம்பிகளின் பின்.
நெஞ்சினுள் துன்பத்தீ கனல்கிறது
உற்றாரதுணையெல்லாம் பிரிந்து
அழுதுவீங்கி சிவந்த கண்களுடன்
எமது கணங்கள் ரணங்களாக
நகர்கின்றன
புறக்கணிக்கப்பட்ட எங்களது
துய உணர்வுகளை
இந்த துயரகவிவரிகளையேனும்
உணர்ந்து கொள்ளுங்கள்.
'சமாதானம்' — என்ற
ஒளிக்கீற்று பிரகாசிக்கும்போதும்
இருளினுள்ளேயே எமது வாழ்க்கை
நீதிகேட்பது யாரிடம்
என்ற கேள்வி எமக்குள்
ஆறாத துயரங்களுடனும்
காயாத கண்ணீருடனும்
தொடரும்
எமது அவல வாழ்க்கைக்கு
எப்போது விடிவு?
*கல்லடி றொபட்,*
*களுத்துறைச் சிறை.*

**அகதி வாழ்க்கை**
உயிரின் மதிப்பு
பிரிந்த பின் தான்
தெரியும்.
உடமையின் மதிப்பு
அழிந்தால் தான் தெரியும்.
அகதி வாழ்வென்பது
அலைந்தால் தான் தெரியும்.
*ஜெ.தமிழாம்பிகை,*
*நானாட்டான்.*

**உன்னை நினைத்து**
நீஎன்ன நினைத்து
என்னைப்பார்த்தாயோ
தெரியவில்லை.
ஆனால்
நான் உன்னை
நினைத்தே
உன்னைப்பார்த்தேன்.
உன் இருப்பிடம்
நீ சென்றுவிட்டாய்
நானோ நீ
நடந்த பாதையெல்லாம்
ஆயிரம் தடவைகள்
நடக்கிறேன்
அம்மா - உன்
கால் பட்ட
மண்ணுடனாவது
இருக்கிறேன் என்ற
சந்தோஷத்தில்.
*ச.தீபா,*
*மீசாலையூர்.*

**பெண்ணே**
உன் நினைவினை
சேமிக்க— என்
இதயத்திலோ இட நெருக்கடி.
உன் ஊரில்
ஏதும் இடமுண்டோ?
இருந்தால்
சொல்லிவிடு....
என் இமைகளை
ஈடுவைத்தாவது
வாங்கச் சம்மதிக்கிறேன்
அதை!
*கே.ஆர்.சுதர்சன்,*
*மல்லாகம்.*

**சொந்தமடி நீ எனக்கு**
சொல்லத்தான் தெரியவில்லை
எங்கள் சொந்தத்தை
சோதித்துப்பார்க்காதே
உயிரே வந்துவிடு
அள்ளிக்கொடுத்த இன்பம்
ஆண்டுகளாலும் அழியவில்லை
தேடிப்பறந்த பொழுது
நினைவுகளாலும் சிதையவில்லை.
பாடித்திரிந்த பருவம்
கண்ணீரில் கரையவில்லை.
எண்ணச்சிதறல்களை
விதி மாற்றிப்போட்டாலும்
கண்ணில் உன் உருவம்
களங்கமின்றிச்சிரிக்கிறது.
*எஸ்.பிரகாஷ்.*
*அல்வாய்.*

**என் வாழ்வில் வந்த முதல் வசந்தம்?**
பாவை அவள் பருவ அழகும்
பசுமை நிறைந்த பால் நிலாக் காலமும்
என் கண்களை தொட்டும் நின்றது
வண்ணக்கிளி போல் பேசும் அவள்
வல்லினப் பேச்சும் என் வசந்தத்தை குலைத்தது
கண்சிமிட்டி புன்னகைக்கும் அவள்
புன்னகை மலர்வு என் இதயத்தை கட்டியது
இவள் அல்லவா என்னவள் உயிரிலும் மேலானா இனியவள்
காலை விடிவை காத்திருந்துதான் பூக்கள் மலரும்
ஆம் என் வாசலில் இவள் வரவுக்காய்!
*சிவா. இலண்டன்.*



# ＊மலையாள புது

தமிழ்ப் படங்களில் தமிழ்நாட்டு நடிகர்கள் பத்து சதவீதம் என்றால் ஆ
கர்நாடகாவைச் சேர்ந்த நடிகைகள் அறுபது சதவீதம் இருக்கிறனர்.
முப்பது சதவீதம் பேர் கேரளாவைச் சேர்ந்த நடிகைகள்தான். தற்போ
தமிழுக்கு புதுவரவாக மலர்ந்திருப்பவர் ஸ்ரீகிருஷ்ணி. மலையாளத்தி
நிறைய படங்களில் திறமை காட்டிக்கொண்டிருந்த அவரை 'கோமதி
நாயகம்' படத்தின் மூலம் இரண்டு கதாநாயகிகளில் ஒருவராக
அறிமுகப்படுத்துகிறார் இயக்குனர் பொன்வண்ணன்.
ஸ்ரீகிருஷ்ணி என்ற பெயரை கார்த்திகா என்று
மாற்றியுள்ளார் இந்தப்படத்தின் தயாரிப்பாளர்
அரோமா மணி. கார்திகை தீபம்போல் ஒளிவீசட்டும்!



# என் இஷ்டப்படி...

''எனக்கு எல்லாமே என் தந்தைதான்'' என்ற கொள்கை ரீதியுடன் குடும்பப்பாசம் மிக்கவரான பிரசாந்துக்கு என்னமோ சமீபகாலமாக தனது தந்தையை பிடிக்காமல் போய் விட்டது.

''மணப்பெண் கூட என் தந்தை யாரைக் கை நீட்டுகிறாரோ அவர்தான்'' என்றவர். இப்போது தானாகவே முடிவுகளை எடுக்க ஆரம்பித்து இருக்கிறார். 'ஜெய்' படம் எதிர்பாராத தோல்வியை ஏற்படுத்தியதுதான் இதற்கு காரணம்.

விளைவு? தந்தை -மகன் இடையே இப்போது விரிசல் ஏற்பட்டிருக்கிறது. வெளிவரவிருக்கும் 'ஷாக்'படம் வெற்றியடைந்தால் இந்த பிரச்சினை ஒருவேளை தீரலாம்.

இதற்கிடையே தகப்பன் மீது வெறுப்படைந்த பிரசாந்த் ''என் இஷ்டப்படி விடுங்கள் ஜெயித்துக் காட்டுகிறேன்'' என்று கூறி சொந்தமாக ஒரு படம் எடுக்கும் திட்டத்தில் இருக்கிறார்.





★விலைமாது பாத்திரத்தில் சீதா★

சீதாமுதன் முறையாக விலைமாது பாத்திரத்தில் ஜதி என்ற படத்தில் நடித்து வருகிறார். இதுவரை எந்த படத்திலும் இதுபோல ஒரு பாத்திரத்தில் நடித்தது இல்லை. படத்தில் அவரின் நடிப்பைப் பார்த்தவர்கள் அற்புதமான குணசித்திர நடிகை என்ற முத்திரை அவருக்கு கிடைப்பது உறுதி என்கின்றனர்.

★லிவிங்ஸ்டன் துண்டு துக்கடா பாத்திரத்திலே இன்னும் எத்தனை காலத்துக்கு நடிப்பது என்று யோசித்த லிவிங்ஸ்டன் தற்போது தனது கெட்டப்பை அடியோடு மாற்றிக்கொண்டு 'கதிர்காலம்' படத்தில் நடிக்கிறார். 'செந்தூர பூவே' படத்தில் விஜயகாந்த் எந்த கெட்டப்பில் இருந்தாரோ அதுபோல தன்னை மாற்றிக் கொண்ட லிவி, படத்தில் வெட்டியான் கதாபாத்திரத்தில நடிக்கிறார். பிதாமகன் விக்ரம் மாதிரி நடிப்பில் அசத்துகிறாரோ இல்லையோ, வீட்டில் சும்மா இருக்கவில்லை.

# 40% கதை 60% சதை

'நியு' படத்தின் ரிலீஸ் திகதி இப்போ... அப்போ என்று தள்ளிக் கொண்டே போகிறது. என்ன, ஏது என்று விசாரித்தபோதுதான் தெரிந்தது உண்மைச் செய்தி. தமிழிலும், தெலுங்கிலும் தயாரிக்கப்பட்ட அந்தப் படம் ஒரே நேரம் என்றாலும் ஆந்திராவில் மட்டும் ரிலீஸ் செய்யப்பட்டுவிட்டது. ஆனால், அதன் முடிவு மிகவும் மோசமாம். அதனால், நொந்து போய் இருக்கிறார் படத்தின் இயக்குநரும், தயாரிப்பாளரும், கதாநாயகனுமான எஸ்.ஜே.சூர்யா. தமிழ்நாடும் காலை வாராது இருக்க என்ன செய்யவேண்டும் என்று தலையைப் பிய்த்துக்கொண்டு இருக்கிறார். பின்னர் உதவியாளர்களுடன் கலந்தாலோசித்தபோது இப்போதெல்லாம் தமிழ் சினிமாவில் கதை பிரதானமாகிவிட்டது. அதனால், கதையும் கொஞ்சம் இருக்கும்படி பார்த்துக் கொள்ளவேண்டும். 40% கதை, 60% சதை என்று பார்த்துக்கொண்டால் போதும் என்று சூர்யாவின் காதில் ஓத... அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார் சூர்யா. அதற்காக சில சீன்களை மீண்டும் ரீ-சூட் பண்ணிக் கொண்டு இருக்கிறாராம். மிக விரைவில் 'நியு' படம் திரைக்கு வரும். தற்போது ஓடிக்கொண்டிருக்கும் படங்களை பின்னுக்கு தள்ளிவிட்டுப்போகும் பாருங்கள் என்று தம்பட்டம் அடிக்கிறார் சூர்யா. பார்ப்போம்!

## டண்டணக்கா

'குதிரைக்குத் தேவை கொள்ளு! ஆட்டுக்குத் தேவை புல்லு!'- மும்தாஜின் சித்தாந்தம் ஒட்டமாக ஓடினாலும், குதிரைக்குத் தேவை கொள்ளுதான் ஆட்டுக்குத்தேவை புல்லுதான். அதுகளுக்கு பிஸ்கட் போட்டா பேதிதான் போங்க. இந்த முரட்டு பொன்மொழியை வறட்சிக் காலத்தில் உணர்ந்துகொண்டிருக்கிறார் மும்தாஜ். தமிழ்நாடே தனக்குத்தான் என்ற ரீதியில் பேசிக் கொண்டிருந்தவர், 'அழைக்க ஆளில்லை துடைக்க ரவல் இல்லை' என்ற நிலைக்கு தள்ளப் பட்டதும் ஒரு பாட்டுக்கு ஆட்டம் போட தயாராகிவிட்டார். அதற்கு உடம்பும் ஒத்துக்கணுமே ...கிட்டத்தட்ட பத்து கிலோ எடை குறைந்து விட்டாராம். இந்தப் பளுவை இறக்கி வைத்தப்பின் அவரை இரண்டு மூன்று படங்களுக்கு அழைத்து ஆடும் வாய்ப்பை கொடுத்திருக்கிறார்கள். 'ஏய்' படத்தில் சரத்குமாருடன் அநியாயத்திற்கு ஒரு ஆட்டம் போட்டிருக்கிறார். ஒரு வரி கேக்கிறீங்களா?

*டண்டணக்கா டண்டணக்கா சரக்கு...*
*கடிச்சக்கடா கடிச்சக்கடா முறுக்கு...*

எங்கதாம்பா புடிக்கிறீங்க இந்த வரியெல்லாம் ? அதை விடுங்க. அதிலே ஏதோ பேருக்கு மூடிக்கிட்டு நடிக்கிறாராம் மும்தாஜ்! இம்.......!





# வசூல் ரா
# த

மாபெரு
வெற்றி பெற்ற
'முன்னாபாய்
எம்.பி.பி.எஸ்
ஹிந்திப் படத்தின் கதை
உரிமையை பலத்த போட்
டிக்கிடையே 'ஜெமினி பிலிம்ஸ்
சர்க்யூட் ' பெற்று ஒரே நேரத்தில் தமிழி
லும், தெலுங்கிலும் அத்திரைப்பட
தயாரிக்கிறது. 'வசூல்ராஜா எம்.பி.பி.எ
வித்தியாசமாக பெயரிடப்பட்டிருக்கு
படத்தை. 'ஜே ஜே' வெற்றிப்படத்திற்கு
நடிக்கும் அட்டகாசம் படத்தை இயக்கி
திரைக்கதை அமைத்து இயக்க , வசனங்களை 'க
எழுதுகிறார்.

டாக்டருக்காகப் படிக்க ஆசைப்படும் ஒ
நடிக்க பிரபு முன்வந்திருக்கிறார். இதன் தெ
வேடத்தில் முன்னணி தெலுங்கு ஹீரோ
தக்கது. கமல்ஹாசன் -பிரபு கூட்டணி 'வெ
இணைகிறது. இதில் வரும் சுவாரஸ்ய
பரிமாணத்தில் பிரகாஷ்ராஜ் நடிக்கிறார். இ
களைத் தவிர்த்திருக்கிறார். கமல்ஹாசன், பிர
போல் கமல் படத்திற்கு பரத்வாஜ் முதன்மு
பிடத்தக்கது. கமல்ஹாசன் ஜோடியாக சி
குடும்பப்பாங்கான வேடத்தில் நடிக்கும்
கதாநாயகியாக நடிப்பது குறிப்பிடத்த
கும் VIP-யை கமல்ஹாசன் தந்தை வேடத்
திரையுலகின் வரலாற்று முக்கியத்துவம் வ
காக்க'ராதாகிருஷ்ணன், கருணாஸ், எம்.எ
நடிக்கின்றனர். நகைச்சுவையுடன் மனித
பொதுநல நோக்கத்தில் கதையம்சம் அ
படப்பிடிப்பு மாபெரும் பொருட் செலவி
அன்று ஆரம்பமாகி, சென்னை மற்றும் சுற்று
வரும்.

வரவு*

...றால் ஆந்திர
...ன்றனர். மீதி
... தற்போது
...ாளத்தில்
... 'கோமதி
...ருவராக
...ணன்.
...என்று
...ாளர்
...டும்!



# என் வழி தனீ.....ஈ வழி

படத்தில் காமடிக்கு,"எனக்கு பக்கத்தில் ஒரு ஜோடியோ அல்லது ஒரு பாடியோ தேவையில்லை, தனியாக வெற்றிக்கொடி பறக்கவிடும் ஆளு" என்ற கூறுகிறார். திரைஉலகில், காமெடிக்கென ஒரு தனிஇடத்தை பிடித்து விட்ட நடிகர் விவேக், இப்போது ஹீரோவாகவும் நடிக்க ஆரம்பித்துள்ளார். இது தொடர்பாக அவர் பேட்டியில் தெரிவித்த போது,"நானாக விரும்பிப் போய் எந்தவொரு விளம்பரப்படத்திலும் நடிக்க வாய்ப்பு கேட்கவில்லை. அதுவாக கிடைத்த போது நடிக்க ஒட்டுக் கொண்டேன் என்று தெரிவித்தார். ஒரு கம்ப்யூட்டர் சர்வேயில் திரைஉலகில், தென்னிந்திய அளவில் அதிகமாக ரசிக்கப்படும் நபர் யார் என்று சர்வே நடத்தப்பட்டது. அதன் மூலமே எனக்கு "மிராண்டா" குளிர்ப்பான விளம்பரத்தில் நடிக்கும் வாய்ப்புகிடைத்தது" என்று வாய்ப்பு வந்த விதத்தையும் கூறினார்.

*பின்னர் 'கில்லி' படத்தில் விவேக்கின் காமெடி தேவையில்லை என்ற தரணி தெரிவித்தது பற்றி கூறுகையில்:-*

"கில்லி ரொம்ப வேகமாக போகின்ற படம். அதுல என் காமெடிக்கெல்லாம் இடமில்லை. மேலும் தரணி என்னிடம் இது பற்றிப் பேசுகையில், 'கில்லியில் உங்க காமெடியை நுழைச்சா படத்துல இடிக்கும். இல்லைன்னா அக்கியத்துவம் இல்லாத ஒரு பாத்திரமாகவே வரும். அப்படியும் செய்ய முடியாது. எனவே, இந்தபடத்தில் வேண்டாம். அடுத்த படத்தில் பார்த்துக் கொள்வோம் என்றார். நாளை நமதே, நாளைக் கழித்தும் நமதே என்ன சொல்றீங்க" என்றவரிடம், படத்தில் உங்களுக்கென ஜோடி செட்டாகவில்லையே என்ற கேள்விக்கு:-

"நான் தனியாக வெற்றிக் கொடி பறக்கவிடும் ஆளு. எனக்கு பக்கத்தில் ஒரு ஜோடியோ ,பாடியோ தேவையில்லை" என்று தனது வழக்கமான ஸ்டைலிலேயே சொல்லி முடித்தார்.



# போட்டுக் கழட்டியவை நோட்டுக்களுக்கு

யானை இறந்தாலும் ஆயிரம் பொன்! நடிகர்கள் கிழித்த சட்டைக்குக்கூட நாற்பது டொலர் விலை! இப்படி ஹொட்டான அதே சமயத்தில் நோட்டான இந்த விஷயத்தை வெளிச்சம் போட்டு காட்டியிருக்கிறது 'கலாட்டா டொட் கொம்' இணையத்தளம். நடிகர்கள் போட்டுக்கழற்றிய பல சமாச்சாரங்களை ஏலம் விட்ட இந்த இணையத் தளம் அதை ஏலம் எடுத்த ரசிகர்களை வரவழைத்து சம்பந்தப்பட்ட நடிகர்கள், நடிகைகள் கையாலேயே நேரடியாக வழங்கியிருக்கிறது. மாதவனின் தொப்பி 80 அமெரிக்க டொலர்களுக்கு விலை போனது. சரத்குமாரின் கண்ணாடியை 67 அமெரிக்க டொலர்களுக்கு ஏலம் எடுத்தார் ஒரு ரசிகர். பிரசாந்தின் மேலாடை 65 டொலர் இப்படி அள்ளிக் கொடுத்த ரசிகர்கள் சினேகாவின் ரிசேட் ஒன்றை 60 அமெரிக்க டொலர் கொடுத்து வாங்கியிருக்கிறார்கள். த்ரிஷாவின் சல்வார் கமீசை வாங்கி பரவசப்பட்ட ரசிகர் ஒருவர் 40 டாலரை வழங்கி பூர்வ ஜென்ம புண்ணியத்தைக் கட்டிக் கொண்டார். இப்படி அவர்களிடம் இருந்து திரட்டப்பட்ட தொகை மட்டும் 50 ஆயிரத்து 382 ரூபாய் இந்த தொகையை சரி பாதியாக பிரித்த கலாட்டா டொட் கொம் அநாதை இல்லத்திற்கும், ரசா என்ற சமூகசேவை அமைப்புக்கும் கொடுத்து உதவியிருக்கிறது.



# பஞ்ச், பஞ்ச், பஞ்ச் சரத்குமார் டயலக்


படத்துக்கு படம் ரஜினி, விஜயகாந்த், விக்ரம், விஜய், அஜித் பேன்ற ஹீரோக்கள் ஏதாவது பஞ்ச் டயலக் பேசுவதும், அது ரசிகர்கள் மத்தியில் பரப்பரப்பாக பேசப்படுவதும், பத்திரிகைகள் அதை விமர்சித்து சிண்டு முடிவதும் வாடிக்கை. தற்போது அப்படி ஒரு பஞ்ச் டயலாக் பேசி நடித்துள்ளார் சரத்குமார். ஏ.வெங்கடேஷ் இயக்கும் ஏய்... என்ற படத்தில் "நான் பாத்தா தென்றல் அடிச்சா புயல்" என்று பஞ்ச் டயலாக் பேசி எதிரிகளுக்கு எச்சரிக்கை விடுக்கிறார் சரத்குமார். படத்தில் இந்த வசனம் அடிக்கடி இடம் பெறுகிறது.



...ராஜா ...தருமா?

...ம்ஸ்
...தில் தமிழி
...திரைப்படத்தைத்
...ம்.பி.பி.எஸ்' என்று
...ட்டிருக்கும் இப்
...டத்திற்குப் பின் அஜித்
...க இயக்கி வரும் சரண்
...ங்களை 'கிரேஸி மோகன்'

...ப்படும் ஒரு தாத்தா வேடத்தில்
... இதன் தெலுங்குப் பதிப்பில் இதே
...த ஹீரோ ஸ்ரீகாந்த் நடிப்பது குறிப்பிடத்
...டணி 'வெற்றி விழா' திரைப்படத்திற்கு பிறகு இதில்
... சுவாரஸ்யமான கதாப்பாத்திரத்தில் வித்தியாசமான
...க்கிறார். இதற்காக பிரகாஷ்ராஜ் சில தெலுங்கு தமிழ் படங்
...ஹாசன், பிரகாஷ்ராஜ் இணையும் முதல் படம் இது. அதைப்
...ஜ் முதன்முதலாக இசையமைக்கிறார் என்பதும் குறிப்
...யாக சினேகா நடிக்கிறார். அன்பும் - பண்பும் நிறைந்த
... நடிக்கும் சினேகா முதல் முறையாக கமல்ஹாசனுடன்
...பிடத்தக்கது. திரையுலகில் மிகப்பிரபலமாக விளங்
...த வேடத்தில் நடிக்கவைக்க முயற்சிகள் நடக்கின்றன. அது
...வும் வாய்ந்த நிகழ்ச்சியாக இருக்கும். இவர்களுடன் 'காக்க
... எம்.எஸ்.பாஸ்கர், சிஸ்ர்மனோகர், சித்ரா உள்ளிட்டப்பலர்
...ா மனித உணர்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் ஒரு
...ம்சம் அமைந்திருக்கும். இந்த 'வசூல்ராஜா' திரைப்படத்தின்
... செலவில் அமைக்கப்பட்ட காட்சி அரங்கங்களில் 14.05.2004
...ும் சுற்றுப்புறங்களில் படமாக்கப்பட்டு ஒகஸ்ட் மாதம் திரைக்கு



# பித்தன் பதில்கள்

*எஸ்.பசுபதி – நீர்கொழும்பு.*

**கேள்வி:–** நான் தனியார் கம்பனி ஒன்றில் உயர் அதிகாரியாக இருக்கிறேன். அந்தக் கம்பனியில் எனக்கு கீழே வேலை பார்க்கின்ற பெண்களில் ஒருத்தி தன்னை மாலை 5 மணிக்கு முன்பு வீடு செல்ல அனுமதிக்க வேண்டுமென்று கேட்கிறாள். ஏன் பித்தா இந்தப்பெண் இப்படி நடக்கிறாள்?



**பதில்:–** தினமும் உமக்கு கீழே வேலை பார்த்த பல பெண்களில் நீர் குறிப்பிட்ட அந்தப் பெண்மட்டும் அதிகமாக களைத்துப் போகிறாரோ என்னவோ!

*சுபாங்கி – மானிப்பாய்*

**கேள்வி:** டியர் பித்தா! எனக்கு ஒருவர் வாரம் ஒரு கடிதம் அனுப்புகிறார். அந்தக் கடிதங்களில் அவர் தன் பெயரை எழுதாமல் அதற்குப் பதிலாக சில தலைமுடிகளை அனுப்புகிறார். இதற்கு என்ன காரணமாக இருக்கும் பித்தா?

**பதில்:** தன்னுடைய கடிதங்களை மொட்டைக் கடிதங்கள் என்று நீர் நினைக்கக் கூடாது என்பதற்காகத்தான் அவர் தன்னுடைய தலை முடியை வைத்து அனுப்புகிறாரோ என்னவோ...?

*ஹமீத் – புத்தளம்*

**கேள்வி:** கணவனோடு அன்பாகவும், பரிவாகவும் இருக்கக் கூடிய பெண் ஒருத்தியை நான் மணம் முடிக்க ஆசைப்படுகிறேன். கிடைப்பாளா பித்தா?

**பதில்:** முயன்று பாருங்கள். கிடைத்தால் உம் வாழ்வு இனிதென இருக்கும் ஹமீத்..... ''ஆடம்பரமான பெண், ஒருவனின் கவனத்தைக் கவருகிறாள். அழகான பெண் ஒருவனின் கலை உணர்வுகளுக்கு விருந்தாகிறாள் ஆனால் அன்பும், பரிவும் உள்ள பெண்தான் ஒருவனைத் தன்னுரிமையாக்கிக் கொள்கிறாள். இவை பெண்களைப் பற்றி அரிஸ்டோட்டில் சொன்னவை.

*எஸ். ராஜ்குமார் – கல்கமுவ*

**கேள்வி:** டியர் பித்தா...! சில பல்கலைக் கழக மாணவர்கள் கள்ளுத் தவறணைகளில் நிற்கிறார்களே?

**பதில்:** அவர்கள் உண்மையில் கள்கலைக் கழக மாணவர்களாக இருக்கிறார்கள்.

*தாரணி – மட்டக்களப்பு*

**கேள்வி:** இன்றைய காலத்துப் பெண்களின் கூந்தலை பார்க்கும் போது பித்தா நீர் என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:** முன்னைய காலத்தில் கூந்தலில் இயற்கையாக வாசம் இருக்கிறதா என்று ஆராய்ச்சி செய்தார்கள். ஆனால் இப்போது கூந்தல் இருப்பது உண்மையோ என்று ஆராய்ச்சி செய்ய வேண்டி இருக்கிறது.

முன்பெல்லாம் கூந்தலை அவிழ்த்து விட்டால் தரைவரை வந்து விழும். ஆனால் இப்போது அவிழ்த்து விட்டால் நிரந்தரமாகவே தரையில் விழுந்துவிடும்.

*த.அஜிதா – கோட்டைக்காடு*

**கேள்வி:** கர்நாடக இசையினை இப்போதுள்ளவர்கள் அதிகம் ரசிப்பதில்லை. ஏன் பித்தா?



**பதில்:** மேலைத்தேய இசையின் வருகையும் கர்நாடக இசை சார்பான அறிவு இன்மையும் கர்நாடக இசைமீதான ஈடுபாட்டினையும், ஆர்வத்தினையும் அருகச் செய்து வருகின்றன.

ஒரு மண்டபத்திலே ஒருவர் கர்நாடக இசையில் அமைந்த பாடல்களைப் பாடிக்கொண்டிருந்தார். இவருடைய பாடல்களை கேட்டு ரசிக்க வந்திருந்த அனைவரும் ஒருவர் பின் ஒருவராக சலிப்புணர்வோடு அவ்விடத்தைவிட்டு அகன்று கொண்டிருந்தனர். ஆனால், அங்கே ஒரு வயோதிபப் பெண் மாத்திரம் பொறுமையாகவும் மிக அமைதியாகவும் அந்தப் பாடகரைப் பார்த்தவாறு அமர்ந்திருந்தார். இதனை அவதானித்த அந்த பாடகர்.தன் பாடலை கேட்டு ரசிக்க ஒருவராவது இருக்கிறாரே என்று எண்ணி நீண்ட நேரமாக உரத்த குரலெடுத்து பாடல்களைப் பாடிக்கொண்டிருந்தார். சற்று நேரத்தில் குரல் அடைத்து பாடல்களை நிறுத்திய இவர் அந்த வயோதியப் பெண் அமர்ந்திருந்த இடத்துக்கு வந்தார்.. வந்தவர்.

''அம்மா என்னுடைய பாடல்களை மற்றவர்கள் ரசிக்காது எழுந்து சென்றாலும் நீங்கள் மட்டும் பொறுமையாக இருந்து கேட்டதற்கு நன்றி'' என்றார். அதற்கு அந்த வயோதிபப் பெண்;

''அடத்தம்பி நான் உன்ர பாட்டைக் கேட்க இருக்கேல. நீ இவ்வளவு நேரமும் பாடேக்க உட்கார்ந்திருந்த பாய் என்ர பாய். அதை எடுத்துக்கொண்டு போகத்தான் இருந்தனான்'' என்றாராம்.

*செல்வா – கிளிநொச்சி*

**கேள்வி:** பித்தா உங்களுக்குப் பாடத்தெரியுமா?



**பதில்:** செல்வா... உங்களுக்கு ஓடத் தெரியுமா? நான் பாட ஆரம்பித்தால் நீங்கள் ஓட வேண்டிவரும்.

*க.சந்திரா – கொடிகாமம்*

**கேள்வி:** பித்தா.. எனது கணவர் ஏதாவது வேலையை செய்யச் சொன்னால் பழகின இடத்தில்தான் செய்வேன் என்று பிடிவாதம் பிடிக்கிறார். இவரை திருத்துவதற்கு ஒரு வழி சொல்லுங்களேன் பிளீஸ்....


**பதில்:** ''சாப்பிடச் சோறு இருக்கு பிறகேன் கஞ்சி என்று நினைக்கிறாரோ என்னவோ சகோதரி.... எப்பவும் பழகின இடத்தை விட்டு பழகாத இடத்தில் வேலை செய்வதென்றால் யாருக்கும் ஆரம்பத்தில் கஷ்டமாகத்தான் இருக்கும். அதனால் தற்போது உமது கணவர் வேலை பார்க்கிற அந்தப் பழகின இடத்திலையும் வேலை செய்ய வேண்டாமென்று தடுத்துப்பாரும் பழகாத வேலைகளையும் பழகப் பார்ப்பார்.

*இ.நெடுஞ்செழியன் – சூராவத்தை*

**கேள்வி:** டியர் பித்தா! அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி பிறநாட்டு கிரிக்கெட் அணிகளுக்கு சவால் விடும் அணியாக இருப்பதோடு ஆசிய கிரிக்கெட் அணிகளை துவம்சம் செய்கின்றதே.... என்று எனது நண்பன் பெருமிதப்படுகிறார்.. அவருக்கு என்ன பதில் சொல்வீர் பித்தா.

**பதில்:** திறன் இல்லாத வீரர்களைக் கொண்ட அணி பலமுள்ள அணியாக இருக்க முடியாது. ஒரு காலத்தில் மேற்கிந்திய கிரிக்கெட் அணி மிகவும் பலம் வாய்ந்த அணியாகத் தான் இருந்தது. ஆனால், இப்போது பங்களாதேஷ் அணியையே வெல்ல முடியாது கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. அது போலத் தான் இனிவரும் ஒரு காலத்தில் அவுஸ்திரேலிய அணியும் பலம் அற்ற அணியாக மாறலாம். யார் கண்டார். ''யானைக்கும் ஒரு நாள் அடி சறுக்கும்''

எப்படித்தான் அவுஸ்திரேலிய அணி தற்போது உலகில் பலம் வாய்ந்த அணியாக இருந்தாலும் கிரிக்கெட்டில் சாதனை என்று சொல்லும் போது அதற்கு சொந்தக்காரர் ஆசியா அணியினரே என்றால் அது மிகையாகாது. நெடுஞ்செழியன் இதை உமது நண்பனிடம் சொல்லி வைக்கவும்.



வி.விஜிமயூரா – யாழ். பல்கலைக்கழகம்

கேள்வி: சில ஆண்கள் தம்மை காதலிக்கச் சொல்லி பெண்களுக்குப் பின்னால் திரிகிறார்கள். ஏன் பெண்கள் அப்படித் திரிவதில்லை?

பதில்: ஏன் திரிவதில்லை? இதில் ஒரு சிறு வேறுபாடு இருக்கிறது.

ஆண்கள் தங்களை காதலிக்கச் சொல்லி பெண்களுக்கு பின்னால் திரிவார்கள். காதலுக்குப் பின்னர் பெண்கள் தமக்கு வெளிநாட்டு மாப்பிள்ளை பார்க்குமாறு பெற்றோரின் பின்னால் திரிவார்கள்.

*பவித்திரன் – கொழும்பு.*

கேள்வி: நான் அரசியல் கட்சி ஒன்றில் இணைய ஆசைப்படுகின்றேன்?

பதில்: பெரிதாக்கக்கூடிய புகைப்படங்கள் ஏதாவது உம்மிடம் இருக்கிறதா? அத்தோடு நீர் இல்லாத காலத்தில் உமது குடும்பத்தை பொறுப்பாகக் கவனிக்கக் கூடியவர்கள் இருக்கின்றார்களா? இந்த இரண்டும் இருந்தால் இணையுங்கள். மறுப்பில்லை.

*வ.பூமணி – வன்னேரிக்குளம்*

**கேள்வி:** இலங்கைவானொலி தேசிய சேவையின் தென்றலில் இடையே தடைபட்டு புயல் அடிக்கிறதே என்ன காரணம்?

**பதில்:** தற்போது உஷ்ண காலம் என்பதால் அந்தப் புயலை அடிக்க விடுகின்ற தென்றல் தொழில்நுட்பவியலாளர்கள், சில்லென வீசுகின்ற அந்தத் தென்றல் புயல்பட்டு வானொலி நிலையத்திலேயே தூங்கிவிடுகிறார்களோ என்னவோ.

*சசி – வட்டக்கச்சி*

**கேள்வி:** பித்தா காதல் வலியானதா? வலுவானதா?

**பதில்:** கல்யாணத்துக்கு முன் காதலை வலுவானதாக எண்ணும் காதலர்கள் கல்யாணத்துக்குப பின் காதலை வலியனதாகவே எண்ணுகிறார்கள் போலும்.

*கா.சுலேகா – முந்தல்*

**கேள்வி:** பித்தன் ஸார்! ஒரு பெண் சொல்வதை எப்போது ஆண் கேட்கிறான்.

**பதில்:** புதிதாகத் திருமணமான பொழுதில்.

*அ.ரேகா – முத்தரிப்புத்துறை*

**கேள்வி:** பித்தா! ''அ'' என்ற உயிர் எழுத்துக்கு முதல் எழுத்து ஒன்று உள்ளதென்று எனது நண்பி ஒருவர் சொல்கிறார். அது என்னவென்று எனக்குத் தெரியவில்லை.. பித்தா உமக்குத் தெரியுமா?

**பதில்:** O.. Yes... ''அ''வின் முதலெழுத்து ''ஆ'' தானே என்ன விளங்கவில்லையா ரேகா ? ''ஆனா'' இதனை வாசியும் விளங்கும்.

*சி.குகானந்தம் – விசுவமடு*

**கேள்வி:** காதலிக்கும் பெண்களை நம்பலாமா?

**பதில்:** காதலிக்கத் துடிக்கும் பெண்களை நம்பினாலும் காதலிப்பதாய் நடிக்கும் பெண்களை நம்பாதீர்.

*கு.லோகேஸ்வரன் – கோட்டைக்காடு*

**கேள்வி:** பித்தா! உலகம் ஒரு நாள் அழியப் போவது உண்மையா?

**பதில்:** நீர் எங்கு இருக்கிறீர். உலகம் எப்போ அழிஞ்சு போச்சே!


*நீலன் – யாழ்ப்பாணம்*

**கேள்வி:** அன்பின் பித்து! மனம் விட்டு மனம் தாவும் மங்கையர் மரம் விட்டு மரம் தாவினால் எப்படியிருக்கும்?

**பதில்:** தாவும் அந்த மரத்தின் இலை கூட தாடியாய் முளைக்கும்.

எஸ்.வாணி– மீசாலை

கேள்வி: நான் தென்னிந்திய சினிமாவில் நடிக்க ஆசைப்படுகிறேன். அதற்கான ஆயத்தங்களாக எனது உடல் அழகில் கவனமெடுத்துவருகிறேன். தற்போது வெய்யிலுக்குள் செல்வதை குறைத்து விட்டேன். என் உடம்பு பெருத்து விடுமென்று உணவையும் குறைத்து விட்டேன். இப்படியாக பலதைக் குறைத்த நான் வேறு இனி எதைக் குறைக்க வேண்டிவரும்.



பதில்: வேறு என்ன? நீர் உடுக்கும் உடையைக் குறைக்க வேண்டி வரும்.

*சி.குகானந்த் – விசுவமடு*

கேள்வி: பித்தா உங்கள் ஜோக் எனக்கு ரொம்ப ரொம்பப் பிடிக்கும். உம்.... எடுத்து விடுங்கள் பார்க்கலாம்?

பதில்: நள்ளிரவில் ஒருவர் மிகப் பிரகாசமான அரிக்கன் லாம்பு ஒன்றோடு வேகமாக ஒரு வயல் வெளிக்கூடாக நடந்து சென்றுகொண்டிருந்தார். அந்தநேரம் அவரைவயல்வெளிக் காவலாளி ஒருவர் வழி மறித்தார்.

''அண்ணே.. இந்த இருட்டுக்குள்ள எங்க போறீங்கள்?'' என்று ஆச்சரியமாகக் கேட்டார்.

அதற்கு லாம்போட வந்தவர் ''எனக்கு உயிரோட இருக்கப் பிடிக்கலே. அதுதான் கிணத்துக்குள் விழுந்து சாகப் போறன்'' என்றார்

அதற்கு அந்தக் காவலாளி ''சாகப் போற நீங்கள் பிறகேன் அரிக்கன் லாம்போட போறீங்கள்?'' என்றார்.



அதற்கு சாகப் போனவர் சொன்னாராம் ''இல்லை போற வழியில ஏதேனும் பாம்பு, பூச்சி கடிச்சாலும் என்ற பயத்தியதான் லாம்போட போறன்'' என்று.

*இளவேனில் – யாழ்ப்பாணம்.*

**கேள்வி:** சில பெண்கள் திருமணமாகமுன் மெல்லிய தோற்றத்தோடு இருப்பார்கள். திருமணமானபின் அவர்கள் பெருத்த தோற்றத்தோடு இருப்பார்கள். இதுக்கு என்ன காரணம்?

**பதில்:** வேறென்ன... கணவனுடைய செலவுகளை இவர்கள் சேமித்து வைப்பதால்தான்.

*எம்.ரூபன் – கிளிநொச்சி*

**கேள்வி:** நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன். அவளும் என்னைக் காதலிக்கிறாள். ஆனால், இதை நானோ அல்லது அவளோ சொல்வதற்கு தயக்கமாக உள்ளது ஏன் பித்து?

பதில்: மலைமேல் இருந்தும் விழலாம், மரத்தின் மேல் இருந்தும் விழலாம்... ஆனால் காதலுக்குள் விழுந்தீரோ... எழுவதே கஷ்டம்தான் தம்பி.... பயத்தாலும் கொலை செய்யலாம். ஆனால், துணிவிருந்தால் தான் காதல் செய்யலாம்.

*கமல் – நவபுரம்*

**கேள்வி:** பித்து! பெண்களை மலர்களுக்கு ஒப்பிடலாமா?

**பதில்:** கூடாது... ஏனென்றால் மலர்களுக்கு ஏமாற்றத் தெரியுமா? இல்லையே..

## பித்தனின் கேள்வி

கேள்வி:– முரளியின் சாதனை முறையடிக்கப்படுமா?

## வாசகர் பதில்கள்

*குகன் – கண்டி.*

முறியடிக்கப்பட்டாலும் முடிவில் முறியடிக்கப்போவது முரளியே.

*பிரியதர்ஷினி – மட்டக்களப்பு.*

போட்டிகளைவிட அதிஷ்டம் அதிகமாகவே முரளியின் பக்கம் இருப்பதால் சாதனைகள் தொடர்ந்து அவர் கைவசமே இருக்கும்.

*இளங்கோ – நெல்லியடி.*

பொறுத்திருந்து பார்ப்போம். காலம் அல்ல அவர் கையே பதில் சொல்லும்.

*பீற்றர் – கொழும்பு.*

சாதனைகள் நிலைநாட்டுவது நிச்சயம். ஆனால், முரளியே சாதனைக்குரியவர் என்பது நிச்சயமல்ல.

*உமா – திருகோணமலை.*

வல்லவனுக்கு வல்லவன் வையகத்திலுண்டு என்பது முரளிக்கு மட்டும் விலக்கல்ல.

---

பித்தன்மீது பித்துக் கொண்ட வாசகர்களுக்கு:–

நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு பித்தன் பதில் தருவார். பித்தன் தரும் கேள்விக்கு நீங்களும் பதில் அளியுங்கள்.



ஐந்து தரமான – குறும்பான – யதார்த்தமான – பதில்கள் பிரசுரிக்கப்படும். பதில்களை ஜூன் 20 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.

**கேள்வி:–** ஜனாதிபதி கூறியதுபோல் மூன்று மாதங்களுக்குள் பட்டதாரிகள் அனைவருக்கும் வேளைவாய்ப்பு வழங்கப்படுமா?

**பதில்:–** ஆட்சி பீடம் ஏறும் வரை அனைவராலும் இது போன்ற வாக்குறுதிகள் வழங்கப்படுவதுண்டு.

இந்தக் கேள்விக்கு பித்தன் அளித்த பதில்மேலே. நீங்கள் பதில் அனுப்ப வேண்டிய முகவரி.

பித்தனுக்கு எங்கள் பதில்கள்,
சுடர்ஒளி வார இதழ்,
85,ஜெயந்தமல்லிமாராய்ச்சி வீதி,
கொழும்பு – 14.

# வாட்மோரின் வளர்ப்பில் பங்களாதேஷ்!

சிட்டுக் குருவிக்கு வல்லூறை எதிர்க்கும் ஆற்றலை கற்றுக் தரமுடியுமா? முடியும் என்கிறார் டேவ் வாட்மோர். கிரிக்கெட்டில் வளர்ச்சி பெறுவோமா என்று ஏங்கிக் கொண்டிருக்கும் நாடுகளுக்கு இவர் ஒரு ஏணி. இவரின் சீரிய பயிற்சியின் கீழ் தற்போது பங்களாதேஷ் நல்ல வலிமை பெற்றுத் திகழ்கிறது.

1975இல் இருந்து 1992ஆம் ஆண்டு வரை உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடர்களின் கால் இறுதிக்குக் கூடத் தகுதி பெறாத அணியாக வலம் வந்து கொண்டிருந்தது இலங்கை. தரவரிசையில் கூட ஸிம்பாப்வே அணிக்குப் பிறகுதான் இருந்து வந்தது. துலீப் மெண்டிஸ், ராய்டயஸ், அரவிந்த டி சில்வா, ரணதுங்க, குருசிங்க, மஹனாம போன்ற திறமையான வீரர்கள் இருந்தும் இந்த அணியால் வெற்றிக் கனிகளை ருசிக்க இயலவில்லை. இந்நிலையில்தான் 1996 ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்துக்கான இலங்கை அணிக்கு பயிற்சியாளராக டேவ் வாட்மோர் நியமிக்கப்பட்டார்.



அந்தத் தொடருக்கு முன்பு வரை எட்டாவது வீரராக களமிறங்கிய ஜெயசூரியா, ஏழாவது வீரராக களமிறங்கிய கலுவிதாரன இருவரையும் ஆரம்ப ஆட்டக் காரர்களாக களமிறக்கினார். மேலும் ஆரம்ப ஆட்டக்காரர்களான மஹனாம, திலகரத்ன போன்றவர்களை பின்வரிசையில் ஆடச்செய்தார். இதற்கு நல்லபலனும் கிடைத்தது. அணியின் ஓட்ட சராசரியை ஜெயசூரியா, அரவிந்தடி சில்வா ஆகியோர் உயர்த்த பின் வரிசை வீரர்கள் அதை தக்க வைத்துக் கொண்டனர். இது மட்டுமா இலங்கை அணிக்கு அஸ்திவாரமான முரளிதரன், சமிந்த வாஸ் இருவரையும் நேர்த்தியாக பயன்படுத்த ஆரம்பித்தார். இவர்களுக்கு ஏனைய வீரர்களும் நல்ல ஒத்துழைப்பு அளிக்க இலங்கை ஒரு வலுவான அணியாக திகழ்ந்தது. சில ஆண்டுகளுக்குப் பிறகு இலங்கை அணியில் நிலவிய சில பிரச்சினைகளாலும், தொடர் தோல்விகளாலும் தனது ஒப்பந்தத்தை முடித்துக் கொண்டு அந்த அணியைவிட்டு வெளியேறினார்.

அதே சமயம் மோசமான தோல்விகளால் சரியான பயிற்சியாளரை தேடிக் கொண்டிருந்த பங்களா தேஷ் இவரை 2 ஆண்டுகளுக்கு பயிற்சியாளராக ஒப்பந்தம் செய்தது. இதன் பின் தனது திறமைகளை மீண்டும் காட்ட ஆரம்பித்துள்ளார் வாட்மோர். அணியின் மூத்த வீரர்களை புறந்தள்ளி விட்டு இளம் வீரர்களை தட்டிக்கொடுக்க ஆரம்பித்தார். மெல்ல மெல்ல துடுப்பாட்டத்திலும், பந்து வீச்சிலும் வலுப்பெற்றது பங்களாதேஷ். அதன் விளைவு அவுஸ்திரேலிய மண்ணில் அவர்களின் வேகபந்து வீச்சை சமாளித்து ஆடி ஸ்டீவ்வோவிடம் பாராட்டை பெற்றது. தொடர்ந்து, ஸிம்பாப்வே அணிக்கெதிரான தொடரில் ஒரு நாள் சர்வதேச ஆட்டம் ஒன்றில் வெற்றி என்று நல்ல முன்னேற்றம் கண்டது.

பங்களாதேஷ் அணியின் வளர்ச்சி தற்போது நடைபெற்று முடிந்த மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான தொடரில் தெளிவாகத் தெரிந்தது. இந்த தொடரின் முதல் டெஸ்ட் சென்ட் லூசியாவில் நடந்தது. இதில் பங்களாதேஷ் அணித் தலைவர் பஷார், தேர்ந்த துடுப்பாட்ட வீரர் போல விளையாடினார். வேகப் பந்து வீச்சை எல்லாம் சர்வசாதாரணமாக சந்தித்து ரன்களை குவித்தார். இவர் மட்டுமன்றி – ஒன்பதாவது வீரராக களமிறங்கிய முகமது ரபிக்கூட அற்புதமாக ஆடி சதம் அடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இரண்டாவது இன்னிங்ஸில் முன்னேற்றம் இல்லாத விக்கெட் காப்பாளர் கலீட் மஷூட் சதம் அடித்ததும் குறிப்பிடத்தக்கது. இந்த ஆட்டத்தின் முதல் இன்னிங்ஸில் 400 ஓட்டங்களை கடந்தது பங்களாதேஷ்.

தற்போதைய நிலையில் இந்த அணிக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றி என்றே இதைக் குறிப்பிடலாம். காரணம், எதிர்த்து ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் அணிகூட அதன் முதல் இன்னிங்ஸில் 352 ஓட்டங்களை



மட்டுமே பெற்றது. எது எப்படியோ இப்படியோரு முன்னேற்றத்தை பங்களாதேஷ் அணிக்கு பெற்றுக் கொடுத்த டேவ் வாட்மோரை பாராட்டாமல் இருக்க முடியாது.

# சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றார் நசார் ஹுசைன்

சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றார் நசார் ஹுசைன்

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் நசார் ஹுசைன் டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

இங்கிலாந்து– நியூசிலாந்து அணிகளுக்கிடையே லோட்ஸில் நடைபெற்ற முதல் டெஸ்டில் சதம் அடித்து இங்கிலாந்து அணியின் வெற்றிக்கு உதவிய நசார் ஹுசைன், முதல் டெஸ்ட் முடிந்த 3 நாட்களில் டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து தனது ஓய்வினை அறிவித்துள்ளார்.

36 வயதான ஹுசைன், இளம் வீரர்கள் அணிக்குள் நுழைவதற்குக் குறுக்கே தடையாக நிற்க விரும்பவில்லை என்று ஏற்கனவே அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் பிறந்த நசார் ஹுசைன், இங்கிலாந்து அணிக்காக இதுவரை 96 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடி 5 768 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். அவரது சராசரி 37.18 ஆகும். இதில் 14 சதங்களையும், 33 அரைச்சதங்களையும் அவர் அடித்துள்ளார். 100 டெஸ்ட் ஆட்டங்களில் இங்கிலாந்து அணிக்காக விளையாட வேண்டும் என்பதே அவரின் ஆசையாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்து – நியூசிலாந்து அணிகளுக்கிடையே லோட்ஸில் நடைபெற்ற முதல் டெஸ்ட் ஆட்டத்தில் 2ஆவது இன்னிங்ஸில் நசார் ஹுசைன் ஆட்டமிழக்காமல் 103 ஓட்டங்களை எடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது. இந்த ஆட்டத்தில் இங்கிலாந்து 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது.

இது வரை 88 ஒருநாள் ஆட்டத்தில் விளையாடிய நசார் ஹுசைன் 2 332 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். இவர் 45 டெஸ்ட் ஆட்டங்களில் இங்கிலாந்து அணிக்கு தலைமை தாங்கியுள்ளார். 2003ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் நடைபெற்ற உலகக்கிண்ணத் தொடருக்குப்பின்னர் ஒரு நாள் ஆட்டங்களில் இருந்து ஓய்வு பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நியூஸிலாந்துடனான முதலாவது ஆட்டத்தில் அணித் தலைவர் மைக்கல் வோகன் காலில் ஏற்பட்ட உபாதை காரணமாக விளையாடவில்லை. எனவே அவருக்குப்பதிலாக அன்டி ஸ்ட்ரால்ஸ் அணியில் சேர்க்கப்பட்டார். தற்போது இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் வோகன் மீண்டும் விளையாடத் தகுதி பெற்றுள்ள நிலையில் அணியிலிருந்து யாரை நிறுத்துவது என்ற கேள்வி எழுந்தது. காரணம் வோகனுக்குப்பதிலாக அணியில் இடம்பெற்ற அன்டி ஸ்ட்ராவ்ஸ் மிகச்சிறப்பாக துடுப்பெடுத்தாடினார். ஆதலால் இளம் வீரர்கள் அணிக்குள் நுழைய ஹுசைன் தடையாக நிற்க விருப்பமின்மையாலேயே அவர் ஓய்வு பெற்றார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.



எனினும் சதம் அடித்த நிலையில் ஹுசைன் ஓய்வினை அறிவித்திருப்பது பலருக்கும் பெரும் வியப்பாக உள்ளது.

இதேவேளை நசார் ஹுசைனின் தலைமைத்துவத்திறமைகளை இந்திய அணியின் நட்சத்திரத்துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர்மற்றும் மேற்கிந்திய தீவுகளின் தலைவர் ஜிம்மி ஆடம்ஸ், தென்னாபிரிக்க அணியின் வேகப்பந்து வீச்சாளர் டெனால்ட் உட்பட இன்னும் பல முன்னணி வீரர்களும் தமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர்.

## விளையாட்டுச் செய்திகள்!

இது குறித்து பி.பி.சி வானொலிக்கு சச்சின் டெண்டுல்கார் பேட்டி அளிக்கையில்,

ஹுசைன் ஒரு மிகச்சிறந்த தந்திரம் மிக்கவர். எனக்கு எதிராக விளையாடிய தலைவர்களில் மிகச்சிறந்தவர்களில் அவரும் ஒருவர். அவர் தற்போது கிரிக்கெட் விளையாட்டிலிருந்து ஓய்வுப் பெற்றது சர்வதேச கிரிக்கெட்டிற்கும் இங்கிலாந்து கிரிக்கெட்டிற்கும் மிகப் பெரிய இழப்பு ஆகும் என தெரிவித்துள்ளார்.

இது குறித்து தென்னாபிரிக்க அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் அலன் டொனால்ட் கருத்து வெளியிடுகையில்:–

''நசார் ஹுசைன் ஓய்வினை அறிவித்திருப்பது அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது. நியூசிலாந்துடனான தொடரின் எல்லாப் போட்டிகளிலும் அவர் விளையாடுவார் என நினைத்தேன். லோட்ஸ் மைதானத்தில் ஹுசைனின் விளையாட்டு மிகச் சிறப்பாக இருந்தது. இருப்பினும் ஓய்வு என்பது எல்லா வீரர்களுடைய வாழ்விலும் வரக் கூடியது தான்'' என்றார்.

எவ்வாறாயினும் அணியில் இளம் வீரர்களுக்கு இடமளிக்கும் வகையில் நசார் ஹுசைன் தனது ஓய்வை அறிவித்திருப்பது பெரும் வியப்பாகவும், வரவேற்கத்தக்கதாகவும் இருக்கின்றது.

தற்போது ஓய்வு பெற்ற ஹுசைனுக்கு கிரிக்கெட் உலகில் பல்வேறு வீரர்களிடம் இருந்தும் வாழ்த்துக்கள் குவிந்த வண்ணம் இருக்கின்றன.

# மலையகக் கண்ணோட்டம்



**இரா. புத்திரசிகாமணி**

# மலையகத்தை சிதைக்க மாற்றுத்திட்டம்

## அரச கம்பனிகள் சதி

பெருந்தோட்டக் கம்பனியின் நிர்வாகத்தின் கீழ் இருக்கும் தோட்டங்களையும், நேரடியாக அரச நிர்வாகத்தின் கீழ் இருக்கும் தோட்டங்களையும் துண்டாடி விற்க இரகசியமான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

அரசாங்கத்தின் இந்தத்திட்டம் சில தொழிற்சங்கங்களுக்கும் தெரியும். ஆனால் அவை கண்டும் காணாதது போல் அசட்டையாகவே இருக்கின்றன.

அரசுக்குச் சொந்தமான தோட்டங்களை நிர்வகித்து வரும் 22 தனியார் கம்பனிகளும் தேயிலை, இறப்பர் தோட்டங்களில் காணப்பட்ட அனைத்து வளங்களையும் சுரண்டி சூறையாடிவிட்டன.

பல கோடி ரூபா பெறுமதியான பாரிய மரங்களை எல்லாம் வெட்டி காசாக்கி விட்டனர். சக்கையை பிழிந்து சாறு எடுப்பது போல் தேயிலைக் கொழுந்தையும், இறப்பர் பாலையும் உறிஞ்சிக் குடித்துவிட்டனர்.

தேயிலை, இறப்பர் பயிர்களுக்கு போதிய பசளை இடப்படவில்லை, சீரான பராமரிப்பு இல்லை. துப்புரவு செய்யப்படாமல் தேயிலைத் தோட்டங்கள் சிறு பற்றைக் காடுகள் போன்று காட்சி அளிக்கின்றன. செடி கொடிகள் மண்டிக்கிடக்கின்றன.

அங்கே விஷப்பூச்சிகளும், பாம்புகளும், இரத்தத்தை உறிஞ்சும் அட்டைகளும் குடிபுகுந்துள்ளன.

காட்டுப் பன்றிகள் கூட்டம் கூட்டமாக படையெடுக்கின்றன.

இத்தனை உயிராபத்துக்களுக்கும் மத்தியில் அப்பாவி தொழிலாளர்கள் கொழுந்து பறிக்கின்றனர். பால் சேகரிக்கின்றனர்.

வேலை நேரத்தில் காட்டுப் பன்றிகளால் தாக்கப்பட்டும், விஷப்பாம்புகளால் தீண்டப்பட்டும் அப்பாவி தொழிலாளர்கள் தினசரி உயிர் இழந்து வருகின்றனர்.

இவற்றை அவதானிக்கவோ அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவோ எவரும் இல்லை.

நாம் வயிறு பிழைக்க வேண்டும், குழந்தைகளை பாதுகாக்க வேண்டும், அவர்களை வளர்த்து ஆளாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தினசரி ஜீவமரணப் போராட்டம் நடத்துகின்றனர். இவ்வளவு கஷ்டங்களுக்கும் மத்தியில் தொழிற்சங்க சந்தா என்ற பெயரில் பெறும் உண்டியல் பணத்தில் உல்லாசம் காணும் தொழிற்சங்கத் தலைவர்களும் இவர்களை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை.

இதனால் பல தோட்டக் கம்பனிகள் தமது நிர்வாகத்தில் இருக்கும் தோட்டங்களை தனியாரிடம் ஒப்படைக்கும் முயற்சியில் இறங்கிவிட்டன. தொழிற்சாலைகளை மூடுகின்றனர். தொழிலாளர்களுக்கு தெரியாமலே தோட்டங்களை விற்றுவிடுகின்றனர். புதிய முதலாளிமார் தோட்டத்துக்கு வரும் வரை தொழிலாளர்களுக்கு இதுபற்றி எதுவுமே தெரிவதில்லை.

அப்படியானால் இத்தோட்டங்களின் வளர்ச்சிக்காக தமது உடல், உயிர் அனைத்தையும் தியாகம் செய்து உழைத்த தோட்டத்தொழிலாளர்களின் எதிர்காலத்துக்கு யார் பொறுப்பு?

இவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சேவைக்காலப் பணம், ஊழியர் சேமிப்பு நிதி, ஊழியர் நம்பிக்கை நிதியம், வருடாந்த விடுமுறை, போனஸ், ஊக்குவிப்பு போனஸ், பிரசவ சகாயப் பணம் எனப் பல கோடிரூபாய்களை இந்த கம்பனிகள் ஏப்பம் விட்டிருப்பதும் தெரியவந்துள்ளது.

இவற்றிலிருந்து தப்பிக் கொள்ளவே தோட்டங்களை தனியாரிடம் ஒப்படைத்து விட்டு தப்பி ஓட முனைகின்றனர் கம்பனிகாரர்கள். இதற்கு சில பலம்வாய்ந்த தொழிற்சங்கங்களும் உடந்தையாக இருப்பதும் இப்போது அம்பலமாகி உள்ளது.

முன்னைய அரசின் போது இரகசியமாக மேற்கொண்ட முயற்சிகளை இப்போது அரசின் உதவியுடனேயே சட்டரீதியாக செயற்படுத்த முனைந்து விட்டனர். கம்பனிக்காரர்களுக்கு அரசாங்கம் பச்சைக்கொடி காட்டி விட்டது.

தோட்டங்களைத் துண்டாடி சிறு சிறு துண்டுகளாக தனியாரிடம் ஒப்படைக்கும் திட்டம் தயாராகிவிட்டது.

தமிழ் தோட்டத்தொழிலாளர்களின் வாக்குகள் ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சிக்கு மட்டுமே செல்கின்றன. இதனால் தோட்டங்களில் தமிழர்களை சிறுபான்மையாக்க வேண்டும். அவர்களுடைய வாக்குகளை சிதறடிக்க வேண்டும் என கங்கணம் கட்டிக் கொண்டிருந்தபெரும்பான்மை அரசியல் கட்சிகளுக்கு இது ஒரு நல்ல வாய்ப்பாகி விட்டது.

தோட்டங்களைத் துண்டாடி அங்கே மாற்று தொழில் முயற்சிகள் ஆரம்பிக்கப்படும். பெரும்பான்மையின இளைஞர் யுவதிகள் சுயதொழில் முயற்சி என்றும், தொழில் பயிற்சி என்றும் குடியேற்றத்திட்டங்கள் உருவாக்கப்படும். அப்போது தேயிலை, இறப்பர் உற்பத்தி தானாகவே இல்லா தொழிந்து போகும். இவ்விரு தொழில்களை மட்டுமே நம்பி இருந்த பல இலட்சம் தோட்டத் தொழிலாளர்கள் தொழில் இழக்க நேரிடும்.

அரசாங்கத்தின் இந்த சதி முயற்சியை மூடிமறைக்கவே பெருந்தோட்டத்துறையில் 18 ஆயிரம் பேருக்கு புதிய தொழில் வாய்ப்புக்களை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது என அடிக்கடி அரச ஊடகங்களிலும் மேடைகளிலும் கூறிவருகின்றது.

இதற்கான அத்திவாரங்கள் போடப்பட்டு விட்டன. திட்டங்கள் தயாராகி விட்டன. எந்த நேரத்திலும் உத்தியோக பூர்வமான அறிவித்தல்கள் வெளிவரலாம்.

இப்பொழுதே தோட்டத் தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புகள் இல்லை. வேலை நாட்கள் குறைக்கப்படுகின்றன. அரை வயித்துக் கஞ்சிக்கே திண்டாடுகின்றனர். இப்டியான நிலையில் மேலும் 18 ஆயிரம் பேருக்கு எப்படி தொழில்வாய்ப்புக்களை வழங்கப்போகின்றார்கள் என்பதை தொழிலாளர்களின் இரத்தத்தில் உயிர் வாழும் தொழிற்சங்கத் தலைவர்கள் சிந்திக்க மாட்டார்களா? தினசரி சந்தாப் பணத்தை மட்டுமே எண்ணிக்கொண்டிருக்கும் இவர்களுடைய மரமண்டையில் மலையகம் எதிர் நோக்கும் அபாயம் தொடர்பாக யோசிக்க முடியாமல் போய்விட்டதா!

தோட்டத் தொழிலாளர்கள் ஒரே இடத்தில் கூட்டமாக வாழ்ந்தால் தானே உங்களுக்கும் சந்தா கிடைக்கும். அவர்களுடைய குடும்பத்தினர்களின் வாக்குகள் கிடைக்கும். அவர்களுடைய வாக்குகள் கிடைத்தால் தானே நீங்களும் நாடாளுமன்றம் செல்ல முடியும். அமைச்சர்களாக முடியும்.

தமிழ் தொழிலாளர்கள் ஒன்றாகக் கூடி வாழும்போதே ஆங்காங்கே இன வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. தமிழர்களின் உடைமைகள் சூறையாடப்படுகின்றன. குடி இருப்புக்கள் தீவைத்துக் கொழுத்தப் படுகின்றன.

இந்த நிலையில் தோட்டங்களின் மத்தியில் மாத்து இனத்தவர்கள் குடியேற்றப்பட்டு விட்டால் மலையகத் தமிழர்களின் நிலைமை என்னவாகும்? தினசரி இனக்கலவரம், அரசும் பொலிஸும் கண்டும் காணாமல் இருக்கும். தமிழர்கள் தாமாகவே தோட்டங்களை விட்டு வெளியேறி விடுவார்கள்.

அது தான் இந்த அரசாங்கத்தின் திட்டமும் கம்பனிக்காரர்களின் சூழ்ச்சியும். இது நடைமுறைக்கு வந்து விட்டால் உங்களுடைய தனிப் பெரும் தலைவன் தானைத்தளபதி என்ற கோஷங்கள் எல்லாம் வெற்று வேட்டுக்களாகிவிடும்.

எனவே மலையகத் தலைவர்களுக்கு ஒரு வேண்டுகோள். உங்கடைய கருத்து வேறுபாடுகள், கட்சி முரண்பாடுகள், நான் என்ற ஆணவம் அதிகார மமதை இவற்றையெல்லாம் ஒரு பக்கம் மூட்டை கட்டிவைத்து விட்டு, மலையகத்துக்கு ஏற்பட்டிருக்கும் பேராபத்தைத்தடுக்க ஒன்றுபடுங்கள். உறுதியான நடவடிக்கைகளை ஒன்று சேர்ந்து திட்டமிட்டு செயற்படுத்துங்கள். வெள்ளம் வரும் முன்பு அணை போடவாருங்கள். வெள்ளம் பெருக்கெடுத்தால் அது மலையகத்தை மட்டுமல்ல உங்களையும் அழித்துவிடும் ஜாக்கிரதை.

இப்போதாவது சிந்தித்து செயற்பட ஒன்றுபடுங்கள். அப்போது தான் மலையகத்தைக் காப்பாற்ற முடியும் இது உறுதி.

---

# டேஸ்ட்கடை தணிகாசலம்



தணிகாசலம் அண்ணன் நின்ற நிலையிலேயே அன்று வந்த கடிதங்களைப் பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது அலுவலகம் செல்லும் வழியில் திலகாவும் அங்கு வந்தாள்.

''குட்மோர்னிங் அண்ணே! என்ன காலையிலேயே அதுவும் நின்றபடி தீவிரமாகக் கடிதம் வாசிக்கின்றீர்கள்'' இது திலகா.

''குட்மோர்னிங் ,குட்மோர்னிங் என்ன காலையிலேயே என்னைக் குடைய வந்திட்டியா'' என்றார் தணி அண்ணன்.

''என்னங்க அண்ணே! அவ்வளவு பெரிய கடிதம். உங்கள் பழைய கேர்ள் பிரண்ட் யாராவது எழுதி இருக்காங்களோ!'' எனக்கேட்டு விட்டு கலகலவென சிரித்தாள் திலகா.

''என்ன குட்டி உனக்கு எல்லாம் நான் கொடுத்த செல்லம் இப்படிக் கேட்கச் சொல்லுது. இந்த வயசுல எனக்கு ஏது கேர்ள் பிரண்ட். எல்லாம் உங்களைப் போன்ற வால்களின் பிரண்ட் ஷிப்தான்'' என்றார் தணி அண்ணன்.

''அண்ணே! நான் மட்டும் உங்களை இளமைக்காலத்தில் கண்டிருந்தால் கட்டாயமாக லவ் பண்ணி இருப்பேன்'' என்றாள் திலகா!

''ஆமாம், ஆமாம் அப்போ நானும் உன்னை இடுப்பில் தூக்கி வைத்துக் கொண்டு ஆராரோ பாடி இருப்பேன். இல்லையா'' என்றார் தணி அண்ணன்.

''அண்ணே, அண்ணே சொல்லுங்க அண்ணே, என்ன இந்தக்கடிதம்.''

''அடடா அதுவா எல்லாம் உன்னைப் போன்ற வால்கள் செய்கின்ற குழப்பம் தான்''என்றார் தணி அண்ணன் சற்று சீரியஸாக.

''அப்படி என்னங்க அண்ணே சீரியஸான குழப்பம்?''

''இங்க பாரு. இந்த மலையக மணியார் ஒரு மடல் வரைந்து இருக்கார். அவரை நீ ஏதோ கிண்டல் அடித்தாயாம்'' என்று மடக்கினார் தணி அண்ணன்.

''கொஞ்சம் வெவரமா சொல்லுங்க அண்ணே'' என்று கெஞ்சினாள் திலகா.

''ஒரு பிரதேசத்துக்குப்பொறுப்பான உயர் பொலிஸ் அதிகாரி என்றால் எல்லோருக்கும் பாதுகாப்புக் கொடுக்கணும். ஒரு அரசியல்வாதியோ, அமைச்சரோ வந்தால் அவர்களுடைய முழுப்பாதுகாப்புக்கும் இவர்களே பொறுப்பு. அப்போது அரசியல் வாதிகளின் கட்டளைகளையும் செயற்படுத்தவேண்டிய நிலையில் இருக்கின்றனர் என்று' மணியத்தார் கூற நீ என்னடா என்றால் அவர் பொலிஸுக்கு புகழ்பாடினார் என்று அல்லவா கூறினியாம். கீழே பாரு இந்த அசம்பாவிதங்களுக்கு பொலிஸாரே காரணம் என்றும் கூறி உள்ளனர்.'' என்று கடிதத்தைக்காட்டினார் தணி அண்ணன்.

''அடப்பாவமே அப்படியா சங்கதி. அதைப் பார்த்து அந்த மணியத்தார் எவ்வளவு வேதனைப்பட்டிருப்பார். வெரி சொறி அண்ணே.''


''சொறி சொன்னாப் பத்தாது. இனிமே இப்படி வராம பார்த்துக்கொள்ளணும் புரியுதா'' என்றார் தணி அண்ணன்.

''அண்ணே இங்க பாருங்க. கீழே என்னவோ சொல்லி இருக்காரே''

''ஆமாம். இந்தக் கந்தப்பொல விவகாரத்தை வைத்து அரசியல் லாபம் அடையும் அளவுக்கு நாம் அரசியல் வங்குரோத்து அடையவில்லை.

ஒரு ஆர்ப்பாட்டம் நடத்துவது என்றால் முன்கூட்டியே எல்லா அமைப்புகளுடனும் கூடிப்பேச வேண்டும். ஆலோசனைகளைப் பெற வேண்டும். முன்கூட்டியே இப்படித் திட்டமிட்டு செயற்பட்டால் நன்றாக இருக்கும்.

திடீரென ஓடிவந்து ஆர்ப்பாட்டம் நடத்துகிறோம். இந்தக் கறுப்புப்பட்டியை கட்டிக் கொள்ளுங்கள் என்றால் நியாயமாகுமா? என்றும் கேட்கிறார் '' என்று விவரமாகக் கூறினார் தணி அண்ணன்.



''அப்படி என்றால் சம்பந்தரோ இல்லை சந்திரசேகரனோ எவர் செய்தாலும் பாதகம் இல்லை. ஆனால் எங்களுடனும் பேசி ஆலோசித்து தீர்மானிக்க வேண்டும் என்கிறார் இல்லையா'' என்றாள் திலகா.

''என்னவோ திலகா இந்த அரசியல் வாதிகளை மட்டும் நம்பி எதையும் சொல்லி விடாதே. தோசை சுட்டோம் என்பார்கள். இல்லையே விறைப்பாக இருக்கிறதே என்று கேட்டால் ரொட்டி தானே சுட்டோம் என்று தோசையைப் புரட்டி விடுவார்கள். நிதானமாகப் பேச வேண்டும்'' என்று கூறினார் தணி அண்ணன்.

''எது எப்படியோ மணி ஒன்று கிடைத்து விட்டது என்பதால் அதைக்கண்டவர்கள் எல்லாம் அடிக்கக்கூடாது. ஓசை கேட்க இனிமையாக இருக்கும். ஆனால் அடிபடும் மணிக்கு அல்லவா வேதனை. பாவம் மணியத்தாருக்கு ஒரு சொறி'' என்று கூறிவிட்டு திலகா அலுவலகத்துக்குக் கிளம்பினாள்.

# சிங்கள மொழி உருவாக்கத்தில் தமிழின் பங்கு

எண்ணங்களை வெளிக்காட்ட உதவும் ஒரு கருவியே மொழியாகும். எண்ணங்கள் தனித்தனியான சொற்களால் அன்றி வசனங்களாலேயே வெளிக்காட்டப்படுகின்றன. மொழி என்பது முதலில் வசனத்தையே குறிக்கின்றது.

வசனத்தைப் பாகுபடுத்தி விளங்க வைக்கும் கலையே இலக்கணம் ஆகும். எனவே விஞ்ஞானரீதியாக ஒரு மொழியைப்பற்றித் தீர்மானிக்க உதவுவது அந்த மொழியிலுள்ள வசன அமைப்புக்களேயன்றி வெறும் சொற்கள் அல்ல. இந்த அடிப்படையில் சிங்களம் ஒரு திராவிட மொழியே. அதுமட்டுமல்ல, தமிழின் அடிப்படையிலே அது உருவாகியது என்பதும் உண்மையே.

பாளி, சமஸ்கிருத மொழிகளின் சகோதர மொழி சிங்கள மொழி எனக்கூறியபோதும் தமிழ்த்தாயின் குழந்தையே சிங்கள மொழி என முதலாளியார் எச்.எவ்.குணவர்த்ன கூறியுள்ளார்.

புத்தரின் இலங்கை வருகைக்குப்பின்பு இழு, தமிழ் ஆகிய மொழிகளின் அடிப்படை அமைப்புடன் பாளி, சமஸ்கிருத சொற்கூட்டத்துடன் ஒரு புதிய மொழி உருவாகியது. இறந்துபோன மொழியாகிய பாளியாலும், சமஸ்கிருதத்தாலும் ஒரு வாழும் மொழிக்குரிய அடிப்படைஅமைப்பை வழங்கியிருக்க முடியவில்லை.

கி.மு 3ஆம் நூற்றாண்டில் அந்தக்காலத்தில் காணப்பட்ட குகை பதிவுகளின்படி குழந்தைப்பருவத்திலிருந்த சிங்கள மொழி, இலக்கியங்களை உருவாக்குமளவுக்கு விருத்தியடைய கிட்டத்தட்ட 1500 வருடங்கள் எடுத்தன.

அப்படியானதொரு இலக்கியப்படைப்பு லீலாவதி ஆட்சிக்காலத்திலேயே நடந்தது. இதிலிருந்து நாம் தெளிவாக அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது யாதெனில், பருத்தித்துறை முதல் தோந்தற வரையும் இருந்த மனித இனம் ஆதியில் ஒரு மொழியே பேசி இருக்க வேண்டும். யாழ்ப்பாணத்தில் காணப்படும் ''இழு'' மூல இடப்பெயர்கள் இதற்கு ஆதாரமாகும்.

**இழு மொழி அடிப்படை அமைப்பு**

இலங்கையில் வாழ்ந்த நாகரும் இயக்கரும் ''எலு'', ''இழு'' என அழைக்கப்படும் நிறைவற்ற மொழியையே பேசி வந்தனர். இதனாலேயே இலங்கைக்கு ''ஈழம்'' சீழம் என மருவி சிஹலம், சிங்களம் என பெயர் மாறிற்று.

சிங்கள வசன அமைப்பு சொற்சேர்க்கை முதலியன திராவிட மொழியாகிய ''இழு'' வில் உள்ளது போன்று அப்படியே உள்ளது.

இலங்கையின் ஆதி இனத்தவர் மொழியை அறிய உதவுவது இந்த சிங்கள மொழி. அந்த மொழி தமிழே. இதன் அடிப்படையிலே தான் சிங்களம் உருவாகியது என்பதே சிங்கள அறிஞர்களின் ஆணித்தரமான கூற்றாகும்.

அதிகளவான பாளி, சமஸ்கிருதச் சொற்கள் சிங்களத்தில் காணப்பட்டாலும் அந்த மொழியிலுள்ள அடிப்படைச் சொற்கள் திராவிட மொழிக்கூட்டத்தையே சார்ந்தவை என்பதை ''இலங்கைச்சிங்களவரதும் ஆரியரதும் வரலாறு'' எனும் நூல் மூலம் அறிய முடிகின்றது.

**சிங்கள மொழியானது தமிழ் மொழியில் இருந்தே தனது தோற்றுவாயைப் பெற்றிருக்கிறது என்பதற்கான சான்றாதாரங்களை வெளிப்படுத்த முனையும் இக்கட்டுரை குறிப்பாக பேச்சுக்கள், சொற் பதங்களில் தமிழ் மொழியுடன் சிங்கள மொழி ஏற்கனவே நெருக்கமான தொடர்பை கொண்டிருந்ததையும் ஆராய்கிறது.**

சாமுவேல் லிங்கிஸ்ரன் எழுதிய நூலின் மனித இனப் பேச்சுக்கள், அமைப்புகள் பற்றி திராவிட மொழியிலிருந்தே அறியக்கூடியதாக உள்ளது. இவற்றுள் சிங்களமும் ஒன்று எனதெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஒரு மொழி திராவிடக் கூட்டத்தைச் சேர்ந்தது எனக் கூறும் வேளையில் அம் மொழிச் சொற்கள் எல்லாம் தமிழில் இருந்து பெறப்பட்டவை என்பதல்ல கருத்து.

இன்னொரு மொழியிலுள்ள வினை, பெயர்ச் சொற்களை மூலங்களாக வைத்தே ஒரு மொழி தனது சொற்கூட்டத்தை அமைத்து வளர்கின்றது.

மூல மொழியின் ஒரு சொல் பல மொழிகளில் இருப்பது இதனைத் தெளிவாக்குகின்றது. இந்தக்கருத்தில் தமிழ் மொழியிலேயே பல அடிப்படை மூலச்சொற்கள் இருப்பதால் தமிழிலிருந்து சிங்களம் உருவாகியது என்பதைக் காணலாம்.

சிங்கள மொழி தமிழ் மொழியிலிருந்து தோன்றியது என்பதை, தமிழிலிருந்து தோன்றிய மற்றைய மொழிகளைப்போல் உலக நியதிப்படி சிங்கள மொழிச் சொற்களில் காணப்படும் தமிழ் மொழி மூலங்களிலிருந்தே நிரூபிக்க முடியும்.

வண.குளோசற் பாதிரியாரின் சிங்கள வினைச்சொற்களின் மூலமும் தமிழ்ச் சொற்களும் எனும் நூலிலிருந்து எடுத்தாளப்படும் சில சொற்களைப் பார்ப்போம்.

| தமிழ் மூலக்கூறு | சிங்கள வினைச் சொல் |
|---|---|
| தள்ள | தள்ளுகற |
| ஒப்ப | ஒப்புகற |
| வீச | வீசுகற |
| பற்ற | பத்துகற |
| நியமி | நியமிக்கற |

இதே போன்று சில இறந்தகால வினையெச்சங்களையும் பார்ப்போம்.

| தமிழ் மூலக்கூறு | இறந்தகாலவினையெச்சம் |
|---|---|
| பின் | பிந் |
| அணிய | அந்திந்த |
| செய்ய | செய்த |
| தா | தெண்ட |
| வா | வெண்ட, வந்த |
| போங்க | பொங்கனவா |
| கொள்ள | கண்டா |
| ஏற்ற | ஏற்றுக்கண்ட |

இதே போன்று தமிழில் அமைந்த ஊர்களின் பெயர்கள் மருவி திரிபு அடைந்தமையைப் பார்ப்போம்.

| ஊர்ப்பெயர் | தமிழ்ப்பெயர் |
|---|---|
| தம்மன்கடவை | தம்பன் கடவை |

தோட்ட என்பது துறை, துறைமுகத்தைக் குறிக்கும். ஆற்றைக்கடந்து இறங்குதுறையைக் குறிக்கும்.

| | |
|---|---|
| வேரகம் தோட்ட | வேரகம் துறை |
| கால்லித் தோட்ட | கால்லித்துறை |
| ருகம்தோட்ட | ருகம் துறை |
| மீககா தோட்ட | மீககாத்துறை |
| பாணந்துற | பண்ணைத்துறை |
| ஜின்தோட்ட | சின்னத்துறை |
| பண்ணைத்துறை | பெந்தோட்ட |
| மாத்தறை | மாத்தற |
| அம்பாலந்துறை | அம்பாலாந்தோட்ட |
| சம்பன் துறை | ஹம்பாந்தோட்ட |

அதே போன்று கடல் குடாக்கள், வளைவுகளை குறிக்கும் களப்பு என்பன போத்துக்கீசர் திரித்த விதத்தால்

களம்பு கலம்பு எனவும்

நீர்களப்பு நீர்கொழும்பு எனவும் மாறியுள்ளது.

செரண்டீப் என்பது சேரன் தீவின் திரிபாகும்.

அடுத்துசிலஊர்ப்பெயர்களைப் பார்ப்போம்.

மொனறாகல – மின்னரக்கல்லு மாணிக்கக் கற்கள் உள்ள பகுதி.

முப்பனே – முற்பனை 3 பனை மரங்கள் உள்ள இடம்.

மினிப்பே – மணிப்பூமி இரத்தினக்கற்கள் உள்ள பகுதி.

வெள்ளையா – வெள்ளத்துக்கு உட்படும் வயல்.

கனுவெளி – கானல் வெளி

தேமோதர – தென்மதுரை

அடுத்து யாழ்ப்பாணத்திலும் ''இழு'' மொழி மருவிக்காணப்படும் இடங்கள் உள்ளன.

காலஞ்சென்ற பரணவிதான 28.6.63 டெயிலி நியூஸ் பத்திரிகைக்கு எழுதிய கட்டுரையில் ''இழு'' பாஷையில் அமைந்த ஊர்கள் சிங்களவர் வாழ்ந்த ஊர்களென்று கூறியது ஈண்டுநோக்கத்தக்கது.

முதலியார் இராசநாயகம் ''இழு'' மொழி தமிழின் ஒரு மருவிய பேச்சு வழக்கு மொழி என்று கூறி இருப்பது குறிப்பிடத்தக்கது. இது மலபாரிலுள்ள மலையாளத்தை ஒத்தது எனக்கூறலாம். இந்த மொழியே ஒரு காலத்தில் ஈழம் முழுவதும் பேசப்பட்ட மொழியாக இருந்துள்ளது.

''இழு'' சொல்லான கம் என்பதே ''கமம்'' ஆக உருவெடுத்திருக்கலாம். இதுவே கொடிகாமம், சுன்னாகம், மல்லாகம் என்பனவற்றில் வெளிப்படுகின்றன.

இதேபோன்று ''வில்லு'' என்ற இழுச் சொல் மருவி வில, வில்லு–சதுப்பு நிலத்தை குறித்தது. வீழ்ச்சியைக்குறிக்கின்ற விழு என்ற சொல்லாகவும் இது இருக்க முடியும். இதுவே உடுவில், இணுவில், கொக்குவில், கோண்டாவில், நந்தாவில் என்பதாக தெரிய வருகிறது.

கீழ்க்காணும் தூய தமிழ் பாஷைச் சொற்கள் நீர்ப்பாசன முறைகளில் கண்டுபிடிக்கப்பட்டன. கீழ்க்காணும் நீர்ப்பாசனச் சொற்களும் ஊர்ப் பெயர்ச் சொற்களில் தொங்கி நிற்பதைக் காண்போம்.

1. அணை 2. கட்டு 3. அணைக்கட்டு 4. மறிச்சுக்கட்டு 5. கடவை 6. கரை 7. முனை 8. தேக்கம் 9. குளம்.

ஹபரணை – தம்பன் கடவை

எலகெர – (ஈழக்கரை)

கட்டுகர – (கட்டுக்கரை)

கட்டமுன – கட்டுமுனை

மேற்கூறப்பட்டவற்றில் இருந்து ஆதி மொழியாக தமிழ் இருந்தது என்பது புலனாகிறது. அதனுடன் இழு மொழி சொற்களும் கலந்து சிங்கள மொழி தோற்றம் பெற்றிருக்கிறது என்பதே உண்மையாகும்.

பேராசிரியர்
பொன் சக்திவேல்

# சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 6.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | |
| 6.59 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | நிகழ்ச்சி ஆரம்பம் |
| 7.00 | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | சக்தி செய்திகள் | அன்பு மடல் |
| 7.05 | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | அன்பு மடல்/பாடல்கள் 7.20 | காலைக்கதிர் |
| 7.30 | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | சங்கீதமேடை | காலைக்கதிர் |
| 8.00 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்டி சுட்டி | சிறுவர் நேரம் |
| 8.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | கிட்ஸ் மூவி | சிறுவர் நேரம் |
| 9.00 | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | குட்டி சுட்டி | ஸ்டார் சமையல் |
| 9.30 | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | குட்டி சுட்டி | அரட்டை அரங்கம் |
| 10.00 | பெப்சி உங்கள் சாய்ஸ் | தில்லானா தில்லானா | பாட்டுக்குப் பாட்டு | நம்மநேரம் | கொண்டாட்டம் | களம் | சப்த ஸ்வரங்கள் |
| 10.30 | நெஞ்சில் நின்ற ராகங்கள் | சுகமான ராகங்கள் | ஆடலும் பாடலும் | இனிய கீதங்கள் | இசைத் தென்றல் | திரைவானம் | டொப் 10 மூவி |
| 11.00 | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மறக்க முடியுமா | கோல்டன் மொமன்ஸ் ஒப் கிரிகெட் |
| 11.30 | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | சினி சொய்ஸ் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.00 | நட்சத்திரம் | சுப்பர் சீன்ஸ் | திரை விமர்சனம் | மீண்டும் சிரிப்பு | பிரபலன்கள் ரசித்தவை | ரிலாக்ஸ் டைம் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.30 | செய்திகள்(எம்.ரீவி) | செய்திகள்(எம்.ரீவி) | செய்திகள்(எம்.ரீவி) | செய்திகள்(எம்.ரீவி) | செய்திகள்(எம்.ரீவி) | ரிலாக்ஸ் டைம் | ஸ்டார்ஸ்பெஷல் |
| 1.00 | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | வீக் எண்ட் மேட்னி | வீக் எண்ட் மேட்னி |
| 1.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | மங்கை | வீக் எண்ட் மேட்னி | வீக் எண்ட் மேட்னி |
| 2.00 | (றொமான்ஸ்) | (அக்சன்) | (கொமடி) | (கிளசிக்) | மங்கை | வீக் எண்ட் மேட்னி | வீக் எண்ட் மேட்னி |
| 2.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் எண்ட் மேட்னி | வீக் எண்ட் மேட்னி |
| 3.00 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் எண்ட் மேட்னி | வீக் எண்ட் மேட்னி |
| 3.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் எண்ட் மேட்னி | வீக் எண்ட் மேட்னி |
| 4.00 | டிஸ்னி வேல்ட் | டிஸ்னி வேல்ட் | கில்லி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | விக்கிரமாதித்தன் | ஜீ பூம்பா |
| 4.30 | கார்ட்டூன் நிகழ்ச்சி | கி–மேன் | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டும் | சக்தி மேட்னி | விக்கிரமாதித்தன் | ஒப்போடு |
| 5.00 | கொண்டாட்டம் | சினி சொய்ஸ் | ஸ்டார் ஸ்பெஷல் | சுப்பர் சீன்ஸ் | என்றும் கலாட்டா | கொமடி நிகழ்ச்சி | வேலன் |
| 5.30 | இசைத்தென்றல் | இசைத்தென்றல் | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | இப்படிக்கு நீங்கள் அன்பு மடல் 5.45 | அன்பு மடல் 5.45 |
| 6.00 | களம் | இளைய கானம் | ஒப்போடு | பாடல்கள் | கோல்டன் மொமன்ஸ் ஒப் கிரிகெட் | TO BE CONFIRMED | மின்னல் |
| 6.30 | குங்குமம் | குங்குமம் | குங்குமம் | குங்குமம் | குங்குமம் | TO BE CONFIRMED | மின்னல் |
| 7.00 | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | அலைய்ஸ் | '24'' |
| 7.30 | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | (அக்சன் சீரியல்) | அக்சன் சீரியல் |
| 8.00 | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் |
| 8.30 | சித்தி | சித்தி | சித்தி | சித்தி | சித்தி | ருத்ர வீணை | இளைய கானம் |

# ஐந்தால் வந்த இனிய அவஸ்தை



அமெரிக்காவின் டென்சி மாநிலத்தில் உள்ள நோக்சிவில்லி நகரைச் சேர்ந்த தம்பதியர் வில்லியம் வான் டோல் - ஷானோன்.

நிறை மாத கர்ப்பிணியாக இருந்த ஷானோனுக்கு அண்மையில் ஒரே பிரசவத்தில் 5 குழந்தைகள் பிறந்தன.

அமெரிக்காவில் ஒரே பிரசவத்தில் 5 குழந்தைகள் அபூர்வம் என்பதால் ஷானோனை அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் எல்லாம் ஆவலோடு வந்து பார்த்துவிட்டுச் செல்கிறார்கள். ஷானோனுக்கும் 5 குழந்தைகள் என்பது ஜாக்பொட் அடித்த மாதிரித்தான் இருக்கிறது.

ஆனாலும், குழந்தைகளுக்கு பால் கொடுக்கும் போதுதான் சிக்கல். எல்லாக் குழந்தைகளுக்கும் அவரால் சரிசமமாக தாய்ப்பால் கொடுக்க முடியவில்லை.

பெரும்பாலும் புட்டிப்பால்தான் கொடுக்கிறார்.

இந்தக் குழந்தைகளை காரில் வெளியே எடுத்துப் போகும் போது அதை விடப் பிரச்சினை. இதனால் காரின் பின் இருக்கையை நிரந்தரமாகவே நீளமாக்கி விட்டார்கள். குழந்தைகளை வரிசையாக தள்ளு வண்டியில் உட்கார வைத்து மிகுந்த எச்சரிக்கையுடன் காருக்குள் ஏற்றுகிறார்கள். ஆம் ஐந்து பெற்றதால் வந்த இனிய அவஸ்தை இது.

# ஞாபகம் வருகிறதே ஞாபகம் வருகிறதே



ஞாபக மறதி மனிதர்களுக்கு பொதுவானது. எவ்வளவு தான் பார்த்தோம், கேட்டோம் என்றாலும் சற்று நேரத்துக்கு முன்பு நடந்தது கூட மறந்து போய்விடுகிறது. இந்த ஞாபக மறதியைப் போக்குவதற்காக இங்கிலாந்தைச் சேர்ந்த ஜோசப் ஹிட்லர் மற்றும் ஜெர்மனியைச் சேர்ந்த ஜெரார்ட் சாஜெரெர் ஆகிய இருவரும் நவீன கண்ணாடி ஒன்றை உருவாக்கியிருக்கிறார்கள்.

இந்தக் கண்ணாடியை அணிந்து கொண்டால், நாம் பார்த்தது, கேட்டது அனைத்தும் கண்ணாடியுடன் இணைந்த நவீன மின்னணு சாதனத்தில் பதிவாகி விடும். மேலும் நாம் விரும்பினால் பார்க்கிற ஒவ்வொரு காட்சிக்கும் தனித்தனி பெயர் கொடுத்து பதிவு செய்து வைத்துக் கொள்ளும் வசதியும் இதில் இருக்கிறது.

இந்தச் சாதனம் தொழிற்சாலைகளில் பணிபுரிவோருக்கு மிகுந்த பயனுள்ளதாக இருக்கும் என்று இளம் விஞ்ஞானிகளான ஜோசப் ஹிட்லர், ஜெரார்ட் சாஜெரெர் ஆகிய இருவரும் கூறுகின்றனர்.

இச் சாதனத்தை அடுத்த ஆண்டு வர்த்தக ரீதியில் விற்பனைக்கு கொண்டு வரவும் இவர்கள் முடிவு செய்துள்ளனர்.

## ஆண்டொன்று ஆகியதே எங்கள் தெய்வமே!



அன்னை மடியில் 07 - 07 - 1933

ஆண்டவன் அடியில் 28 - 05 - 2003

அமரர்

## வேலாயுதபிள்ளை பரமசிவம்

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய் இருந்து
அமரர் ஆகிவிட்ட எங்கள் அப்பாவே!
பாசம் நெஞ்சில் மோத தேடி ஓடிவந்த நேரம்
பாதி வழியில் எம்மைத் தவிக்கவிட்டுச் சென்றதேனோ?
ஆயிரம் நினைவுகள் எம்மைத்தொடும்
அனைத்தும் அழிந்து மறந்து போகும்
அப்பா உங்கள் நினைவு என்றும் எம்
உள்ளத்தில் நிலைத்து வாழும்!
ஆத்மாவின் ராகத்தில் ஆற்றொணா சோகத்தில்
அலைகடல் மீதிலிருந்து உங்கள்
ஆத்ம சாந்திக்காக வேண்டுகின்றோம்.

எதிர்வரும் 16.06.2004 புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ள முதலாம் ஆண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். மற்றும் அன்னாரின் இறுதிச் சடங்கில் பங்குபற்றி பற்பல வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவில் வாழும்:
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், சகோதரர்கள்,
பேரப்பிள்ளைகள், மைத்துனர்.
இல. 343ஆம் யூனிற்,
இராமநாதபுரம், கிளிநொச்சி.


WWW.WTRUK.COM

தாய் மண்ணே வணக்கம்........ தமிழ் மண்ணே வணக்கம்........

தாயகத்தில் இருந்து தரணி எங்கும் ஒலிக்கும் ஒரே வானொலி....

உலகத்தமிழர் வானொலி

World Tamilar Radio

24 Hours Online Radio

www.wtruk.com இணையத்தளத்தினூடாக

இலங்கைச் செய்திகளை உடனுக்குடன் வழங்கும் உங்கள் வானொலி






add hiwtr@hotmail.com in your MSN Messenger to request songs


??? Sneha Talk

Listen WTR

நடிகை, நடிகர்களின் Live Talk

WWW.WTRUK.COM

# உங்களாலும் முடியும்!




மேலே உள்ள அட்டவணையின் இடைவெளியில் வரவேண்டிய எழுத்துக்களைக் கண்டுபிடித்து உங்களால் எத்தனை சொற்களை எழுத முடியும்? (உதாரணம்: கமம், கடம், கனம், கசம்) உங்களால் கண்டுபிடிக்கப்படும் சொற்களை நீங்கள் ஓர் தபால் அட்டையில் எழுதி எமக்கு அனுப்பலாம். அதிகூடிய சொற்களை எழுதும் மூவருடைய பெயர் விபரங்கள் இச் சிறுவர் பகுதியில் பிரசுரிக்கப்படும். கடந்த வாரம் வெற்றி பெற்றோரது பெயர்: 1) வினோதராசா வினோதினி, வற்றாப்பளை. 2) சி.துஷ்யந்தன், தரம் 5, முகத்துவாரம் இந்து கல்லூரி. 3) எஸ். நீருஜா, புதுக்குடியிருப்பு. 4) க.வேணு, அளம்பில், முல்லைத்தீவு. 5) ஆதிரை தேவராசா, தரம் 5, மு/ மல்லாவி மத்திய மகா வித்தியாலயம்.

அனுப்ப வேண்டிய முகவரி:

"சிறுவர் பகுதி"
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

# விஞ்ஞானத் துளிகள்

01) பாலில் உள்ள புரதம் எது? கேசின்
02) சீனியில் உள்ள மூலகங்கள் எவை? காபன், ஐதரசன், ஒட்சிசன்
03) மிகவும் செயல்திறனுள்ள இயற்கையில் காணப்படும் மூலகம் எது? புளோரின்
04) அதிகளவு நைதரசன் கொண்ட செயற்கை உரம்? யூரியா 34%
05) அலுமினியத்தின் தாது பொருள் எது? பாக்ஸைட்
06) நீரில் அதிகம் கரையும் வாயு எது? அமோனியா
07) உப்புக்கலில் அடங்கிய மூலகங்கள் எவை? பொட்டாசியம், நைதரசன், ஒட்சிசன்
08) சிறந்த திரவம் என்று எதனை அழைப்பார்கள்? ஹீலியம் திரவம்
09) சோடா நீரின் விஞ்ஞானப் பெயர்? கார்பானிக் அமிலம்
10) அதிகளவு நீரில் கரையும் தன்மை கொண்டது யாது? சல்பர்டை ஆக்ஸைடு

*யே. பத்மவினோதினி, மு/புதுக்குடியிருப்பு ம. வித்.*

# முதன் முதலில்

1. ஆகாய விமானத்தைக் கண்டு பிடித்தவர்கள் யார்? ரைட் சகோதரர்கள்
2. சைக்கிள் டயரைக் கண்டுபிடித்தவர் யார்? ஜே.பி. டன்லப்
3. மோட்டார் காரைக் கண்டுபிடித்தவர் யார்? கார்ப்பென்ஸ்
4. உலகிலே மிகக் கூடுதலாக அணுப்பரிசோதனை செய்த நாடு எது? அமெரிக்கா
5. நீர்மூழ்கிக் கப்பலைக் கண்டுபிடித்தவர் யார்? புஷ்வெல்
6. ஹெலிக்கொப்டரைக் கண்டுபிடித்தவர் யார்? பிரிகட்
7. அச்சிடும் யந்திரத்தைக் கண்டுபிடித்தவர் யார்? ஜோன் கார்ட்டன் பேக்
8. தொலை நோக்கியைக் கண்டுபிடித்தவர் யார்? கலிலியோ கலிலி

*பு. உமா,*
*மு/அரசரத்தினம் வித்தியாலயம்*

# பெரியோர் பொன்மொழிகள்

- தேவைக்குப் போதுமான செல்வம் உன்னைச் சுமக்கும்
  தேவைக்கு அதிகமான செல்வம் உனக்குச் சுமையாகும் — ஓர் அறிஞர்
- ஒருவனுடைய மனம் தூய்மையாக இல்லாவிட்டால்
  பணமோ, வலிமையோ, அழகோ அவனுக்குப் பயன்படமாட்டது — அரிஸ்டோட்டில்
- குணத்தை விதையுங்கள், உங்கள் எதிர்காலம் உருவாகும் — போர்டுமேன்
- மேன்மையை நாடிச் செல்பவனுக்கு, சிறு குறைகள் உறுத்தாது — யொஷேன் லேவோட்டா
- மனோ சக்தியை வளர்த்தால், நமக்கு ஆயுத பலம் தேவையில்லை — மகாத்மாகாந்தி
- உடலுக்கு, உழைப்புப் போன்று உள்ளத்துக்குத் துன்பங்கள் பலத்தைத் தரும் — எமர்சன்
- புகழ்ச்சியை விடக் கண்டனம் ஆபத்து இல்லாதது — எமர்சன்
- மனநிறைவு கொண்ட மனிதன் எந்த நேரத்திலும் ஏழையாக இருப்பது இல்லை மனநிறைவு
  இல்லாதவன் எப்பொழுதும் பணக்காரனாக இருக்க முடியாது — ஜார்ஜ்எலியட்
- வீரம் உடலின் தன்மையல்ல; அது ஆன்மாவின் தன்மை — மகாத்மா காந்தி

*தாரிசீஸ் சூசைதாசன்,*
*செங்கலடி.*

# சிறார்களின் கைவண்ணம்



சி.முகிலன்,
வற்றாப்பளை, முல்லைத்தீவு.



க. சுராசமலர்,
கிராஞ்சியூர்.



ம.ஜெனோவான்,
புனித அந்தோனியார் கல்லூரி.





உ.கௌசிகா

# உண்மை கசக்கும்

ஒரு காட்டில் வாழும் மிருகங்களுக்கு இடையில் ஒரு நாள் யார் அழகானவர் என்ற போட்டி வந்தது.




ஒரு நாள் தமது அழகை நிரூபிக்க கண்ணாடி ஒன்று தேவை என்று யோசித்தார்கள். அனைவரும் கண்ணாடி தேடிப் பல திசைகளிலும் சென்றார்கள். அப்போது ஆந்தைக்கு முகம் பார்க்கும் கண்ணாடி ஒன்று கிடைத்தது. அக் கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்த ஆந்தைக்குக் கோபமாக வந்தது.

"சே! என்ன இது இந்தக் கண்ணாடி என் முகத்தை அவலட்சணமாகக் காட்டுகிறதே" என்று கோபமாகக் கத்தியது.

ஒரு நாள் அந்தக் கண்ணாடியை ஆத்திரத்துடன் உடைத்துக் கொண்டிருந்தது ஆந்தை. இதைப் பார்த்த குரங்கு, ஏன் இப்படிச் செய்கிறாய்? என்று ஆந்தையிடம் கேட்டது.

இந்தக் கண்ணாடி என் முகத்தை அசிங்கமாகக் காட்டுகிறது. அதனால்தான் உடைக்கிறேன். இந்தக் கண்ணாடி இல்லாதபோது நான் ரொம்ப அழகா இருந்திருக்கிறேன் தெரியுமா என்றது ஆந்தை.

குரங்கு இதற்குப் பதில் சொல்லாமல் தன் வழியில் சென்றது.

உண்மை சிலருக்கு கசப்பாகத்தான் இருக்கும்.

# முக்கிய ஆண்டுகள்

- 1986 சர்வதேச சமாதான ஆண்டு
- 1987 உலக வீடற்றோர் ஆண்டு
- 1991 உலக ஆசிரியர் ஆண்டு
- 1992 உலக விண்வெளி ஆண்டு
- 1993 உலக பழங்குடி மக்கள் ஆண்டு
- 1994 உலக குடும்ப நல ஆண்டு
- 1995 உலக சகிப்பு தன்மை ஆண்டு
- 1998 உலக மனித உரிமை ஆண்டு
- 1999 உலக முதியோர் ஆண்டு
- 2000 உலக சர்வதேச சமாதான ஆண்டு
- 2001 உள நலம் பேணல் ஆண்டு

*பி.காயத்திரி, மானிப்பாய்.*

# வழி காட்டுங்கள்



சிறுவன் ஒருவன் தனது செல்லப் பிராணியான நாய்க்குட்டி ஒன்றை தொலைத்து விட்டான். அந்த நாய்க்குட்டி ஓர் இடத்தில் இருப்பதை உங்களால் கண்டுகொள்ள முடிகின்றது அல்லவா. ஆகாவே சிறுவன் தனது நாய்க் குட்டியை பிடிக்கச் செல்வதற்கு அவனுக்கு உங்களது உதவிதேவை உதவுங்கள் பார்க்கலாம்

# உங்கள் திறமைக்கு ஏற்ற ஊதியம் கிடைக்கிறதா?

பொதுவாக எத்தனையோ பேர் வேலையில்லாமல் திண்டாடும் இக்காலத்தில் நாம் எதிர்பார்க்கும் சம்பளத்துடன் வேலை கிடைப்பது என்பது சாத்தியமே இல்லை என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் ஒவ்வொரு நிறுவனமும் திறமையான ஊழியருக்கு நல்ல சம்பளம் கொடுக்கின்றது என்பது தான் உண்மை. இதைவிடப் பெரிய உண்மை என்னவென்றால், ஆணுக்கு அதிக சம்பளமும், அதே வேலையைப் பார்க்கும் பெண்ணுக்கு குறைந்த சம்பளமும் சில நிறுவனங்கள் கொடுக்கின்றன. இதற்கு முக்கிய காரணம் பெண்கள் சிந்திக்கும் விதமும் அவர்களுடைய மனப்பான்மையும் தான் என்றே கூற வேண்டும்.



தங்கள் திறமையை மதிப்பிட்டு ஒரு தொகையை சம்பளமாக நிறுவனங்கள் முன்வைக்கின்றன என்று பெண்கள் நினைக்கின்றனர். எம் திறமைக்கு இவ்வளவு தான் சம்பளம் கிடைக்கும் என்ற தாழ்வு மனப்பான்மையும், இதற்கும் மேல் கேட்டால் வேலை கிடைக்காமல் போய்விடுமோ என்ற அச்சமும் குறைந்த சம்பளத்துக்கு அவர்கள் வேலை செய்யக் காரணமாக அமைகிறது. அதே நேரத்தில் ஆண்கள் இது பேரம் பேசுவதற்கு தங்களுக்குக் கிடைத்த முதல் வாய்ப்பு என்று கருதுகின்றனர். இந்த வித்தியாசமான மனப்பான்மையே பெண்களுக்குக் குறைவான சம்பளத்தைப் பெற்றுத்தருகிறது.

எனவே இந்த மனப்பான்மையை மாற்றி தங்களுக்குக் கிடைக்கவேண்டிய நியாயமான சம்பளத்தைப் பெற பெண்கள் முயல வேண்டும்.

எந்த ஒரு நேர்முகப் பரீட்சைக்குப் போக முன்னரும் அந்த நிறுவனத்தில் அதே வேலையில் உள்ளவர்களுக்கு என்ன சம்பளம் கிடைக்கிறது, மற்ற நிறுவனங்களில் என்ன சம்பளம் கிடைக்கிறது என்று ஆராய்ந்து தெரிந்துகொள்ளுங்கள். அத்துடன் இந்த வேலைக்கு உங்கள் தகுதி, அனுபவம் ஆகியவற்றையும் மனதில் வைத்துக் கொள்ளுங்கள். நிறுவனங்கள் முதலில் முன்வைக்கும் தொகை குறைவானதாக இருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை. அதனால் தன்னம்பிக்கையுடன் அதிகமான தொகையைக் கேளுங்கள்.

பல பெரிய நிறுவனங்களில் ஒவ்வொரு வேலைக்கும் ஒரு குறிப்பிட்ட சம்பளம் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கும். ஆனால் அவர்கள் அதே சம்பளத்தை தருவார்கள் என்று நம்ப வேண்டாம். சம்பளத்தைப்பற்றிய பேச்சு வார்த்தைகள் உங்கள் தன்னம்பிக்கை மற்றும் திறமையை ளெிப்படுத்தும். குறைவான சம்பளத்தை ஒத்துக்கொண்டால் உங்கள் மதிப்பை நீங்களே குறைத்துக் கொள்வதாகும். இந்த சம்பளத்துக்கு இவர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்று நிறுவனங்கள் நம்புவதாலேயே அவர்கள் ஒரு குறைவான தொகையை உங்கள் முன்வைக்கின்றனர்.

அது மட்டுமல்லாது எனக்கு அதிகப்படியான சம்பளம் வேண்டும் என்று கேட்டால் மட்டும் போதாது. அதை ஏன் அந்த நிறுவனம் தர வேண்டும் என்று அவர்களுக்கு எடுத்துக்கூற வேண்டும். இது ஆண்கள் மற்றும் பெண்களுக்கு சமமானது என்றாலும் பெண்கள் தங்களைப்பற்றிக்கூற விரும்புவதில்லை. அவ்வாறு கூறும் வகையில் எதுவும் செய்யவில்லை அல்லது இது தான் உங்கள் முதல் வேலை என்றால், வேலையில் உங்களுக்கு உள்ள ஆர்வத்தையும், திறமைகளையும் வளர்த்துக் கொள்ள உங்களுக்கு உள்ள விருப்பத்தையும் நிறுவனங்களுக்குப் புரிய வைப்பது மிகவும் முக்கியம்.

அதிகமான சம்பளம் வேண்டும் என்று கூறிவிட்டீர்கள். ஆனால் நிறுவனத்திடம் இப்போது வசதி இல்லை. உங்களுக்கு அனுபவம் போதவில்லை. இதைவிட குறைவான சம்பளத்துக்கு வேலையில் சேரக் காத்திருக்கும் நபர்கள் என்று பல காரணங்களால் உங்கள் கோரிக்கை சிலவேளைகளில் நிராகரிக்கப்படலாம். ஆனால் இதைவிட நல்ல வேலை உங்களுக்குக் கிடைக்கும் என நீங்கள் நம்பிக்கை வைத்திருந்தால், மன்னிக்கவும் என்னால் இந்த சம்பளத்துக்கு வேலை செய்ய முடியாது, என்று கூறிவிட்டு வந்துவிடுங்கள். இல்லை வேலை கிடைப்பது சிரமம் என்று கருதினால், உடனே ஒத்துக்கொள்ளாதீர்கள். நிறுவனத்துக்கு உங்கள் மேல் உள்ள மதிப்பு குறைந்துவிடும். அத்துடன் 3 அல்லது 6 மாதங்களுக்குப்பிறகு சம்பளத்தை அதிகரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தபின்பு வேலையில் சேர ஒப்புக்கொள்ளுங்கள்.

ஆம். எந்த வேலையையும் எம்மால் செய்ய முடியும் என்பதைப் பெண்கள் நிரூபித்துக்காண்பிக்கும் இக்காலத்தில் சம்பளம் என்பது மட்டும் ஒரு பிரச்சினையாக இருக்கக் கூடாதல்லவா? எனவே சகோதரிகளே உங்கள் தகுதிக்கேற்ற சம்பளம் பெற பின்நிற்காது தொழில் தேடுங்கள். வெற்றி உங்கள் கையில்!

# உகந்த நேரம் எது?



சிறந்த ஆரோக்கியத்துக்கு உடற்பயிற்சி ஒரு சிறந்த நிவாரணி என்பது பொதுவான கருத்து. ஆனால் இந்த உடற்பயிற்சி செய்வதற்கு ஏற்ற நேரம் எதுவென்று கேட்டால் சிலர் யோசிப்பது புரிகிறது. எனவே இன்று நாம் உடற்பயிற்சி செய்யும்போது பெண்கள் கவனிக்க வேண்டிய சில விஷயங்களைப்பற்றிப் பார்ப்போம்.

காலை நேரம் தான் உடற்பயிற்சிக்கு உகந்த நேரம். உடலின் அனைத்து பாகங்களுக்கும் உடற்பயிற்சி மிகவும் அவசியம். குறிப்பாக இதயம், நுரையீரல், தசைகள் வலுப்பெறும் வகையில் உங்களது உடற்பயிற்சி இருப்பது அவசியம்.

பயிற்சி நிலையங்களுக்குச் சென்று உடற்பயிற்சி செய்தால் மட்டும் முழுமையான பலன் கிடைக்கும் என்று நினைப்பது தவறு. வீட்டிலேயே முறையாக உடற்பயிற்சிகளைச் செய்யலாம்.

நீச்சல் மிகச்சிறந்த உடற்பயிற்சி. உடலில் உள்ள அத்தனை தசைகளும் நீச்சல் மூலம் வலுப்பெறுகின்றன.

உடற்பயிற்சியை சிலர் அவசர அவசரமாகச்செய்வார்கள். இதனால் அதிக பயன் கிடைக்காது. நிதானமான உடற்பயிற்சியினால் தான்பலன் அதிகம். இன்னும் சிலர் தீவிரமான உடற்பயிற்சியில் ஈடுபட்டு உடலை வருத்திக்கொள்வார்கள். இதுவும் கூடாது.

குறைந்த பட்சம் 30 நிமிடமும் அதிக பட்சம் 45 நிமிட நேரமும் உடற்பயிற்சி போதுமானது.

# சிசேரியன் எப்போது தேவைப்படும்...?

குழல் இனிது யாழ் இனிது என்பர் தம் மழலை சொற் கேளாதவர். குழந்தை துள்ளி விளையாடாத வீடு சுடுகாட்டுக்கு ஒப்பாகும் என்றெல்லாம் நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் ஒரு தாய் தன் முதல் குழந்தையைப் பெற்றெடுப்பதென்பது மறு ஜென்மம் எடுப்பது போல் என்பார்கள்.

இயல்பான பிரசவத்தில் கர்ப்பப்பை வாய் திறந்து குழந்தை வெளியே வருகிறது. அதில் சிக்கல் இருந்தால் சிசேரியன் கை கொடுக்கும். கர்ப்பிணியின் அடிவயிற்றை கீறி, கர்ப்பப்பையைகிழித்து, உள்ளே இருக்கும் குழந்தையை வெளியே எடுப்பது தான் சிசேரியன் முறை. தாய்,சேய் இருவரின் உயிரையும் காப்பாற்றுவதே இம்முறையின் அடிப்படை நோக்கம்.

தாயாகிற பெண்ணின் கூபக எலும்புக்கூடு குறுகி இருந்தால் குழந்தை வரும் பாதையும் குறுகிவிடும். அதனால் இயல்பான வழியில் குழந்தை வெளிவருவது சாத்தியம் இல்லாது போகும். அந்நிலையில் சிசேரியன் தான் தீர்வாக அமையும். குழந்தையின் தலை பெரிதாகவும், தாயின் கூபக எலும்பு குறுகியும் இருந்தால் அப்போதும் சிசேரியன் சிபார்சு செய்யப்படும். குட்டையான பெண்கள் தான் பெரும்பாலும் இப்பிரச்சினைக்கு உள்ளாகின்றனர்.

கர்ப்பப்பையின் அடிப்பாகத்தில் நஞ்சு இருந்தால் இயற்கையாகப் பிரசவத்தின் போது உதிரப்போக்கு அளவை மீறி தாய்—சேய் இருவரின் உயிருக்குமே ஆபத்தை உண்டாக்கலாம். அதனால் பிரச்சினைக்குத் தீர்வாக சிசேரியனைத்தான் நாட வேண்டியிருக்கும்.

பொதுவாக பிரசவத்தின் போது குழந்தையின் தலை தான் முதலில் வெளியே வரும். சில அசாதாரண நிலைகளில் குழந்தையின் கால் முதலில் வெளிவர ஆரம்பிக்கும். அப்போதும் பிரசவத்தை நல்ல விதமாக செய்து வைக்கவே மருத்துவர்கள் முயலுவார்கள். குழந்தையின் எடை அதிகமாக இருந்தாலோ, உடல் கனமாக இருந்தாலோ குழந்தை பிறப்புப் பாதையில் ஏதேனும் தடங்கல் ஏற்பட்டாலோ சுகப் பிரசவம் சாத்தியப்படாது. சிசேரியன் அவசியமாகிவிடும்.

பிரசவத்தின்போது குழந்தைக்கு எந்த விதத்திலாவது மூச்சுத்திணறல் ஏற்படுமானால் உடனடியாகக் குழந்தையை வெளியே எடுக்க சிசேரியன் தான்வழியாக அமையும்.



சுகப்பிரசவம் சிக்கலாகிவிட காரணங்கள் உண்டு. கர்ப்பப்பையில் குழந்தை குறுக்காக இருத்தல, சாய்ந்து இருத்தல், நச்சுக்கொடி முதலில் வருதல், கை முதலில் வருதல் போன்றவை இவற்றில் சில.

அடிக்கடி கருச்சிதைவான பெண்களுக்கு சுகப்பிரசவம் ஆவது கடினம். சிலருக்கு வயிற்றிலேயே குழந்தை இறந்து பிறந்திருக்கும். அத்தகையவர்களுக்கு முன்னதாகவே நாள் குறித்து சிசேரியன் செய்கிறார்கள்.

தாய்க்கு இரத்த அழுத்தம் அதிகமாகி, உடம்பு முழுவதும்வீங்கி இருந்தால் பிரசவத்தில் தாய்கு வலிப்பும் வரக்கூடும். அதனால் தாய், சேய் இருவர் உயிருக்கும் ஆபத்து நேரலாம். இதனைத் தடுக்க சிசேரியன் உகந்தது.

நீரிழிவு, இருதய நோய் உள்ள கர்ப்பிணிகளுக்கு சிசேரியனை மருத்துவர்கள் சிபார்சு செய்வார்கள்.

ஒருமுறை சிசேரியன் செய்துகொண்ட பெண் அடுத்த முறை சிசேரியன் மூலம் தான் குழந்தை பெற வேண்டும் என்பதில்லை. ஆனால் நீடித்த நோய் உபாதை உள்ளவர்களுக்கு இரண்டாவது முறையும் சிசேரியன் செய்யும்படி இருக்கும்.

இப்போதெல்லாம் மருத்துவர்கள் யாருக்கு சிசேரியன் தேவை என்பதை முன்கூட்டியே ஸ்கான் மூலம் கண்டறிந்து விடுகிறார்கள்.

சிசேரியன்செய்த தாய் குறைந்தது ஒன்றரை மாதம் ஓய்வில் இருக்க வேண்டும்.

அதன் பிறகு வீட்டிலும், அலுவலகத்திலும் வழக்கமாக செய்கிற வேலைகளை தொடரலாம்.

சிசேரியனுக்குப்பிறகு மூன்று ஆண்டுகள் கருவுறாமல் இருப்பது நல்லது.

ஒரு தாய்க்கு மூன்று முறைக்கு மேல் சிசேரியன் செய்வதில்லை.




# யாருக்கு எது அழகு?

சாந்துப்பொட்டு, குங்குமப்பொட்டு, ஸ்டிக்கர்பொட்டு... என பெண்களின் நெற்றியில் விதம் விதமான பொட்டுக்கள்... ஆனால் எல்லாப் பொட்டுக்களும் எல்லாப் பெண்களுக்கும் அழகைத் தருமா? இல்லை அல்லவா? எனவே இன்று எந்த வகையான முகம் உள்ளவர்களுக்கு எந்தவகையான பொட்டுஅழகாகஇருக்கும்என்று பார்ப்போமா?

கறுப்பு நிறப்பெண்களுக்கு சிவப்பு நிறச்சாந்து அல்லது குங்குமம் தான் அழகைத்தருமே தவிர ஸ்டிக்கர்பொட்டு அழகைத்தராது.

சிவந்த மேனி கொண்ட பெண்களுக்கு நிறமும், பொட்டும் எதுவானாலும் அழகு தான்.

குறுகிய நெற்றி கொண்ட பெண்கள் வட்டமாகப் பொட்டு வைத்துக்கொள்வதை விட மேல் நோக்கி இழுத்துப்பொட்டு வைப்பதே அழகு.

சற்று நீண்ட முக அமைப்புக்கொண்ட பெண்கள் வட்ட வடிவில் பொட்டோ, ஸ்டிக்கரோ வைத்துக்கொள்ளலாம்.

வட்ட வடிவ முகமும் பரந்த முகமும் கொண்ட பெண்கள் மத்தியில் பொட்டு வைத்து சுற்றிலும் சில புள்ளிகளை இடுவது, மேல் நோக்கி பொட்டிழுத்து, கீழே வைப்பது போன்ற அலங்கார பொட்டுகள் நன்றாக இருக்கும்.

பொதுவாக நெற்றியின் மத்தியில் குங்குமம் வைத்திருப்பது லட்சுமி கடாட்சம் என்பது பழைய காலத்துக் கணிப்பு. அவர்களின் முக அழகு மற்றவர்களை வசீகரிப்பதுடன் மகிழ்ச்சியையும் ஏற்படுத்துகிறது.

என்ன சகோதரிகளே, நீங்கள் இப்போது கண்ணாடி முன்பா...? அல்லது பொட்டுக்கடையின் முன்பா...?

****

## சொற்சிலம்பம் போட்டி இல.112

சொற்சிலம்பம் 112 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்க வேண்டிய கடைசித் தினம் ஜூன் 21ஆம் திகதி ஆகும். விடைகள் ஜூன் 28ஆம் திகதி சுடர்ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஜூலை 05ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.110க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடுதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும் இரண்டாவது பரிசாக 150 ரூபாவும் மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராய்ச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

## சொற்சிலம்பம் போட்டி இல.112

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | ■ | 5 | 6 |
| 7 | | | | ■ | 8 | | |
| 9 | | ■ | 10 | 11 | | | ■ |
| | ■ | 12 | | | ■ | 13 | 14 |
| ■ | 15 | | | ■ | 16 | | |
| 17 | | | ■ | 18 | | ■ | |
| 19 | | ■ | 20 | | | 21 | |
| 22 | | | | ■ | 23 | | ■ |

## சொற்சிலம்பம் போட்டி இல.110

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ப | 2 தி | 3 ப | க் | 4 தி | ■ | 5 சா | 6 வி |
| 7 தி | ட் | டி | ■ | 8 சை | 9 கை | ■ | ய |
| 10 க | டு | ப் | 11 பு | ■ | 12 ய | ம | ன் |
| ம் | ■ | 13 ப | தி | னா | று | ■ | னா |
| ■ | 14 அ | றி | ய | ■ | 15 நி | 16 தி | ■ |
| 17 உ | ற | வு | ■ | 18 த | லை | ப் | 19 பு |
| 20 த | வி | ■ | 21 வி | டை | ■ | 22 பி | ன் |
| 23 வி | டு | த | லை | ■ | 24 வ | லி | மை |

## சொற்சிலம்பம் போட்டி இல.112

**இடமிருந்து வலம்**

1. நித்தியம்.
5. வேகம்.
7. வெட்டு.
8. கிருபை/சுபாவ குணம் ஒன்பதில் ஒன்று.
9. மறைவில் தீட்டப்படுவது.
10. மனதில் ஏற்படும் குழப்பம். பெரும்பாலும் தவறு செய்ய மனதைத்தூண்டுவது இதுதான்.
12. நெருப்பு.
13. சாப்பிடு.
15. ஏழு நாட்கள்.
16. ஒதுக்கப்பட்டவர்களை இந்தியாவில் இப்படி அழைப்பர்.
17. புகழ்/மரியாதை/பெருமை.
18. சரஸ்வதி இதற்குரியவள்.
19. பெருக்கல் குறி/ புள்ளடி.
20. பலரகம்.
22. நிழல்.
23. திக்கு.

**மேலிருந்து கீழ்**

1. திறனோடும், வீரத்தோடும் புரியப்படும் செயல்.
2. மரவேலை செய்வோர்,சிற்பி, கொல்லன் போன்றோரின் ஆயுதம்.
3. வாழ்.
4. காட்சிக்கு வருதல்.
5. தற்கொலைத் தாக்குதல் நடத்துபவன்.
6. தமிழில் இது இரண்டு. ஒன்று உயர்ந்தது;உயர்வு குறைந்தது.
8. சேர்.
11. அரைக்கும் உடல் உறுப்பு.
12. கை.
14. உள்ளத்து உணர்வு/ மன எண்ணம்.
15. குரங்கு.
16. எழுதப்பட்டது/விதிக்கப்பட்டது.
17. கோவலனின் காதல் பரத்தை
18. தூக்கத்தில் காணுவது.
20. நாங்கள்.
21. உடல் இயக்கத்துக்கு அவசியமானது.

## சொற்சிலம்பம்-109 பரிசு பெறுவோர்.

1. எஸ். அரசரத்தினம்,
ராஜா மருந்துக்கடை,மெயின் வீதி,
சுன்னாகம்.
2. ம.சுவர்னா,
451/2 திருஞானசம்பந்தர் வீதி,
திருகோணமலை.
3. ரீ. செல்வா,
296, டைக் வீதி,
திருமலை.

## பாராட்டுப் பெறுவோர்

1. செல்வி.இ.மலர்விழி,
மேபீல்ட் லேன்,
கொழும்பு– 13.
2. மா.மயூரதன்,
3ஆம் வட்டாரம்,
முள்ளியவளை.
3. வே.சரஸ்வதி,
அம்பன்,
குடத்தனை.
4. ம.சத்தியபாலன்,
மயிலணி,
சுன்னாகம்.
5. க.நடராசா,
ஸ்ரீ அகம்,
ஆரையம்பதி–02.
6. திருமதி.ப.முத்துராஜா,
52,பாத்திமா வீதி
திருகோணமலை.
7. திருமதி. எம்.ஆர்.பாலேந்திரா,
இல.49, உடங்காவ,
கொச்சிக்கடை.
8. ந.திவாகர ரூபன்,
கறுவாக்கேணி,
வாழைச்சேனை.
9. இ.கஜானன்,
விவேகானந்தா வீதி,
கொழும்பு–06.
10. எஸ்.மோகனதாஸ்,
கடல் மீன் ரயர் வேக்ஸ்,
முறிகண்டி.

# நடந்தது என்ன?.......

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஆளும் கட்சி உறுப்பினர்கள் தாங்கிப் பிடித்துக் கொண்டனர். அப்போது தான் விடயம் புரிந்தது. பிடிக்கக்கூடாத இடத்தில் பிடித்து கசக்கிவிட்டனராம். இதனால் துடித்துப்போன போன தேரர் அலறிவிட்டார். இப்போது சிறுநீர் கழிக்க முடியாமல் அவதிப்படுகின்றார். டியூப் மூலமாகவே சிறுநீர் வெளியேற்றப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட இரண்டு பிக்குமார்களும் உடனடியாக ஸ்ரீ ஜெயவர்த்தனபுர வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டனர்.

படைக்கள சேவிதரும் உதவியாளர்களும் உறுப்பினர்களுக்குமிடையிலான மோதலைத்தடுக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். சபை அல்லோலகல்லோலப்பட்டுக்கொண்டிருந்தது.

### செங்கோலுடன் ஓடிய பிரதி அமைச்சர்

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய பிரதி அமைச்சர் ஒருவர் சபையின் புனித அடையாளச் சின்னமான செங்கோலைத் தூக்கிக்கொண்டு சபையை விட்டு வெளியே ஓடிவிட்டார். இதனால் சபைக்குள் கொந்தளிப்பு பன்மடங்கு அதிகரித்தது.

சபையில் அமைதியை ஏற்படுத்த சபாநாயகர் சபையைப் பல முறை ஒத்திவைத்தார். செங்கோலை உரிய இடத்தில் கொண்டு வந்து வைக்கும்படி சபாநாயகர் உத்தரவிட்ட போதும் ஆளும் கட்சியினருக்கு அது செவிடன் காதில் ஊதிய சங்கொலி போலானது.

அப்போது சபையில் இருந்த சபை முதல்வரோ ஏனைய சிரேஷ்ட அமைச்சர்களோ தமது சகாக்களை சரியான முறையில் கட்டுப்படுத்தத் தவறிவிட்டனர்.

சபை சந்தை போன்று மாறியது. உறுப்பினர்கள் அங்கும் இங்கும் ஓடித்திரிந்தனர். ஒருவர் மீது ஒருவர் தூஷண வார்த்தைகளை வீசினர். மதகுருமார் மானபங்கப்படுத்தப்பட்டனர்.

செங்கோலை மீண்டும் சபைக்குள் கொண்டு வர படைக்கள சேவிதரும் பிரதி படைக்கள சேவிதரும் எடுத்த முயற்சிகள் பயன்தரவில்லை.

ஆளும் கட்சியினரின் லொபிக்குள் செங்கோலை வைத்துக்கொண்டு நாற்பதுக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் காவல் இருந்தனர். செங்கோலை பறிக்க முயற்சித்தால் அதை தரையில் அடித்து சின்னாபின்னமாக்கி விடுவோம் என அச்சுறுத்தினர்.

இதனால் சபை அமர்வுகள் காலை 10.35 மணி முதல் பிற்பகல் 2.30 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டிருந்தன.

சபாநாயகரின் பெரும் முயற்சியால் கட்சித் தலைவர்கள் கூட்டம் பல தடவைகள் கூட்டப்பட்டும் உடனடியாக எந்த முடிவும் காணப்படவில்லை.

எல்லோரும் முரட்டுத்தனமாகப் பேசினார்களே தவிர பிரச்சினையைத் தீர்க்க முன்வரவில்லை. ஒருபடியாக சபை மீண்டும் 2.30 மணிக்கு கூடியபோது படைக்கள சேவிதர், ஆளும் கட்சியினால் கடத்திச் செல்லப்பட்ட செங்கோலை அவர்களிடம் இருந்து விடுவித்து வந்து சபா பீடத்தில் வைத்தார்.

சபை மீண்டும் கூடியபோது சபை முதல்வர் நாடாளுமன்றத்தை ஜூலை 20ஆம் திகதி வரை ஒத்திவைக்கும்படி சபாநாயகரைக் கேட்டுக்கொண்டார். அதன்படி சபை ஒத்திவைக்கப்பட்டது.

புதிய அரசின் நாடாளுமன்றம் மூன்று தடவைகள் கூடியும் உருப்படியாக எதையும் செய்யவில்லை. நாடாளுமன்ற நிர்வாகத்தில் அதி உயர் பதவிகளான சபாநாயகர், பிரதி சபாநாயகர் குழுக்களின் பிரதித் தலைவர் என மூன்று பதவிகளுக்கும் தெரிவு நடத்தி வைத்ததைத் தவிர வேறு எதுவும் நடைபெறவில்லை.

இந்த பதின்மூன்றாவது நாடாளுமன்றம் கூடிய மூன்று தடவைகளிலும் சபை அமர்வுகளை விட சபை அமர்வுகள் நிறுத்தப்பட்ட நேரங்களே அதிகம்.

சட்டமாக்கும் சபையில் காட்டுத்தர்பார் நடக்கிறது. காடையர்களின் கூடாரமாக அது மாறிவருகிறது. அடிதடிகளும் அட்டகாசங்களும் தலைவிரித்தாடுகின்றன. முஷ்டியை முறுக்கிக்கொண்டு சபைக்குள் மோதுகின்றனர். குருமார்களைப் பந்தாடுகின்றனர். இப்போதைய நாடாளுமன்றம் அரசியல் சாக்கடையாகிவிட்டது. நாடாளுமன்றம் நாற்றம் அடிக்கிறது.

# இன்சுலின் போட்டுக்கொள்ள புதிய கருவி

நீரிழிவு வியாதியை ஒரு பணக்கார வியாதி என்று சொல்வதுண்டு. அது உண்மையோ, பொய்யோ. நீரிழிவு வியாதிக்குத் தேவையான மருந்துகள், மாத்திரைகள், ஊசிகள், உபகரணங்கள் ஆகியவற்றின் விலைகள் கண்டிப்பாக பணக்காரர்கள் மட்டுமே வாங்குகிற மாதிரித்தான் இருக்கின்றன.



அமெரிக்காவில் இன்சுலின் மருந்தை போட்டுக்கொள்ள ஒரு புதிய கருவியை கண்டுபிடித்திருக்கிறார்கள். 'இன்சுலின் பம்ப்' என்று சொல்லக் கூடிய இந்தக் கருவி ஒரு சிறிய செல்போன் அளவுதான் இருக்கிறது. ரிமோட் கொண்ட்ரோல் வசதியுடன் உள்ள இந்தக் கருவியில் சுமார் மூன்று நாட்களுக்குத் தேவையான இன்சுலின் மருந்து நிரப்பப்பட்டுள்ளது.

இந்தக் கருவியிலிருந்து ஒரு மெல்லிய குழாய் வழியாக 'இன்சுலின்' மருந்து, நமது தேவைக்கேற்றவாறு, கொஞ்சம் கொஞ்சமாக, சீராக, ஒரு நாள் முழுக்க உடம்புக்குள் போய்கொண்டே இருக்கும். நாம் அதிகமாக சாப்பிட்டால் 'இன்சுலின்' மருந்து உடம்புக்குள் அதிகமாக போகும்படியும், குறைவாகச் சாப்பிட்டால் இன்சுலின் மருந்து குறைவாகப் போகும்படியும் செய்வதற்கு இந்த கருவியில் அனைத்து வசதிகளும் இருக்கின்றன. இந்தியாவில் சுமார் 40 அல்லது 50 பேர் மட்டுமே இதை உபயோகித்துக் கொண்டிருக்கின்றனர். இதன் விலை இந்தியா ரூபாவில் சுமார் ஒன்றரை லட்சம் அளவில் இருக்கும்.

மூன்று வேளையும் இன்சுலின் போட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு இந்தக் கருவி மிகவும் உபயோகமாக இருக்கும்.

நீரிழிவு வியாதியை கட்டுப்படுத்த இதுவரை பல விதமான மருந்துகள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன.

ஆனால், இந்த வியாதியை குணப்படுத்த, அறவே இல்லாமல் ஆக்க இதுவரை மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. பல நாடுகளில் பலவிதமான ஆராய்ச்சிகள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. குணப்படுத்துவதற்கு யார் முதலில் மருந்தைக் கண்டுபிடிக்கின்றார்களோ, அவர்களுக்குத்தான் அடுத்த நோபல் பரிசு காத்திருக்கிறது.

Mega
கொம்ப்யூட்டர் உயர் கல்விக்கான
புலமைப்பரிசில் பரீட்சை
20-06-2004 ஞாயிறு
இலவச பரீட்சை அனுமதிகளை
ASIAN COMPUTERS
அனைத்து பயிற்சி நிலையங்களிலும்
பெற்றுக்கொள்ளலாம்.
COLOMBO
கொட்டாஞ்சேனை 4613225 மட்டக்குளி 4619997
வெள்ளவத்தை 2587099 வத்தளை 4819400

# தொடரும் குற்றச் செயல்களை கட்டுப்படுத்துவதில் வவுனியா பொலிஸார் தீவிரம்

வவுனியா பிரதேசத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த ஆயுத முனைக் கொள்ளைகள், வீடுடைப்பு, கொலைகள், வாகனக்கடத்தல்கள் போன்ற குற்றச்செயல்களில் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களை வவுனியா பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றார்கள்.

இந்த கொள்ளைகளை யார் எப்படிச் செய்கிறார்கள் என விசாரித்ததில் இவர்களின் பின்னணியில் பலமான சக்திகள் தொழிற்படுவது தெரியவந்திருக்கின்றது.

கச்சிதமாக மேற்கொள்ளப்பட்டு வந்த இந்த சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் பெரிய பின்னணியைக் கொண்டவர்களாக இருப்பதும் தெரியவந்துள்ளது. இந்தச் சந்தேக நபர்களினால் கொள்ளையடிக்கப்பட்ட, 30 லட்சம் ரூபாபெறுமதியான தங்க நகைகள், ரொக்கப்பணம், வாகனங்கள் என்பவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இவர்களால் கொள்ளையிடப்பட்ட நகை, பணம், வாகனம் என்பவற்றின் பெறுமதி சுமார் 80 லட்சமாக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

பெரும் பரபரப்பையும், பொதுமக்கள் மத்தியில் அச்சத்தையும், பாதுகாப்பற்ற உணர்வையும் ஏற்படுத்தியுள்ள இந்தக் கொள்ளைகள், கொலைச் சம்பவங்களில் சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்து அவர்களுக்கு எதிராக இது வரையில் 35 வழக்குகளைப் பொலிஸார் வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளனர்.

வவுனியா பிரதேச மக்களின் நிம்மதியைக் குலைத்து சட்டம் ஒழுங்கிற்குப் பெரும் சவாலாக இருத்துவந்த இக்குற்றச் செயல்களைக் கட்டுப்பாட்டினுள் கொண்டுவந்துள்ளமைக்காக வவுனியா மாவட்ட நீதிபதி எம். இளஞ்செழியன் பொலிஸாரைப் பாராட்டியுள்ளார்.

இந்த நடவடிக்கைகளுக்காக பொலிஸார் சில விசேட நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் தொடக்கம், இந்தவருடம் மார்ச் மாதம் வரை வவுனியா நகரிலும், அதனைச் சூழ்ந்த கிராமப்பகுதிகளிலும் பகலிலும், இரவிலுமாக தொடர்ச்சியாக 60 வீடுடைப்புக் கொள்ளைகள், 6 துப்பாக்கி முனையிலான கொள்ளைகள் உட்பட கொலைச்சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன.

இவை குறித்த முறைப்பாடுகளும் வவுனியா பொலிஸில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அதிகரித்த இக்குற்றச் செயல்களைக் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்காக வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் வ்வுனியா மாவட்ட நீதிமன்றத்தில், அரசாங்க அதிபர் மற்றும் பொலிஸ் உயரதிகாரிகளை உள்ளடக்கிய விழிப்புக் குழுக்களை அமைத்திருந்தார். பொதுமக்கள் விழிப்புக் குழுக்களும் அமைக்கப்பட்டன. விழிப்புக் குழுக்களில் இணைந்து குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு பொதுமக்கள் தமது ஒத்துழைப்பையும் வழங்கியிருந்தார்கள்.

எனினும் சில இடங்களில் அமைக்கப்பட்ட விழிப்புக்குழுக்கள் அவற்றுக்குள் நிலவிய கருத்து முரண்பாடுகள் காரணமாக சீரான செயற்பாட்டினை கொண்டிருக்கவில்லை.

விழிப்புக்குழுக்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கு சில இடங்களில் பொலிஸார் பூரண ஒத்துழைப்பை வழங்கவில்லை. பெரும்பாலும், இணைந்து செயற்பட்ட இடங்களில் இந்த பிரச்சினை நிலவியமை குறிப்பிடத்தக்கது.

எனினும் பொலிஸார் சில நடவடிக்கைகளை மேற்கொண்டு இருந்தனர். வவுனியா பிரதிப் பொலிஸ் மா அதிபரின் பணிப்பின் பேரில், வவுனியா பொலிஸ் தலைமையக இன்ஸ்பெக்டர் விஜேநாயக்கவின் ஒத்துழைப்புடன் வன்னிப் பிராந்திய குற்றத்தடுப்பு விசேட பொலிஸ் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் இன்ஸ்பெக்டர் நேசராஜா தலைமையிலான பொலிஸ் குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டார்கள்.

இதனையடுத்து, 15 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டார்கள். இவர்களில் 6 பேர் அதி தீவிர குற்றச் செயல்களில் சம்பந்தப்பட்டவர்கள் என்பது பொலிஸ் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

நிலைமை இவ்வாறிருக்க, வவுனியா திருநாவற்குளம் பகுதியில் ஓர் ஆசிரியரின் வீட்டில் திருடப்பட்ட கையடக்க தொலைபேசி கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து இச்சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

களவாடப்பட்ட கையடக்க தொலைபேசியைத் திருடிய குழுவைச் சேர்ந்தவர் நீண்ட நாட்களாக அதனை பாவித்து வந்துள்ளதும் தெரியவந்துள்ளது.

களவாடப்பட்ட தொலை பேசியின் இலக்கத்துடன் போனில் தொடர்பு கொண்டபோது அத்தொலைபேசி திருடப்பட்டு, வாகனங்களை வாடகைக்கு அமர்த்தும் பிரபலமான உணவகமொன்றின் உரிமையாளருக்கு அத்விற்கப்பட்டதும் தெரியவந்தது.

உரிமையாளருடன் நேரடியாக பொலிஸார் தொடர்பு கொண்டு விசாரித்ததில் தொலை பேசியைக் களவாடி அவருக்கு விற்ற நபர்களை பொலிஸாரால் கைது செய்ய முடிந்தது.

அந்த நபரில் இருந்து தான் இக்கொள்ளைக் கோஷ்டியைச் சேர்ந்தவர்களை கைது செய்யக் கூடியதாக இருந்தது.

கொள்ளையில் ஈடுபட்டவர்கள் வவுனியாவின் நகர்ப் பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் இரவு தங்கி தாம் களவு எடுத்த பொருட்களை பகிர்ந்து கொண்டபின் அதிகாலையில் எழுந்து தமது சொந்த இடங்களுக்கு இதிரும்பிச் செல்வதும் தெரியவந்துள்ளது.

இக்குழுவில் முக்கியமான ஒருவர் சிவபுரம் பகுதியில் வீடு ஒன்றை வாடகைக்கு எடுத்து அங்கு தங்கி இருந்தாராம்.

இங்குதான் அவரால் களவாடப்பட்ட பொருட்களின் ஒரு தொகுதியினை அவர் பதுக்கி வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. பக்கத்து வீடுகளில் உள்ள மக்கள் தம்மீது சந்தேகப்படக் கூடாது என்பதற்காக இயக்க உறுப்பினர் போன்று இவர் செயற்பட்டுவந்தார் என்று கூறப்படுகின்றது. (இவர் ஒரு முன்னாள் இயக்க உறுப்பினர் என்பதும் குறிப்பிடத்தக்கது)

இவரைக்கைது செய்து விசாரணை செய்த போது களவாடப்பட்ட நகைகள், விற்பனை செய்யப்பட்ட, மற்றும் அடகு வைக்கப்பட்ட இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டன, ரொக்கப் பணம் உட்பட மோட்டார் சைக்கிள்கள், உழவு இயந்திரம் என்பவற்றையும் பொலிஸார் கைப்பற்றினர்.

தேடப்பட்ட சந்தேக நபர்களில் மூவர் யாழ்ப்பாணத்தில், யாழ்.பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு வவுனியாவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளனர். இவர்களில் இருவர் யாழ்.நீதிமன்றங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள 10 வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்களென பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

இதுவரையில், பொலிஸார் நடத்தியுள்ள விசாரணைகளின் மூலம் முக்கிய குற்றச் செயல்களில் சம்பந்தப்பட்ட 3 சந்தேக நபர்கள் யாழ்.குடாநாட்டில் இராணுவத்தினருடன் இணைந்து, அவர்களுக்கு உதவியாளர்களாக செயற்பட்டு வந்தமையும் தெரிய வந்துள்ளது. இத்தகவல் நீதி மன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதையடுத்து அவர்கள் மூவரையும் கைது செய்து வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் பிடிவிறாந்து பிறப்பித்துள்ளார்.

-மகாமுனி-

## இவ்வார 'ராசிபலன்' 14-06-2004, 20-06-2004

பொ. சந்திரன்

# ராசி பலன்

### இவ் வார கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | ராகு | சுக்கிரன் | புதன் சூரியன் சனி |
| | செவ்வாய் புனர்பூசம் குரு<br>சுக்கிரன் மிருகசீரிடம் செவ்<br>புதன் திருவாதிரை ராகு | | செவ் |
| | குரு பூரம் சுக்<br>சூரியன் மிருக செவ்<br>சனி திருவாதிரை ராகு | | குரு |
| | | கேது | |

வைகாசி 32 முதல் ஆனி6வரை

சந்திரன் மேடம் முதல் மிதுனம் வரை

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

லக்கின அதிபன் செவ்வாய் நாலாம் வீட்டில் இருப்பது நல்லது. ஆனால் நீசமாக இருப்பது நல்லதல்ல. இருப்பினும் குருவின் நட்சத்திரசாரத்தில் இருப்பது ராசியில் ராகு இருப்பது நல்லதல்ல. குரு ராசியைப் பார்ப்பது நல்லது. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. (2,7) உரிய சுக்கிரன் ஆட்சியாக இருப்பதால் கையில் பணம் இருக்கும். திருமண வாய்ப்பு உண்டு. 7இல் கேது இருப்பதால் குடும்ப அமைதி கெட வாய்ப்புள்ளது. 4இல் செவ்வாய் இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். தொழில் ஸ்தானத்துக்கு உரிய சனி மூன்றில் இருப்பதால் தொழில்துறை முன்னேறும். மூன்றாம் வீட்டில் சனி வசியவன். குருவின் இருப்பும் நல்ல பலனைக் கொடுக்கும்.

**இடபம்: கார்த்திகை 2,3,4. ரோகிணி, மிருகசீரிடம் 1,2.**

ராசிக்குரிய சுக்கிரன் ராசியில் ஆட்சியாக இருப்பது நல்ல பலனைக் கொடுக்கும். மேலும் செவ்வாயின் சாரத்தில் இருப்பதும் பரவாயில்லை. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. (2,5) உரிய புதன் இரண்டில் ஆட்சியாக இருப்பதால் கையில் பணம் இருக்கும். குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். நாலுக்குரிய சுக்கிரன் இரண்டில் இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். (7,12) உரிய செவ்வாய் மூன்றில் நீசமாக இருப்பதால் திருமண வாய்ப்புப் பாதிக்கலாம். தொழிலுக்குரிய சனி இரண்டில் இருப்பதால் தொழில்துறை முன்னேறும். ராகு கேதுக்குட்பட்டு எல்லாக்கிரகங்களும் இருப்பது குறை. நாலில் உள்ள குருவாலும் பெரிதாக நன்மை இருக்காது. சூரியன், புதன் இரண்டில் இணைவு. மிக நல்ல பலனைத்தரும்.

**மிதுனம்: மிருகசீரிடம்3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1,4) உரிய புதன் ராசியில் ஆட்சியாக இருப்பது விசேஷம். ஆனால் ராகுவின் சாரத்தில் இருப்பது சிறப்பில்லை. சூரியன் ராசியில் இருப்பது நல்லது. சனி ராசியில் இருப்பது நல்லதல்ல. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. கல்வியில் ஆர்வம் இருக்கும். பக்க உதவிகள் கிடைக்கும். இரண்டில் செவ்வாய் இருப்பதால் கையில் பணம் இருக்காது. புதன் நாலாம் ஆதிபத்தியம் பெறுவதால் வீடு, வாகனம் லாபம் தரும். (7,10) உரிய குரு மூன்றில் இருப்பதால் திருமண வாய்ப்புப் பாதிக்கலாம். தொழில்துறையில் பின்னடைவு வர வாய்ப்புள்ளது. (7,10) வீடுகளைச்சனி பார்ப்பது குறை. குடும்பத்தில் அமைதி இருக்காது. ராசிநாதன் புதன் ராசியில் பொறுப்பாக இருப்பதால் எந்தப்பிரச்சினையையும் சமாளிக்கலாம்.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

ராசிக்குரிய சந்திரன் மேடம் முதல் மிதுனம் வரை அதாவது பத்து முதல் பன்னிரண்டாம் வீடு வரை சஞ்சரிப்பதால் வாரத்தில் ஆரம்பமும் மத்திய பகுதியிலும் நன்மையான பலனை எதிர்பார்க்கலாம். எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. இரண்டுக்குரிய சூரியன் 12இல் மறைவதால் கையில் பணம் இருக்காது. நாலுக்குரிய சுக்கிரன் ஆட்சியாக இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். (7,8) உரிய சனி 12இல் இருப்பதால் திருமண வாய்ப்புப் பாதிக்கலாம். இருப்பினும் இரண்டில் குரு இருப்பதால் பலனை மாற்றியமைக்க குருவால் முடியும். தொழிலுக்குரிய செவ்வாய் ராசியில் நீசமாக இருப்பதால் தொழில் துறையில் பிரச்சினைகள் தோன்றக்கூடும். குரு, சுக்கிரன் நல்ல அமைப்பில் இருப்பதால் நல்ல பலனை எதிர்பார்க்கலாம்.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1.**

ராசிநாதன் சூரியன் 11இல் இருப்பது விசேஷம். மேலும் செவ்வாயின் சாரத்தில் இருப்பது நல்லதல்ல. உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். பிரயாண வாய்ப்பு உண்டு. பக்க உதவிகள் கிடைக்கும். (2,11) உரிய புதன் ஆட்சியாக இருப்பதால் கையில் பணம் இருக்கும். நண்பர்கள் உதவுவர். மூத்த சகோதரருக்கும் நல்லது. (4,9) உரிய செவ்வாய் 12இல் நீசமாக இருப்பது வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். பெற்றோருக்கு நல்லதல்ல. 7க்குரிய சனி 11இல் இருப்பதால் திருமண வாய்ப்பு உண்டு. ஆனால் குரு ராசியில் இருப்பதால் பலன் சொல்ல முடியாது. 10இல் சுக்கிரன் ஆட்சியாக இருப்பதால் தொழில்துறை முன்னேறும். குரு ராசியில் இருப்பதால் பெரிதாக நன்மையில்லை.

**கன்னி: உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

(1,10) உரிய புதன் பத்தில் ஆட்சியாக இருப்பது விசேஷம். ஆனால் ராகுவின் நட்சத்திர சாரத்தில் இருப்பது நல்லதல்ல. சூரியன் அங்கு இருப்பது நல்லது. சனி அங்கு இருப்பது நல்லதல்ல. ஆனால் 10ஆம் இடத்தில் சனி சில நன்மைகளையும் செய்யக்கூடும். உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். (2,9) உரிய சுக்கிரன் ஆட்சியாக இருப்பதால் கையில் பணம் இருக்கும். பிதாவுக்கு நல்லது. அதிஷ்டம் உண்டு. ஆலய வழிபாடு அமையும். (4,7) உரிய குரு 12இல் இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். திருமண வாய்ப்புப் பாதிக்கலாம். 7ஆம் வீட்டை சனி பார்ப்பதால் குடும்பத்தில் அமைதி இருக்காது. 10ஆம் வீடு பலம் பெறுவதால் தொழில்துறை முன்னேறும்.

**துலாம்: சித்திரை3,4 சுவாதி, விசாகம்1,2,3.**

ராசிக்குரிய சுக்கிரன் தனது இன்னுமொரு வீட்டில் ஆட்சியாக இருப்பது சிறப்புடையது. மேலும் செவ்வாயின் நட்சத்திரத்தில் இருப்பதும் பரவாயில்லை. ராசியில் கேது இருப்பது கூடாது. மன அமைதி பாதிப்புறலாம். எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. (2,7) உரிய செவ்வாய் 10இல் இருப்பது நல்லது. ஆனால் நீசமாக இருப்பது நல்லதல்ல. மேலும் 7இல் ராகு இருப்பதால் திருமண வாய்ப்புப் பாதிக்கலாம். கையில் பணம் இருக்காது. 11இல் குரு இருப்பதால் திருமண முயற்சி கைகூடவும் இடமுண்டு. (4,5) உரிய சனி 9இல் இருப்பதால் 9ஆம் இடம் சனிக்கு அவ்வளவு நல்லதல்ல. ஆனால் தீமை இல்லை. வீடு, வாகனம் லாபம் தரும். 10ஆம் இடம் பலவீனமாக இருப்பதால் தொழில் தறை பாதிக்கக்கூடும்.

**விருச்சிகம்: விசாகம் 4,அனுசம், கேட்டை**

ராசிக்குரிய செவ்வாய் 9இல் நீசம். மேலும் குருவின் நட்சத்திர சாரத்தில் இருப்பது நல்லது. சுக்கிரன் ராசியைப் பார்ப்பது விசேஷம். எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. (2,5) உரிய குரு 10இல் இருப்பது விசேஷம். (சிலர் கருத்துமாறுபடவும் கூடும்) கையில் பணம் இருக்கும். குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். (3,4) உரிய சனி 8இல் அதாவது அட்டமத்துச்சனி வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். இளைய சகோதரருக்கு நல்லதல்ல. 7க்குரிய சுக்கிரன் ஆட்சியாக இருப்பதால் திருமண வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். அந்நியோன்னியம் இருக்கும். 10இல் குரு இருப்பதால் தொழில்துறை முன்னேறும். தொழில் பாதுகாப்பு உண்டு.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**

(1,4) உரிய குரு 9 இல் இருப்பது விசேஷம் மேலும் சுக்கிரன் நட்சத்திர சாரத்தில் இருப்பது சிறப்புடையது. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும் உடல் ஆரோக்கியம் உண்டு. தெய்வீக தரிசனம் கிடைக்கும். (2,3) உரிய சனி 7ல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். குரு நாலாம் அதி பத்தியம் பெறுவதால் வீடு, வாகனம் லாபம் தரும். (7,10) உரிய புதன் ஆட்சியாக இருப்பதால் திருமணவாய்ப்பு உண்டு. தொழில் துறை முன்னேறும். 7ல் சனி இருப்பதால் குடும்பத்தில் அமைதி இருக்காது. ராசியை சனி பார்ப்பது பின்னடைவைத்தரும் ஆனால் குரு பார்ப்பதால் தோஷ நிவர்த்தியுண்டு. நாலாம் வீட்டை சனி பார்ப்பதால் தாய்க்கு நல்லதல்ல.

**மகரம்: உத்தராடம்2,3,4, திருவோணம், அவிட்டம்1,2**

(1,2) உரிய சனி 6ல் இருப்பது நல்லது ஆனால் ராகுவின் சாரத்தில் இருப்பது நல்லதல்ல. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். கையில் பணம் இருக்காது. உடல் ஆரோக்கியம் உண்டு. (4,11) உரிய செவ்வாய் 7இல் ஆனால் நீசம் பெறுவதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மூத்த சகோதரர்களுக்கு நல்லதல்ல நண்பர்களுக்கு கூடாது. 7ல் செவ்வாய் இருப்பதால் குரு 8ல் மறைவதாலும் திருமணவாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. தொழிலுக்குரிய சுக்கிரன் ஆட்சியாக இருப்பதால் தொழில்துறை முன்னேறும். பக்க உதவிகள் கிடைக்கும். குரு மறைவது குறை நீசச் செவ்வாய் ராசியைப் பார்ப்பது குறை தான் ராசிக்க இருமருங்கிலும் நான்கு வீடுகள் வெற்றிடமாக இருப்பது குறை.

**கும்பம்: அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**

(1,12) உரிய சனி 5ல் இருப்பது அதாவது நஞ்சச் சனி என்பவர் ஐஞ்சச் சனியை. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சி தாமதமாகலாம். (2,11) உரிய குரு 7ல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். மூத்த சகோதரருக்கு நல்லது. நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். (4,9) உரிய சுக்கிரன் ஆட்சியாக இருப்பதால் வீடு, வாகனலாபம் தரும். பெற்றோருக்கு நல்லது தெய்வீக அருள் கிட்டும் அதிஷ்டம் இருக்கும். 7ல் குரு இருப்பதால் திருமணவாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். தொழிலுக்குரிய செவ்வாய் 6ல் நீசமாக இருப்பதால் தொழில்துறை பாதிக்கக் கூடும். தொழில் ஸ்தானத்தை சுக்கிரன் பார்ப்பதால் ஆறுதல் உண்டு. பக்க உதவிகள் கிடைக்கும்.

**மீனம்: பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி.**

(1,10) உரிய குரு 6ல் இருப்பது நல்லதல்ல. சுக்கிரன் சாரத்தில் இருப்பது ஓர் மன ஆறுதல் உண்டு. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம் எடுத்த முயற்சி தடைப்படலாம் (2,9) உரிய செவ்வாய் 5ல் நீசமாக இருப்பதால் கையில் பணம் இருக்காது பிதாவுக்கு நல்லதல்ல (4,7) உரிய புதன் ஆட்சியாக இருப்பதால் வீடு,வாகனலாபம் தரும். திருமணவாய்ப்பு உண்டு. குரு தொழிலுக்கும் காரகம் பெறுவதால் தொழில் துறை பாதிக்கலாம் மேலும் சனி பார்ப்பதுகூடாது குருவைச் சனி பார்ப்பதும் கூடாது. தொழில் ஸ்தானத்தை சுக்கிரன்,குரு பார்ப்பதால் ஓர் மன ஆறுதல் உண்டு. அவதானமாக இருப்பின் தீய பலனைச் சமாளிக்கலாம். பிரார்த்தனை நன்மை செய்யும்.

# இந்திய கிரிக்கெட் வீரர்களுடன் மனைவியரும் படையெடுப்பு



இந்திய கிரிக்கெட் வீரர்கள் தங்களுடைய பங்களிப்பை மிகவும் சிறப்பாகச் செய்து வருகிறார்கள். அதற்குக் காரணம் அவர்களின் மனைவியர் வழங்கும் உற்சாகம்தான் ஆகும். பாகிஸ்தானில் நடைபெற்ற கிரிக்கெட் விளையாட்டுக்களின்போது முரளி கார்த்திக்கின் மனைவி செவெற்றா, அஜித் அகர்காரின் மனைவி பாத்திமா, ராகுல் டிராவிட்டின் மனைவி விஜிதா, லக்ஷ்மணின் மனைவி சைலஜா ஆகியோர் தாமும் கூடவே சென்று தமது தலைவர்களை உற்சாகப்படுத்தினர்.

# ரோமாபுரி வான்வெளியில் சீறிப்பாயும் விமானங்கள்

இத்தாலிய தேசிய தினம் அண்மையில் கொண்டாடப்பட்டபோது மிகவும் குதூகலமான முறையில் விழாக்கள் இடம்பெற்றன. அவற்றில் இத்தாலிய விமானப்படையினரின் ஜெட் விமானங்கள் வானத்தில் சீறிப்பாய்ந்த காட்சி மிகவும் ரம்யமாக இருந்தது. விமானங்கள் பல வர்ணங்களில் புகைகளைக் கக்கியவாறே ரோமாபுரி வான்வெளியில் பறந்த காட்சி இது.



மசாலா மிக்ஸ்

# கால்வாய் நிறுவுவதற்கு ரோமானியர் எதிர்ப்பு



ருமேனிய விவசாயிகள் கடல் வளத்தையும் பெருமளவில் நம்பியிருக்கிறார்கள். அவர்களுக்கு பல விதத்திலும் நீர்வளத்தை அள்ளித்தருவது டனூபே ஆற்றுப்படுகை ஆகும். அங்கு கால்வாய் ஒன்றை நிறுவுவதற்கு உக்ரோனியா தீர்மானித்திருக்கிறது. அவ்வாறு கால்வாய் நிறுவப்பட்டால் தமக்கு நீர்வளம் கிடைப்பது அரிதாகிவிடும் என்று ருமேனியர் கருதுகின்றார்கள்.

# ஐஸ் ஹொக்கி வீரர்கள் சறுக்க மாட்டார்கள்




ஹொக்கி விளையாட்டில் இந்தியா முன்னர் முன்னணியில் இருந்தது. தற்போது ஐரோப்பிய நாடுகளும் தமது திறமையைக் காட்டுகின்றன. அங்கு ஐஸ்மீது சறுக்கி விளையாடும் ஹொக்கி விளையாட்டுக்குத்தான் வரவேற்பு. ரோமில் நடைபெற்ற ஒரு ஐஸ் ஹொக்கிப்போட்டியின் போது எதிர் அணிவீரர்கள் முட்டி மோதும் காட்சி இது.

# ஹவாய் எரிமலை கக்கும் தீ மழை



ஹவாய்த் தீவிலுள்ள கினொவ்வியா எரிமலை தீயைக் கக்கினால் அண்டை அயலில் வாழ்பவர்கள் கதி கலங்கிப்போய் விடுவார்கள். எரிமலையிலிருந்து வெளியேறும் தீ மழை பல மைல் தூரம் பரவி சூழல் அனர்த்தங்களையும் ஏற்படுத்திவிடும். கினொவ்வியா எரிமலையின் தீ மழை பசுபிக் கடலில் கலந்து பரபரப்பு ஏற்படுத்துவதைப் படத்தில் காணலாம்.

# ஒளிந்திருக்கும் முகம் எது?




ஜூன் 01, சுடர் ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் நடிகை சாயாசிங். சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்களில் ஐந்து அதிஷ்டசாலிகளின் பெயர், விவரம் வருமாறு:

*1. கு.சிவாஜி, சீனக்குடா, திருகோணமலை. 2.கு.பூநவகி, சாவகச்சேரி வடக்கு, 3.எஸ்.வாணி, அல்லாரை வடக்கு, மீசாலை. 4. எ.கயல்விழி, மாங்குளம். 5. ஜி.லோரன்ஸ், நல்லூரடி, யாழ்ப்பாணம்.*

சரியான விடையைக் கண்டுபிடித்து எழுதி அனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுக்கள். அதிர்ஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

இந்தவாரம் ஒளிந்திருக்கும் இந்த உருவம் யாருடையது?

அண்மையில் பிறந்த நாளைக் கொண்டாடிய மிகப் பிரபலமான இசையமைப்பாளர் இவர். இவரது வாரிசுகளும் இசைத்துறையில் பிரபலம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.



இந்த முகத்திற்குரிய வரைக் கண்டுபிடித்து, அவர் பெயரைத தபால் அட்டையில் எழுதி கீழ்வரும் எங்கள் புதிய முகவரிககு அனுப்பி வைக்கவும்.

'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.



கொத்மலைக்கு வெளிச்சம்
நுவரெலியா மாவட்டத்திற்கு புதிய பலம்!
எங்கள் ஊரவர்!
எம்மில் ஒருவர்!!
புத்திஜீவி!!!
பட்டயக் கணக்காளர்
J.M.U.B. ஜெயசேகர
(B.Sc.(Mgt), FMAAT, ACA, APFA)

16

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி
மத்திய மாகாணசபைத் தேர்தல் 2004

மாகாண சபைத் தேர்தல் 2004 - கொழும்பு மாவட்டம்
நேர்மையான சேவைக்கு
எங்கள் தெரிவு !



ரவி
46

By: Rajendra

உணர்வுகளை மதிப்போம்! உரிமைகளை வெல்வோம்!

திருகோணமலையில்... சுடர் ஒளி உதயன் விளம்பர பணிமனை

எமது பத்திரிகைகளில் உங்களது விளம்பரங்களை பிரசுரிக்க விரும்பினால் அவற்றினை திருகோணமலை 39, அருணகிரி வீதியில் அமைந்திருக்கும் எமது விளம்பர பணிமனையில் கையளிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு:-

விளம்பர முகாமையாளர்
"உதயன்" "சுடர் ஒளி" விளம்பரப்பிரிவு
85, ஜெயந்த் மல்லி மாவத்தை, கொழும்பு - 14.
011 4734401 - 3, 011 2399666 - 70

திருகோணமலையில் தொடர்புகளுக்கான
தொலைபேசி இலக்கம் 026 2220783, 026 2221670



உலக பிரசித்திபெற்ற
ஷெரி
பேக்கரி உபகரணங்கள்

SHERRY

வடகிழக்கு வாடிக்கையாளர்களின்
வசதி கருதி
குருநாகலையில்...



93, கொழும்பு வீதி,
பொத்துஹெர,
குருநாகலை.
தொ.பே: 0372237744/2237755

தலைமைக் காரியாலயம்:
735/பீ, கொழும்பு வீதி, தலங்கம வடக்கு, மாலபே.
தொ.பே: 0112788933, 2789782,
5516886/7, 0712753850
பக்ஸ்: 0114407443 E.mail: sherry@wow.lk

EXPOAIR எக்ஸ்போ எயார்
your friend in the skies... வானில் உங்கள் நண்பன்...

வாழ் பயணத்தின் போது
றோள்ஸ் றொய்ஸ் இயந்திரத்தின் சொகுசுப் பயணத்தினை
அனுபவியுங்கள்!

யாழ்ப்பாணம்: 021 2223891, 021 2226297, 077 2349999
கொழும்பு: 011 4512666 (3 Lines) Fax: 011 4514700
வெள்ளவத்தை: 011 2360290, 2360291
e-mail: jaffna@expoavi.com, reservations@expoavi.com

இலங்கையின் நம்பத்தகுந்ததும் முன்னணியுமான யாழ் — கொழும்பு விமான சேவை

**Computer Courses**
MS Office XP
Computer Studies
Web Designing
Java Programming
Desktop Publishing
Graphic Designing
Visual Basic Programming
M. Jeyanthini
J.A. Elvis
FREE 20-65% discount

**Multimedia**
Digital Video Editing ~~Rs. 30,000~~ Rs. 10,000
(Adobe Premiere)
INDIAN LECTURER
Digital Compositing
(Adobe After Effects)
Digital Audio Editing
(Sound Forge)
3D Studio Max 6.0
(Modeling, Special Effects, Animation)
FREE 65% discount
K.Kamalathasan (B.com)

**English**
- Spoken English
- TOFEL - IELTS

For......
Students,
School Leavers,
Officers,
Housewives,
and Others

**Hardware**
IT Fundamentals, Configurations, Multimedia Installations, Assembling, Repairing & Servicing, Hard Disk, CD Drive, Fundamentals of Electronics, Anti Virus Cards, Operating Systems & Software Installations, Electric Circuit Diagrams, I/O
S.Nicholas (B.sc)

Computer Seles & Services
PHOTO COPY Rs.1/75
CD WRITING 30/=
DUPLO Printing

IT SOLUTION
4651/2, Galle Road, Wellawatte. ☎2551148(2 Lines) 2551548
நிபுணர்களிடம் மட்டுமே பயிலுங்கள்


இப்பத்திரிகை கொழும்பு — 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2004ஜுன் 14 ஆம் திகதி வெளியிடப்பட்டது.